வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆவணி திங்கள் 8-ம் நாள் (23—8—1964) ஞாயிற்றுக்கிழமை ரபியுல். ஆகிர் 14 | இதழ் 13




# ‘முளையிலேயே கிள்ளி எறியுங்கள்’

## பத்திரிகையாளர் வருகைக்குத் தடை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 9வது மாநில மாநாட்டில் மூன்று முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்று 9ம் திகதி சுதந்திரன் இதழில்செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. செய்தி வெளியானதைத் தொடர்ந்து, அம்மூன்று பிரமுகர்களும் யாரென்பதைத் தெரிந்து கொள்ளப் பல முயற்சிகள் நடைபெற்றன. பொது மக்கள் அப்பிரமுகர்களின் பெயரைத் தெரிந்து கொள்வதற்கு பெரிதும் ஆவல் கொண்டிருந்தனர். ஆனால், அப்பிரமுகர்களை வரவிடாது இலங்கை அரசு தடுத்து விட்டது.

தமிழரசுக் கட்சி மாநாட்டின் கலாச்சார மாநாட்டில் உரை நிகழ்த்த வரும் வண்ணம் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிலருக்கு அழைப்பனுப்பப் பட்டிருந்தது. கட்சியின் அழைப்பை ஏற்று மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்து திரு. மு. கருணாநிதி, திரு. சி. பி. சிற்றரசு, திரு. கண்ணதாசன், திரு. ம. செங்குட்டுவன் ஆகியோர் பதில் எழுதியிருந்தார்கள். இதைத் தொடர்ந்து அவர்களுக்குப் பிரயாண வசதிகள் செய்து கொடுப்பதில் தமிழரசார் முயற்சி யெடுத்தார்கள். ஆனால் இலங்கை அரசு அவர்களுக்கு விசா வழங்க மறுத்து விட்டது.

இது பற்றி பிரதமமந்திரி திணைக்களத்தின் மான்யம் மீது நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: ‘எமது கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளத் தென்னிந்தியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள்-நால்வருக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் தி. மு. க. வினர் என்பதற்காக அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.’ என்றார்.

சபை முதல்வர் சி. பி. டி. சில்வா, ‘தி. மு. க. இந்தியாவில் தடை செய்யப்பட்ட கட்சி என்பதால் அனுமதி மறுக்கப்பட்டது’ என்று கூறினார்.

திரு. நவரத்தினம் தி.மு.க. தடைசெய்யப்பட்ட கட்சியல்லவென்றும் அடுத்த பொதுத் தேர்தலில் சென்னை மாநில ஆட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐந்தாண்டுகளில் சிங்களம் போதனு மொழியாகிவிடும்

## மாநாட்டுத் தலைமையுரையில் எஸ். ஜே. வி. விடுக்கும் வேண்டுகோள்

சிங்கள மொழியைத் தமிழ்பேசும் பிள்ளைகளின் தொண்டைக்குள் திணிக்கச்செய்யும் முயற்சிகளை எடுத்துக்கூறி, அந்த முயற்சிகளை முறியடிக்காமல் விட்டால் இன்னும் ஐந்தாண்டுகளில் இலங்கை முழுவதும் சிங்களம் போதனு மொழியாகிவிடும் என்று திருமலையில் ஆரம்பமாகியுள்ள தமிழரசுக்கட்சியின் 9-வது மாநில மாநாட்டுக்குத் தலைமை தாங்கி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் நிகழ்த்தவிருக்கும் தலைமைப் பேருரையில் எச்சரிக்கை செய்வாரென்றும், அந்த முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும்படி தமிழ் பேசும் மக்களுக்கு நேரடியாக வேண்டுகோள் விடுப்பாரென்றும் அறியப்படுகிறது.

தமது தலைமையுரையில் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாற்றையும் தமிழரசுக்கட்சி நடத்திய உரிமைப் போராட்டங்களையும் தலைவர் விரிவாக விளக்கிக் கூறுவாரென்றும், ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சியினர் தேர்தலில் பெற்ற வெற்றிகளால் மண்டைவீங்கி, தன்னிலைகெட்டு தனது வாக்குறுதிகளையெல்லாம் எப்படிக் காற்றில் பறக்கவிட்டு, வெட்கம் கெட்ட முறையில் காட்டிக்கொடுத்தார்களென்பதைத் தெளிவுபடுத்துவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மொழித் தகராறுக்கும் இந் நாட்டிலேற்பட்ட இனவாரித் தொல்லைகள் எல்லாவற்றிற்கும் பிரஜாவுரிமைச் சட்டங்களே மூலகாரணமாக அமைந்தன என்று அவர் தம் உரையில் குறிப்பிடுவாரென்றும் தெரிகிறது.

தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களின் தலைமைப் பேருரையில் கீழ்க்காணும் விஷயங்களும் அடங்கியிருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது:—

‘இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அபகரிக்கும் திட்டம் மறைந்த டி. எஸ். சேனநாயக்காவின் காலத்தில்—1948ம் ஆண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. இலங்கையிலுள்ள சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கிவிட்டு, சிங்கள மக்கள் மட்டும் பெருமளவில் சகல வசதிகளையும் பெற்று வாழ வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்தினுலேயே மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமை முதலியன பிடுங்கப்பட்டன.

பிரிட்டிஷ் பிரஜைகள் யாவருக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்ற நியதி இருந்தும்கூட, மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பிடுங்குவதற்கேற்றவகையில் சட்டங்களை ஆக்குவதற்கு அப்போதைய அரசு பின் நிற்க வில்லை. அவர்களின் உரிமைகளைப் பறிப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் பலத்தைப் பாராளுமன்றத்துள்ளும் புறமும் முறியடித்து விட்டது.

### 1956ல்

தந்திரோபாயம் நிரம்பிய முறையில் தொகுதிகளைப் பிரிப்பதன் மூலம் பாராளுமன்றத்தில் சிங்களப் பிரதிநிதிகளின் தொகையையும் கணிசமான அளவு கூட்டவும் செய்தனர். இதன் காரணமாக 1956ம் ஆண்டு யூன் 5ம் திகதி சிங்களம் மட்டும் மசோதாவை மேல் அதிகமான வாக்குகள் பெற்று பண்டாரநாயக்கா நிறைவேற்றவும் முடிந்தது.

டி. எஸ். சேனநாயக்காவின் திட்டங்களைப் பின்னணியாக வைத்துக் கொண்டே, தொடர்ந்து வந்த சர்வ சிங்கள அரசுகள் தமிழ் பேசும் இனத்துக்குத் தீங்குகள் இளைக்கத்தொடங்கின. இவற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்க ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்க ஆயத்தங்கள் செய்தபோது பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசாருடன் ஒப்பந்தம் செய்ய ஓடி வந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கழக மாநாடு

### செப். 19-ல் நடைபெறும்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாடு செப்டம்பர் திங்கள் 19-ம்திகதி அட்டனில் நடைபெறவிருக்கிறது. மாநாட்டு ஆரம்ப வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக கழகப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

ஐம்பதினுயிரத்திற்குமேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கழகத்தின் முதல் மாநாடு சிறந்தமுறையில் அட்டன் நகரில் செப்டம்பர் 19-ம் திகதி ஆரம்பமாகிறது. மலைவாழ் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்திற்கு கழகத்தின் முதல் மாநாடு விடிவெள்ளியாக அமையும் என்று அரசியல் பிரமுகர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## கனவுகளை நனவாக்க...



தியாகி நடராசன்

கொடியேற்றும் போதினிலே
குண்டுக்குப் பலியாகிக்
குருதி பீற

அடியற்ற மரம்போல
அன்றங்கு வீழ்ந்திறந்த
அரிய வீரன்

நடராசன் கனவுகளை
நனவாக்கத் துடிக்கின்ற
நல்ல பண்பால்,

திடமோடு களமேகத்
திருமலையைக் கேட்கின்றதெம்
தீரர் கூட்டம்.

—எருவில் மூர்த்தி


## அடுத்த இதழ்

இராசவரோதயம் இதழாக மலரும்.

# தமிழரசுக்கட்சி 9-வது மாநாட்டுச் சிறப்பு மலர்

# தமிழர் வீரம்

பழம் தமிழர் வீர வாழ்வை எடுத்தியம்பும் புறத்திணை நூல்களிலிருந்தும், ஐம்பெரும் காப்பியங்களிலொன்றுன சிலப்பதிகாரத்திலிருந்தும் சில அங்கங்களை எடுத்து விளக்கியுள்ளார் கட்டுரையாசிரியர். சோம்பிக் கிடக்கும் தமிழினத்திற்கு பழந்தமிழர் வீரவரலாறு புத்துணர்ச்சியளிக்கட்டும். 'தமிழ்ப் பெண்களின் வீரமே தமிழினத்தைக் காக்கும் ஆற்றல் படைத்தது' என்ற ஆசிரியரின் கூற்று அறம்காக்கும் பெண்டிரை தமிழ்காக்க அழைக்கின்றது.



**கலாநிதி சு. வித்தியானந்தன்**
**எம். ஏ., பி. எச். டி.**

சேரன் செங்குட்டுவன் வட இமயத்தில் பத்தினிக்குக் கல் எடுக்கப் புறப்படுகின்றுன். அதனேடு வடநாட்டுப் படையெடுப்பும் ஒன்றுகின்றது. இப்படையெடுப்பு எதற்கு?வடவாரிய மன்னர் உடனுறைந்திருக்கும்போது 'தென் தமிழ் நாடாளும் வேந்தர் இமயத்திலே விற்புலிகயல் பொறித்த நாள், எம்போலும் மன்னர் ஈங்கு இல்லைப்போலும்' என்று தமிழர் வீரம் பழிக்கப்பட்டது. இதனை அறிந்தான் செங்குட்டுவன். அப்பழிச்சொல் சேரனைச் சுட்டியதன்று; சோழனைச் சுட்டியதன்று; பாண்டியனைச் சுட்டியதன்று. தமிழரசார் மூவரையும்—தமிழர் யாவரையும்—சுட்டி நிலைப்பதாகும். அப்பழிச் சொல்லை அழிப்பது தமிழர் கடன். இதனை உணர்ந்த செங்குட்டுவன் 'இது எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சி தரூஉம்' என்று கொதித்துச் சூளுரைக்கின்றுன்.

அப்போது அரசன் அருகில் இருந்தவர்கள், 'அரசே! வடநாட்டரசர் பாண்டியரையும் சோழரையும் பழித்தனரேயன்றி, இமயம் வரை [illegible] நின்னை இகழ்ந்தோரல்லர்' என்று தடுத்தனர். என்னைப் புகழ்ந்தாற் போதும், எனது இனத்தை இகழ்ந்தாற் கவலையில்லை எனக் கருதியவனல்லன் செங்குட்டுவன். தமிழருக்கு ஒரு பழி வரின் அதனைத் துடைப்பது தமிழர் ஒவ்வொருவர் கடமையாகும்; தமிழினத்துக்கு வந்த பழி ஒவ்வொரு தமிழனுக்கும் வந்த பழி என்று எண்ணியவன் சேரவரசன். எனவே, தமிழின் ஆற்றலைத் தெரியாது தமிழைப் பழித்த கனக விசயரைக் கண்ணகிக்குச் சிலையமைக்கத் தலைமேற் கல் சுமக்கச் செய்தான் சேரன் செங்குட்டுவன். தமிழ் மொழியையும் தமிழினத்தையும் இகழ்ந்தோரை முறியடித்த தமிழ் வேந்தனின் வீரம் இது.

### அன்றைய தமிழ்ப் பெண்

ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையென்றுல், அது ஆண்பிள்ளையானுலும் சரி, பெண்பிள்ளையானுலும் சரி, பெற்றவர்களுக்கு அருமைப் பிள்ளைதானே?பழங்காலத்து வீரக்குடி ஒன்று. போர் என்று சொன்னுல் அடுப்பங்கரையில் ஒளிக்கும் கோழைகள் அல்லர் அந்த வீட்டு ஆடவர்கள். பரம்பரை பரம்பரையாக இந்தக் குடியிலே பிறந்தவர்கள் யாவருமே போரிலே தம் வீரத்தைக் காட்டினவர்கள். இப்போது இவ்வீட்டில் ஒரு பெண் இருக்கிருள். ஒரு சின்னக் குழந்தையும் இருக்கிருன். ஆண் என்று சொல்வதற்கு அவன்ஒருவன் தான் உண்டு. அன்று ஒரு நாள் எழுந்தபோரில் இவள் தமையன் யானையை வெட்டி வீழ்த்திப் போர்க் களத்தில் இறந்தான்; நேற்று உண்டாயிற்று ஒரு போர்; அதில் இவள் கணவன் வீரத்துடன் மாண்டான். இன்றைக்கும் போர்ப்பறை கேட்கின்றது. தனது ஒரே மகனை அழைத்தாள். முதலிற் கையில் வேலைக் கொடுத்தாள். 'போ போருக்கு' என்றுள். பிறகுதான் அவனைப் பார்த்தாள். தலைமயிர் பறக்கிறது; இடுப்பில் நல்ல வேட்டியில்லை. அவசர அவசரமாகத் தலையில் எண்ணெயைத் தடவி வாருகிருள். 'போர்க்களத்துக்குப் போய் வெற்றியோடு வா' என்று அனுப்புகிருள். எத்தகைய வீரப் பெண் இவள்! குலத்துக்கு என எஞ்சிய மகனை,ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையை தமிழினத்தின் போருக்காக வேல் கொடுத்தனுப்பிய தமிழ்த் தாயின் வீரம் இது.

### இன்றைய தமிழ்ப் பெண்

இதினிலும் சிறந்த வீரம் ஈழத்துக் கீழ் மாகாணத்திலே கல்லோயாப் பள்ளத்தாக்கிலே காட்சியளித்தது. தமிழ் பேசும் குடும்பம் ஒன்றில் மூன்று ஆண் குழந்தைகள் இருந்தனர். இனவெறியும் மதத் துவேஷமும் தாண்டவமாடிய இனக் கலவரத்திலே மூன்று ஆண்களும் மடிந்து விட்டனர். ஒருநாள், இவர்களின் தாயார் தன்வீட்டு வாயிலில் நின்று அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அவ்வழியாகச் சென்ற ஆடவன் ஒருவன் அவளை நோக்கிக் கூறுகின்றுன்; 'அம்மா, நீங்கள் தமிழ்ப் பெண்ணல்லவா? வீரத்தாய்மார் பரம்பரையிலே வந்த நீங்கள் உங்கள் மக்கள் மடிந்து விட்டார்கள் என்பதற்குத் துக்கப்படலாமா?' அதற்கு அந்தத் தாயார் என்ன கூறினுர் தெரியுமா?' ஐயா, என்னுடைய பிள்ளைகள் மூவர் ஒற்றை ஆட்சி அரசாங்கத்தினர் மூட்டி விட்ட இக் கலவரத்திலே இறந்துபோனுர்கள் என்பதற்கு நான் அழவில்லை. நசுக்கப்பட்டு வாழும் தமிழ் இனத்தின் விமோசனத்திற்காக, தமிழ் மொழியின் உரிமைக்காகப் பலி கொடுக்க இன்னும் அதிகமான மக்களை நான் பெறவில்லையே என்று தான் அழுகின்றேன்' என்றுள். பழந் தமிழ்ப் பெண்களின் வீரம் இன்றும் ஈழத்துத் தமிழ்த் தாய்மாரின் இரத்தத்துடன் இரண்டறக் கலந்திருக்கின்றது.

### மானமும் வீரமும்

மானக்கேட்டுடன் வாழ்வதிலும் உயிர் துறத்தல் சிறந்தது என்ற உயரிய பண்புடையவர் தமிழர். உயிரை விட்டால் மானம் நிலைக்குமெனின் உயிரை விட்டு மானத்தைக் காக்கும் சீரிய கொள்கை உடையவர் அவர். தன்னேடு ஒத்த வீரஞ் செறிந்த அரசனுகிய சோழன் கரிகாற் பெருவளத்தான் எறிந்த வேல் முதுகுப் புறத்தே பட அப்புண்ணுக்கு நாணி, மறக் கூறுடைய சேரமான் பெருஞ்சேரலாதன் வாளோடு வடக்கிருந்தான். இவ்வாறு வென்ற சோழனிலும் வடக்கிருந்த சேரன் மிகுந்த புகழுடையவன் என்று வெண்ணிக்குயத்தியார் கூறுகின்றுர். சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணுனேடு பொருது சிறையிற் கிடந்தான். சிறையிலே நீர் விடாய் எடுத்ததனுல் அது தீரத் தண்ணீர் தாவென்று கேட்டான்; அவர்கள் உடனே கொடுக்காது சிறிது தாமதித்துக் கொடுத்தனர். சேரன், மானங்கெட வந்த அதனைக் குடிப்பதா என்ற எண்ணத்துடன், தண்ணீரைக் கையில் வைத்துக் கொண்டே, உயிர் நீத்தான். இறக்குந் தறுவாயிற்கூட, உடலை விட்டு உயிர் போகத் துடிக்கின்ற நேரத்திலே கூட, மானங்கெட ஒன்றைப் பெறுவதிலும் உயிர் நீத்தலை மேலாகக் கருதியவர் தமிழர். தமது இனத்தையோ மொழியையோ விற்றுச் சலுகைகள் பெற்றது கிடையாது. அது தமிழ் வீரம் அன்று.

### தமிழ் ஒன்றியம்

பாண்டிய மன்னர் அவைக்களத்திலே தன் கணவன் கோவலன் குற்றவாளி அல்லன் என்பதை நிலைநாட்டுகின்றுள் கண்ணகி. அப்பொழுது, 'பொன்செய் கொல்லன் தன் சொற் கேட்ட யானே அரசன்? யானே கள்வன்! கெடுக என் ஆயுள்'' என்று கூறி மயங்கி வீழ்கின்றுன் மன்னன். தவறுவது மனித இயற்கை; மனிதனுகிய மன்னனும் அதற்கு விலக்கல்லன். எனவே, 'ஒரு முறை தவறிவிட்டேன்; மன்னித்து விடு; இனித் திருந்தி நடப்பேன்'' என்று கூறியிருக்கலாம்' இன்றைய கொடுங்கோலாட்சியாளர் போல். ஆனுல் அவ்வாறு செய்திருந்தால், தமிழ் நீதிக்கே பங்கம் ஏற்பட்டிருக்கும்; பரம்பரையாக மானத்துடன் வாழ்ந்த தமிழ் அரசர் பெயருக்கே இழுக்கு ஏற்பட்டிருக்கும். அதனுலேதான் ''கெடுக என் ஆயுள்'' என்று வீழ்ந்து மடிந்தான். மான உணர்ச்சி நிறைந்த இந்த வீரத்திற்கு ஈடு ஏது? சோழ நாட்டிலே பிறந்த பெண், பாண்டி நாட்டிற்குக் கணவனுடன் உயிர் பிழைப்பதற்கு வந்து, கணவனை இழந்து நீதி கேட்கின்றுள். சோழ நாட்டுப் பெண்தானே, அவளுக்கு என்ன நீதி என்று அரசன் தட்டிக் கழித்திருந்தால் தமிழ் நாட்டின் ஒற்றுமைக்கே கேடு விளைந்திருக்கும். தமிழர் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு இன்னல் ஏற்பட்டால், இன்னல் உண்டாக்கியவர்கள் தண்டிக்கப் படவேண்டும் என்பதனை இப் பாண்டிய மன்னன் தன் உயிரைக் கொடுத்து நிலைநாட்டினுன். இது ஒப்பற்ற தமிழர் வீரம்.

### தமிழ்ப் பெண்கள் வீரம் இனத்தைக் காக்கும்

இலக்கியப் புகழும் வரலாற்றுச் சிறப்பும் படைத்த வீரத் தமிழ் மகள் கண்ணகி. தன் கணவனுக்கு நேர்ந்த துயரை நினைந்து உள்ளம் குழைந்து அழுது புலம்பிக் காலம் கழிக்காது, அல்வழிப்பட்ட ஆட்சி எமக்கு மட்டும் பகையன்று; புகழ் மலிந்த தமிழினத்தின் வரலாற்றிற்கே பகையானது; வாழ்தல் வேண்டி வந்தவனை வெட்டி வீழ்த்திய ஆட்சி முறை எமக்கு மட்டும் பகையன்று; நாட்டில் வாழும் அத்தனை மக்களுக்குமே அது 'நஞ்சு' என்று கொண்டவள் அவள். உயிருக்கு உயிரான வாழும் உரிமை பறிபோகும் நேரத்திலே துயரக் கண்ணீரில் மூழ்கிக் கிடப்பது கோழமை எனக் கருதியவள். எனவே தான் அறியாமையில் மூழ்கிக் கிடந்த அரசனின் பழிச் செயலை எடுத்துரைத்து, மதுரை மக்கள் கண்டு வியக்க, நீதிக்காக வழக்காடினுள். குடிமகன் ஒருவன் மீது அடாத பழியைச் சுமத்தி அவனைக் கொலை செய்யும் அளவிற்கு ஆட்சி ஒன்று இருக்குமானுல்-அது எவ்வளவு நீண்ட பெரு வரலாறு உடையதாயினும்—அதை அழித்துத் தீருவதே தேசபக்தி எனத் தன் வீரச் செயல் மூலம் காட்டினுள்.

கோவலன் தனி மனிதனே! ஆனுல் அவன் கொலையை ஒரு தனி மனிதன் கொலையாகக் கொள்ள முடியாது. அது அரசியற் கொலை. எனவே, கண்ணகி செய்த புரட்சியும், தேசபக்தி என்ற குற்றமில்லாத தத்துவத்திற்கு மங்காத விளக்கத்தைத் தரும் தலை சிறந்த அரசியற் புரட்சி யாகும். கண்ணகியின் வீரம் பேருண்மையொன்றினை எடுத்து விளக்குகின்றது. தமிழ்ப் பெண்கள் தம் வாழ்க்கை வேறு, தமது நாட்டின் வாழ்க்கை வேறு என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. ஆட்சி நடக்கும் நிலப்பரப்பில், வாழும் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை அனைத்துயிரையும் காக்க வேண்டிய தூய ஆற்றல் அவர்களிடமுண்டு. எனவே தமிழ்ப் பெண்களின் வீரமே தமிழ் இனத்தைக் காக்கும் ஆற்றல் படைத்தது, கொடுமை பொறுக்கமுடியாது அவர்கள் சொட்டும் கண்ணீர் கொடுங்கோலாட்சியை அழித்தே தீரும்.

---

# திருமலையைக் கேட்கின்றேம்!

—எருவில் மூர்த்தி—

திரைகொண்டு குவிசங்குத் திரளோடு மணிமுத்துத்
திரவி யங்கள்
நிரைகொண்ட கரைகொண்டு நிறைகொண்ட திருமலையில்
நெடிது கூடிப்
புரைகொண்ட ஆட்சியினைப் புறங்காட்டச் செயற்படுத்தும்
புனித ஏட்டை
வரைகின்ற மாநாட்டு வல்லுனரைக் கேட்கிறதெம்
மறவர் கூட்டம்!

சட்டத்தைத் தகர்க்காது, சரித்திரத்தோர் திருப்பத்தைச்
சாதிக் காது,
கொட்டத்தை அடக்காது குமைந்ததெலாம் போதுமினிக்
கொலைவாள் ஏந்துங்
கட்டத்தை அடைந்துள்ளோம்; காலத்தைக் கடத்தாது
கவத்தே பாயுந்
திட்டத்தைத் தருகவெனத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

வீரத்தை உறைபோட்டு விலைபேசி விற்றுவிட்டு
வீணர் கட்கு
ஆரத்தி சுற்றுகின்ற அலிகளலத் தமிழ்மக்கள்;
அரக்கர் ஆட்சி
வேரற்று விழும்வரையும் வெங்களத்தில் விளையாடி
விரிந்த தோளின்
தீரத்தைக் காட்டுதற்குத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

மானத்தை உயிர்போல மதிக்கின்ற மறத்தமிழர்
மரபைச் சூழ்ந்த
ஈனத்தைக் கிழித் தெறியும் இணையற்ற பணிக்காக
இதயந் தந்தே
வானத்தை மழைக்காக வழிபார்க்கும் பயிர்போல
வாஞ்சை யொடு
தேனொத்த பதில்வேண்டித் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

அழியாத புகழோடும் அசையாத கொடியோடும்
அவனி மீது
வளையாத கோலோடும் வாழ்ந்தவளை அடிமையளாய்
வாட விட்ட
பழியோடு வாழ்வதிலும் பட்டழிதல் சிறப்பென்ற
பண்பால் உந்தித்
தெளிவான துணிபொன்றைத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

''இத்திரையில் ஒலிக்கின்ற எம்மொழிக்கும் மூப்பெனினும்
இளமை மாறுச்
சித்திரத்தாள், தேன்சொட்டுஞ் செஞ்சொல்லாள்; கவின்ஒழுகுஞ்
செழுமை மிக்காள்,
வித்தகியால் செந்தமிழின் விலங்கொடிக்கக் களம்நோக்கி
விரைக!'' என்றேர்
தித்திக்கும் ஆணைபெறத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

அறமோடு அமைகின்ற அணிகொண்டு, நேர்ந்துள்ள
அடிமை வாழ்வின்
கறையோடும் வரைநெஞ்சிற் களியோடும் படியின்பக்
கடமை ஏற்று
உறவோடும் உடலோடும் உணர்வீந்தும் உயிரீந்தும்
உரிமை காக்கத்
திறமோடு போராடத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்!

---


ஒன்று, நாம் மேன்மையுற்றவர்களாக வாழ வேண்டும், அல்லது அழிய வேண்டும்.

உயர்ந்த நோக்கமில்லாத வாழ்க்கை, அந்த நோக்கத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கை, வாழ்க்கையல்ல.

—மாலினி.

# நெருக்கடிகள் நீங்க ஒரே வழி

# சத்திய நெறி காட்டும்



# சாத்வீகம்

அநீதிகளை எதிர்த்துப் போராடாமல் கண்மூடித்தனமாக இருப்பது அநீதி தழைக்க ஒத்துழைப்பதாகும். அநீதியை எதிர்த்து பலாத்காரச் செயலில் இறங்குவது 'கண்ணுக்குக் கண் பிடுங்கும்'—பழிக்குப் பழி என்ற ரீதியில் எல்லோரும் குருடர்களாக வேண்டிய முடிவுக்கே இட்டுச் செல்லும்.

**அடக்கி ஒடுக்கப்படும் சிறுபான்மையினர், தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சத்திய வழியான சாத்விக முறையைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.**

அமெரிக்காவில் நிற வேற்றுமைக்கு இலக்காகி அல்லலுறும் கறுப்பர்களை சாத்வீக வழிப் போர்முனைப் பாதையில் இட்டுச் செல்லும் **மாட்டின் லூதர் கிங்** அண்மையில் நடைபெற்ற மகாத்மா காந்தி ஞாபக தினக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்ட கருத்துக்களின் சாரம் இங்கே தரப்படுகிறது.

## மாட்டின் லூதர் கிங்

இந்நாட்டில்உள்ள இனத் தொடர்புகளில் நெருக்கடியான நிலைமை ஒன்றினை நாம் எதிர்நோக்கியுள்ளோம் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. அடக்கியாளும் சக்திகளுக்கும், அவற்றுக்கெதிராகக் கிளம்பியுள்ள சுதந்திரச் சக்திகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் மோதல் தான் இந்த நெருக்கடியை விளைவித்துள்ளது.

நெருக்கடி ஏற்படும் பொழுது, அதை உண்டாக்கிய சக்திகளையோ, காரணங்களையோ அகற்றமுற்படுவது, நெருக்கடி ஏற்பட்டுள்ள சமூகத்தைப் பொறுத்ததாகும். அதுவும், அடக்கியாளப்படுபவர்கள், அடக்குமுறையின் கொடுமைக்குப் பலியாகியுள்ளவர்கள்,இந்த நிலைமையைச் சீர் செய்ய எப்பொழுதும் முயன்று கொண்டிருப்பர்.

இப்படி, ஆளுவோருக்கெதிராக ஆளப்படுவோர் போராடுவதற்கு மூன்றுவழிகள் உள.

### கோழைத்தனமான வழி

ஒத்து நடப்பது, ஒரு வழி. ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கண்டு பின்வாங்கியோ அல்லது அவற்றுக்கெதிராகப் போராடுவதில் பிரயோசனமில்லை என்ற தப்பெண்ணத்தினுலோ அல்லது போராடிப் போராடிக் களைத்துவிட்டதனுலோ, சிலர் போராட்டத்தினின்றும் ஒதுங்கி விடுகின்றனர். இருக்கின்ற நிலைமையைப் பேசாது ஏற்றுக்கொள்கின்றனர். இதுவே எமது விதியென்று சரணடைந்து வருகின்றனர். பழைய முறைமையை மாற்றிப் புதியவோர் முறைமையை நிலைநாட்ட முற்படுவதில் ஏற்படக்கூடிய தொல்லைகளுக்குத் தம்மால் ஈடுகொடுக்க முடியாதென, இருக்கின்ற நிலைமையே எவ்வளவோ மேலென, வாளாவிருந்து விடுகின்றனர்.

ஆகவே, இதுவே ஒத்து நடக்கும் வழி—ஆனுல், அதுவல்ல வழி. அது சில சமயங்களில் ஒருவேளை சுலபமான வழியாகவிருக்கலாம். ஆனுல் அதுவல்ல சாத்வீகமான வழி; அதுவல்ல வீர வழி. அது ஒருகோழைத்தனமான வழி. ஏனெனில், கெட்ட முறைமை ஒன்றுக்குத் தக்க விதத்தில் தன்னை மாற்றிக் கொள்ளும் மனிதன், அந்தக் கணமே அந்தக் கெட்ட முறைமையில் பங்காளியாகி விடுவதுடன், அந்தக் கெட்ட முறைமையின் நீடித்த வாழ்வுக்கான பொறுப்பில் ஒரு பங்கையும் ஏற்றுக்கொள்கிருன்.

### பலாத்காரம்

இரண்டாவது வழியும் ஒன்றுண்டு. அதுதான்——வெறுப்புடன் குமுறியெழும்பும் பலாத்காரம்.

பலாத்காரம்பற்றி எங்களுக்கு ஏற்கனவே தெரியும். பலாத்காரம் ஒருபோதும் வெற்றியளிக்கவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. சரித்திரம் பயில்பவர்கள் விரைவிலேயே,பலாத்காரம் மூலம் சுதந்திரமடைந்த பல நாடுகள் பற்றி அறிய வருவார்கள்.

ஆனுல், பலாத்காரம் தற்காலிக வெற்றிகளையே தர முடியும். அதனுல் நிரந்தரமான சமாதானத்தைப் பெற்றுத்தர முடியாதென்பதுடன், அதன் முடிவில், அது புதிய பல சமூகப் பிரச்சினைகளை உண்டாக்கிவிட்டிருக்கும்.

இன உரிமைப் போராட்டத்தில் பலாத்கார வழியைப் பின்பற்றுவது, நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதுடன், ஆன்மீகத்துக்கு எதிரானதுமாகும்.

பல காரணங்களுக்காகப் பலாத்காரம் சாத்தியமற்றது. இவற்றுள் சிறந்த காரணமொன்ருக நான் கருதுவது யாதெனில், நாங்கள் பலாத்காரப் புரட்சி ஒன்றைத் தொடக்குவதை எமது எதிரிகள் ஆவலுடன் வரவேற்பர் என்பதே குழப்பத்தை உண்டாக்க வெறியூட்டுகின்றனர் என்ற சாட்டில், அவர்கள் எத்தனையோ குற்றமற்ற சனங்களைச் சுட்டுப் பொசுக்கிவிடுவார்கள்.

அத்துடன், பலாத்காரம் சாத்தியமற்றது என்று சொல்கிறேன், இன்னுமோர் காரணத்துக்காக. 'கண்ணுக்குக்கண்' என்ற பழைய பழிக்குப்பழி வாங்கும் தத்துவம், ஈற்றில் எல்லோரையும் கண்ணில்லாக் கபோதிகளாகவே ஆக்கி விடும்.

### சாத்வீக வழி

இன்னுமோர் வழி உண்டு. மூன்ருவது வழி. அதுதான் பலாத்காரமற்ற, சாத்வீக வழி. பலாத்காரமற்ற, சாத்வீக எதிர்ப்பு. இந்த வழி இலட்சியத்தையே பிரதிபலிக்கும். சரித்திரத்தின் நீரோட்டத்தில், அழிக்கும் வழிமுறைகள்,ஆக்கும்இலட்சியங்களைக் கொண்டு வர முடியாது.

ஆன்மீக வழிகள் மூலம், சத்திய முடிவுகளை நோக்கி இடைவிடாது, திடசித்தத்துடன் பின் தொடர்வதே பலாத்காரமற்ற, சாத்வீகப் போராட்டமாகும்.

அடுத்தபடியாக, இது சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சாத்வீகப் போராட்டத்தில் இன்னுமோர் முக்கியமான அம்சம் உண்டு. அது தான், எதிரிக்கு எந்த விதத்திலாவது தீங்கு விளைப்பது ஒருவருடைய நோக்கமாகஇருக்கக்கூடாது என்பது இந்தியத் தத்துவத்தில், அவர்கள் இதை 'அகிம்சை'—தீங்கு விளைக்காமை-என்று அழைக்கிருர்கள்.

### எதிரிமேல் அன்பு

அகிம்சை முறையை நாம் எமது போராட்டத்தில் கடைப்பிடிக்கும் பொழுது, தான், மாறிவரும் இன்றைய சூழ்நிலையில், நீக்ரோக்களுக்கு உசந்த வழி என நான் கருதுகிறேன். இவ்வழிதான் இந்நேரத்தில் எமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். புதிய சகாப்தத்தின் இலட்சியங்களையும் கோட்பாடுகளையும், குறிக்கோள்களையும் நிறைவேற்ற இதுவே சிறந்த வழி என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்த சாத்வீகப் போராட்டத்தின் தன்மையை, தத்துவத்தைச் சற்றே ஆராய்ந்து பார்ப்போம். பலாத்காரமற்ற, சாத்வீகப் போராட்டத்தைப்பற்றி நாம் அடிக்கடி பேசிக்கொள்வதால், சில சமயம் அதனை ஊக்குவிக்கும் அடிப்படைப் பலத்தை நாம் உணராது விடுகின்ருேம்.

சாத்வீகப் போராட்டத் தத்துவம், நாம் அடையவிருக்கும் இலட்சியங்களைப் போலவே, நாம் கையாளும் வழிவகைகளும் தூய்மையானவையாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகிறது. நோக்கமும், செயலும் பொருந்தவேண்டும். இவை இரண்டும் பிரிக்கமுடியாதவை. நாம் கடைப்பிடிக்கும் வழிமுறை, உருவாகி வரும் எமது எதிரிக்கு எவ்விதத்திலும் நாம் தீங்குசெய்யாது விடவேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதால், எதிரியிடம் எமக்கு உள்ள வெறுப்பு, படிப்படியாக மறைவதுடன், நாம் எதிரியிடம் அன்பு செலுத்துமளவுக்கு முன்னேறியும் வருகின்ருேம். எமக்கு எதிரியிடமும் அன்பு ஏற்படுகின்றது.

சிலர், இந்த 'எதிரியிடம் அன்பு' என்பதையிட்டு என்னிடம் தமது சந்தேகத்தை வெளியிட்டிருக்கிருர்கள். 'சாத்வீகப் போராட்டத்தில் பலாத்காரம் கூடாது என்பதை எங்களால் உணர முடிகிறது. ஆனுல், எதிரியிடம் அன்புகாட்டிக்கொள்வது,எமக்குச்சற்றும்விளங்கவில்லை' என்று சிலர் என்னைக் கேட்டிருக்கிருர்கள்.

இவர்கள் அன்பு என்ற உணர்ச்சியைக் குறிப்பிடுகிருர்கள். உணர்ச்சி வசப்பட்ட அன்பு, காதல், பாசம் என்பதை மனதில் வைத்துக்கொண்டே இக் கேள்வியை என்னிடம் கேட்கிருர்கள். பேரன்பு என்று ஒன்று உண்டு என்பதை இவர்கள் மறந்துவிடுகிருர்கள். இந்த அன்பு தான் கடவுளின் அன்பு. உலகில் படைக்கப்பட்ட சகல சீவராசிகளையும் அரவணைக்கும் இந்த அன்பில், விருப்பு வெறுப்பினுல் உந்தப்பட்டு அன்பு காட்டும் உணர்ச்சிகளுக்குஇடமில்லை. இத்தகைய அன்புநிலைக்கு உயர்ந்தவன், உலகிலுள்ள மனிதர்களிடம் விருப்பத்தின் காரணமாக அன்பு செலுத்தவில்லை. இறைவன் எல்லா மனிதரிடமும் அன்பாக இருக்கிருன் என்பதற்காகவே.இந்த நிலைக்கு வந்துவிட்டவன், ஒருவன் செய்த காரியத்தை வெறுக்கும் அதே நேரத்தில், காரியகர்த்தாவை அன்புகொண்டு நேசிக்க முடிகின்றது.

இந்த நிலை எவ்வளவு அழகான நிலை. இத்தகைய போராட்டத்தில் வெறுப்புக்கு இடமில்லை. வெறுப்பு எவ்வளவு ஆபத்தானது என்பதையும் இப்படிப்பட்ட போராட்டம் எடுத்துக் காட்ட உதவுகின்றது. வெறுப்பு, வெறுக்கப்படுகிறவனுக்கு எத்துணை தீங்கை விளைக்கின்றதோ, அத்துணை தீங்கை வெறுப்பவனுக்கும் விளைக்கச் செய்யும்.

### சகிப்புத் தன்மை

சாத்வீகப் போராட்டம் பற்றி மற்றுமோர் முக்கியமான அம்சம். அது தான் சகிப்புத் தன்மை. இந்த விஷயத்தில், பலாத்காரமும் அகிம்சையும் வந்து சந்திக்கின்றன. இரண்டுமே, சகிப்புத் தன்மை பலம் மிக்கவோர் சமூக சக்தி என்று கூறுகின்றன. ஆனுல் பலாத்காரம், மற்றவர்களுக்குத் தீங்கு விளைப்பதன் மூலம், அவர்களைச் சகிக்க வைப்பதே இந்தச் சக்தியாகுமெனும் நேரத்தில், சாத்வீகம், தனக்குத் தானே ஒருவன் தீங்கு விளைக்கப்படுவதையும், பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதையும் அனுமதித்து, அதன் மூலம் ஏற்படும் துன்பத்தையும் சகித்துக் கொள்வதே சமூக சக்தியாகும் என்று கூறுகிறது.

ஆகவே சாத்வீகப் போராட்டத்தில் பங்கு பற்றுவோர் எதிரியின் பலத்தைத் தமது சகிப்புத் தன்மையால் முறியடிக்கிருர்கள்.

இது தான், சாத்வீகப் போராட்டத்தின் உள்ளடக்கம். இதுவே, எதிரியைக் கையாலாகாதவனுக்கி விடுகிறது. அது அவனுடைய ஆத்மீகப் பாதுகாப்புகளை அம்பலப்படுத்துகிறது, அவனுடைய மனச்சாட்சியைச் சீண்டிவிடுகிறது. அவன், இதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாது திகைக்கிருன்.

அவன் உன்னை அடிக்காவிட்டால், நல்லது. அவன் உன்னைச் சிறையில் போடாவிட்டால், மிகவும் நல்லது. ஆனுல், அவன் உன்னைச் சிறையில் போட்டால் வெட்கத்துக்குரிய அந்த இருட்டறையை மனித கௌரவத்துக்கும், சுதந்திரத்துக்குமான இருப்பிடமாக மாற்று. அவன் உன்னைக் கொல்ல முயன்ருல், இந்த உலகில் நீ இறப்பதற்காக, சில மிக நெருக்கமான, மிகுந்த பாத்யதைக்குரிய, எக்காலமும் உண்மையாக விளங்கும் பொருள்கள் உண்டு என்ற உள்ளுணர்வை நீ வளர்த்துக் கொள்கிருய். ஆயின், மனிதன் ஒருவன் தான் இறப்பதற்காக ஒரு இலட்சியத்தைக் கண்டு பிடிக்காவிட்டால், அவன் வாழ்வதற்குத் தகுதி வாய்ந்தவனல்ல.

ஒரு மனிதன் தனது முப்பது வயதில், தான் இறக்கத் துணிவதற்கான ஒரு பேருண்மையை, ஒரு பெரும் கோட்பாட்டை, பெரும் இலட்சியத்தைக் காண முடியவில்லையெனில் அவன் ஏற்கனவே இறந்து விட்டான். போராடும் நிலைக்கு அவனுக்குச் சவால் விடப்படும் சமயம் தனது வீடு குண்டு வீச்சுக்கு இலக்காகுமென்ருே, தன்னைச் சுட்டு விடுவார்கள் என்ருே, தனது உத்தியோகத்தை இழக்க நேரிடுமென்ருே, பயந்து மறுத்தால், அவன் எண்பது வயது வரை வாழ்ந்தாலும், அவன் முப்பது வயதிலேயே இறந்துவிடுகிருன். எண்பது வயதில் அவனுடைய மூச்சு நிற்பது, ஏற்கனவே அவனுடைய ஆத்மா இறந்துவிட்டமைக்கான காலந்தாழ்த்திய அறிவித்தலே.

இதை, பலாத்காரமற்ற, சாத்வீகம் உணர்கிறது. ஆகவே, சகிப்புத்தன்மை எத்தனை பலம்வாய்ந்த சமூக சக்தியாக விளங்க முடியும் என்பதையும் அது விளங்கிக் கொள்கிறது.

### ஒத்துழையாமை

சாத்வீகப் போராட்டத்தில், ஒத்துழையாமை இயக்கமும் ஓர் அம்சமாகும். ஒருவன் தீய சக்தியுடன் ஒத்துழைக்கக் கூடாது என்பது சாத்வீகப் போராட்டத்தின் கோட்பாடாகும். எவ்வளவுக்கெவ்வளவு நல்லதுடன் ஒத்துழைப்பது மனிதனின் தார்மீகக் கடமையோ, அவ்வளவுக்குத் தீமையுடன் ஒத்துழையாது விடுதலும் மனிதனின் தார்மீகக் கடமையாகும்.

சில சட்டங்களை நாம் எதிர்த்து, அவைகளை மறுத்துப் போராட்டம் நடாத்தும் நேரத்தில், சில சட்டங்

(11-ம் பக்கம் பார்க்க)


**கல்வி**

மாணவ ஆசிரியர் பரீட்சைக்கான தமிழ் மொழி, பொதுவிவேகம், பொது அறிவு ஆகிய பாடங்கள் அடங்கியுள்ள மாதிரி வினு விடைப் புத்தகம் ஒன்று ரூபாய் 5/=
சர்வகலாசாலை போதனு கழகம் (U. T. I)
540, மருதானை வீதி,
கொழும்பு—10.

# சிங்கள வகுப்புவாதச் சேற்றில் சீரான அரசியல் வாழ்வு

## தேசியவாதிகளின் சுயநல வேட்கை

## தனியார் உயர்வுக்கு தமிழினம் சன்மானமா?

### சமசமாஜ அரசியலும் தமிழ் பேசும் மக்களும்

இன வேற்றுமை கடந்த தேசியவாதிகள் என்று ஒரு கால் கூறிக்கொண்ட இலங்கை சமசமாஜக் கட்சியினரும், வகுப்புவாதத்திலே பிறந்து, வகுப்புவாதத்திலே வளர்ந்த சுதந்திரக் கட்சியினரும் மூன்று திங்களுக்கு முன்னர் கூட்டுச் சேர்ந்து நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றனர். இந்தக் கூட்டுப் பொறுப்பினால் நாட்டில் வாழும் சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் மக்களுக்கு இன்றுவரை 'நன்மைகள்' ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி ஆராய்ச்சிக்கு உரியதல்ல. தினே தினே புதிய உருப்பெறும் சட்டங்கள், இனத்தின் நிலையைத் தாழ்த்தி வருகின்றன. ஆனால் கூட்டரசாங்கத்தின் உதயம் சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த தனி நபர்களுக்குப் பல நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள சிறு தொகையினரான சமசமாஜிஸ்டுகளில் ஒரு சிலர் புதிய பதவிகளைப் பெற்று ஆதாயம் அடைந்துள்ளனர்.

தனிநபர்கள் சிலர் பெற்ற ஆதாயத்தைக் கொண்டு தமிழினம் திருப்திஅடைந்துவிட முடியாது. கடந்த காலங்களிலும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மந்திரிப் பதவிகளும் பட்டங்களும் பெற்றனர். அதனால் தமிழ் பேசுமினம் வாழ்விடத்தையும் வளமார் தமிழ்மொழி அரியாசனத்தில் பெற்றிருந்த சரியாசனத்தையும், மலைவாழ் மக்கள் குடியுரிமையையும் இழந்தனர். இன்றுவரை அவ்விழந்த உரிமைகளைத் திரும்பப் பெற முடியாது தமிழ் பேசுமினம் தவிக்கிறது. இந்த நிலையில் தமிழ் பேசும் சமசமாஜிஸ்டுகள் தாங்கள் பெறும் ஆதாயத்திற்காக மீண்டும் தனிச் சிங்கள அரசாங்கத்திடம் தமிழ் பேசும் மக்களை அடகு வைக்க ஆசைப்படுகிறார்கள்.

#### நிதி மந்திரியும் கறுப்புக்கொடியும்

கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவியேற்றவுடன் சமசமாஜத் தலைவர் டாக்டர் பெரேரா யாழ். நகருக்குச் செல்லவிருப்பதாதாக அறிவித்தார். அவருக்கு வரவேற்புக் கொடுக்க சில சமசமாஜிஸ்டுகளும் தனி நபர் சிலரும் முன் வந்தனர். ஆனால் விடுதலை உணர்வு மிக்க வாலிபர்கள் டாக்டர் பெரேராவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக முடிவெடுத்தனர். இதை அறிந்த அமைச்சரும் தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

ஆனால் 1953ம் ஆண்டு நடைபெற்ற கர்த்தால் நினைவுக்கூட்டத்தைக் காரணம் காட்டி கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிக்கும் சமசமாஜ அமைச்சர்கள் இருவர் கடந்த வாரம் வடகிழக்கு மாகாணத்திற்குச் சென்றுதிரும்பியுள்ளார்கள். அவர்கள் உரை நிகழ்த்திய கர்த்தால் நினைவு தினக் கூட்டங்கள் அனைத்திலும் தமிழரசுக்கட்சியைத் திட்டித் தீர்த்துள்ளார்கள். இந்த நிலையில் 1953ம் ஆண்டு நடைபெற்ற கர்த்தால் பற்றி நினைவு கூருவது பொருத்தமுடைத்து.

#### கர்த்தாலும் தமிழரசுக் கட்சியும்

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அந்த கர்த்தால் பூரண வெற்றியென்று கூற முடியாது போனாலும் தோல்வியென்று முடிவு கட்ட முடியாது. வட-கிழக்கு மாகாணங்களில் — அன்று நடைபெற்ற கர்த்தால் வெற்றி பெற்றதற்குத் தமிழரசுக்கட்சியினரே முக்கிய காரணகர்த்தாக்கள். இன்று தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான பலர் அன்று சட்டக்கல்லூரி, சர்வகலாசாலை ஆகியவற்றில் மாணவர்களாக இருந்தனர். அவர்களின் அயராத உழைப்பே கர்த்தாலுக்குப் பூரண வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

இந்த வரலாற்று உண்மையை மறந்து கர்த்தால் நினைவு தினக்கூட்டம் நடாத்தியவர்கள் தமிழரசாரைத் திட்டித் தீர்த்திருக்கிறார்கள். ஆனால் சமசமாஜிஸ்டுகள் இன்று கூட்டுச் சேர்ந்திருக்கும் சுதந்திரக் கட்சியினர் கர்த்தாலுக்குப் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இதை மறந்துவிட்ட சமசமாஜிஸ்டுகள் இந்த உண்மையைப் பொது மக்கள் பார்வையிலிருந்தும் மறைத்து விட விரும்புகிறார்கள். தென்னிலங்கையிலிருந்து வந்த அமைச்சர்கள்தான் இதை மறந்துவிட்டார்கள் என்றாலும் வட-கிழக்கு இலங்கையிலிருக்கும் சமசமாஜிஸ்டுகளாவது இந்த உண்மையை அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் உண்மையைக் கூறித் தமது பலவீனத்தை வெளிக்காட்டிக் கொள்ள அவர்கள் விரும்பியிருக்க மாட்டார்கள்.

**பூங்கோதை**

#### அமைச்சர்களின் அந்தஸ்து

கர்த்தால் நினைவுக் கூட்டம் என்ற தற்காப்புக் கவசமணிந்து வட-கிழக்கு இலங்கைக்கு விஜயம் செய்த அமைச்சர்களின் அந்தஸ்துத்தான் என்னே? சமசமாஜக் கட்சியில் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த இவர்கள் கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அமைச்சர்களாகியுள்ளனர்.

சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேருவது என்று சமசமாஜக்கட்சி மத்திய குழு முடிவு செய்தவுடன் தீவிரவாதக் கொள்கையைப் பின்பற்றும் எட்மண்ட் சமரக்கொடி, பாலா டம்போ, காராளசிங்கம், மெரில் பர்னாந்து போன்ற முன்னணித் தலைவர்கள் கட்சியிலிருந்து வெளியேறினார்கள். மத்திய பாதையைப் பின்பற்றுபவர்களும் சமசமாஜக்கட்சியில் தனியிடம்பெற்றுள்ளவர்களுமான டாக்டர் சில்வா, லெஸ்லி குணவர்த்தனா போன்றவர்கள் அமைச்சர் பதவியை ஏற்காது தட்டிக்கழித்துவிட்டார்கள். இறுதியில் டாக்டர் பெரேராவுக்கு எஞ்சியவர்களே- மேல் கூறிய இரு அமைச்சர்களும். சமசமாஜக் கட்சி என்ற கண்ணோட்டத்தில் நோக்குகையில் இரு அமைச்சர்களும் மிக மிகச் சாதாரணமானவர்கள். டாக்டர் பெரேராவின் ஆசையைப் பூர்த்திசெய்ய முன்வந்தவர்கள்.

சுதந்திரக் கட்சியுடன் சமசமாஜக்கட்சி கூட்டுச்சேர்ந்திருப்பது அன்று ஐக்கிய தேசியக்கட்சியுடன் திரு. பொன்னம்பலமும் தமிழ் காங்கிரஸில் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அளவில் கணிக்கப்பட்ட—திருவாளர்கள் கனகரத்தினம், குமாரசாமி போன்றோரும் பதவிபெற்றதையே நினைவு படுத்துகிறது. இந்த உண்மை உணராத வடபகுதி சமசமாஜிஸ்டுகள் வெட்டிப்பேச்சிலும், வெற்றி விழாக்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள்.

#### பிளவுகள் பலவிதம்

சமசமாஜக்கட்சியில் ஏற்பட்டிருக்கும் பெரும் பிளவைச் சீர்செய்ய முடியாத இவர்கள் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்போம் என்று வட-கிழக்கு மாகாணஎல்லைக்குள் நின்று குரல் எழுப்புகிறார்கள். சமசமாஜக் கட்சிக்குள் மட்டுமல்ல கூட்டரசாங்க அமைச்சரவைக்குள்ளும் இன்று பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அமைச்சரவையில் உள்ள கருத்து முரண்பாடும், வேறுபட்ட நிலையும் வெளியுலகிற்கு அம்பலமாகின. அமைச்சரவையில் உள்ள கருத்துவேறுபாடு தற்காலிகமாக அடங்கியுள்ளது போன்று காட்சியளிக்கிறது. ஆனால்—பூகம்பம்போன்று இக்கருத்து முரண்பாடு மிக விரைவில் வெடிக்கவே செய்யும்.

#### 'மீனுக்கு தலையும் பாம்புக்கு வாலும்'

கூட்டரசாங்க அமைச்சரவையிலுள்ள கருத்து முரண்பாட்டையும், சமசமாஜக் கட்சியிலேற்பட்டுள்ள பிளவையும் சீர்செய்ய முடியாத சமசமாஜ அமைச்சர்கள் மூன்றுமாதத்திற்குள் தமிழ் மொழிக்கு சமத்துவம் பெற்றுக் கொடுப்போம் என்று சுன்னாகத்திலும், திருமலையிலும் முழங்கியிருக்கிறார்கள். 'மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும்' காட்டும் இவர்களின் வழமையான அரசியல் சித்தாந்தத்தை தொடர்ந்தும், தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து அரசியல் லாபம் பெறலாம் என்று முயலுகிறார்கள்.

கூட்டரசாங்க ஏற்பாட்டில் சுதந்திரக்கட்சி நாலு அம்சத்திட்டத்தை சமசமாஜக்கட்சியின் முன் வைத்தது. அவற்றில் எத்தகைய திருத்தமுமின்றி சமசமாஜிஸ்டுகள் ஏற்றுக்கொண்டால்மட்டுமே கூட்டுச்சேர முடியுமென்றும் நிபந்தனை விதித்திருந்தார்கள். சமசமாஜிஸ்டுகள் அந்த நாலு அம்சத் திட்டத்தை எத்தகைய திருத்தமுமின்றி ஏற்றுக் கொண்டு ஆட்சிப்பொறுப்பில் பங்கேற்றனர்.

இலங்கை இந்தியர் பிரச்சினை, மொழிப்பிரச்சினை ஆகியவற்றில் சுதந்திரக் கட்சியின் கொள்கையைச் சிறிதும் மாற்றமின்றி ஏற்றுக்கொள்வதுடன் பௌத்த மதத்தை நாட்டின் தேசிய மதமாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறுதியானது தேர்தல்போட்டி பற்றிய உடன்படிக்கை. எனவே, மொழிப் பிரச்சினையில் சுதந்திரக்கட்சியின் இனவொழிப்புத் திட்டமான சிங்களம் மட்டும் சட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட சமசமாஜிஸ்டுகள் 'மொழிக் கொள்கையில் மாற்றமில்லையென்றும், மூன்று மாதத்தில் தமிழ்மொழிக்கும் சம உரிமை பெற்றுக்கொடுப்போம்' என்றும் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? அரசியல் அரிச்சுவடி தானும் தெரியாத சிறார்களே இவர்களின் அரசியல் புரட்டை அறிந்துகொள்வார்கள்.

மேலும், கூட்டரசாங்கம் உதயமான பின்னரே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் மாற்றாந்தாய் மனப்பான்மை வெகு தீவிரமாக அனுட்டிக்கப்படுகிறது. குறிப்பாக அரசாங்கசேவையில் 1956ம் ஆண்டுக்குப் பின் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் இந்த ஆண்டுமுடிவுடன் பதவியிலிருந்து வெளியேறியாகவேண்டும். நெற்காணித் திருத்தத்தில் சிறுபான்மையினர் அனைவரையும் பாதிக்கக்கூடியமுறையில்சிலதிருத்தங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்ப்பகுதிகளிலுள்ள உள்ளூராட்சிமன்றங்கள் தமிழில் செயல்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இந்தனைக்கும் சமசமாஜத் தலைவரும் நிதி மந்திரியுமான டாக்டர் பெரேரா அவர்களே முக்கிய காரண கர்த்தாவாக இருக்கின்றார். இந்த நிலையில் தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்ற அமைச்சர்கள் தமிழுக்கு உரிமை பெற்றுக் கொடுப்போம் என்று கூறுவதன் அர்த்தம்தான் என்னே?

#### பதவிக்காக இ. ஐ. மு.

கடந்த ஆண்டு உருவான இடதுசாரி ஐக்கிய முன்னணி இன்று இருந்த இடம் தெரியாது மறைந்து விட்டது. ஆனால் வட கிழக்கு மாகாணங்களிலுள்ள இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களை இ. ஐ. முன்னணியினர் என்று நாமம் சூட்டிக் கொள்கிறார்கள். இ. ஐ. மு. என்ற பெயரில் உள்ளூராட்சி தேர்தல்களிலும் கூடப் போட்டியிட்டுள்ளார்கள். அரசியல் அரங்கில் இ. ஐ. முன்னணி என்ற பதம் கூட்டரசாங்கத்தோற்றத்துடன் மறைந்து விட்டது. வட பகுதியிலுள்ள சுயநலவாதிகள் சிலர் உள்ளூராட்சி மன்றங்களில் ஒட்டியிருப்பதற்காக இன்றுவரை இ. ஐ. மு. என்ற நாமத்திற்கு உயிர் கொடுத்து வருகிறார்கள்!

#### தொழிலாள விரோதிகள்

தொழிலாளர் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கி முன்னின்று நடாத்திய சமசமாஜத் தலைவர்கள் இன்று தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதில் தமது சக்தியை விரயப்படுத்துகிறார்கள். குறிப்பாக அண்மையில் காங்கேசன் துறை சீமந்துத் தொழிற்சாலையில் நடைபெற்ற நீண்ட நாள் வேலை நிறுத்தம் தோல்வியில் முடிவடைந்தது. வெலோனாத் தொழிற்சாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்துள்ளார்கள். வெலோனா தொழிற்சாலை தனியார் சொத்து. இந்த வேலை நிறுத்தத்தில் அமைச்சர்கள் தலையிட்டு தொழிலாளர்களுக்கு சாதகமான முடிவைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம். அதையும் செய்ய இயலாத நிலையில், பொலீசாரின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தலாம். இவற்றையெல்லாம் மறந்து புதிய பதவிக் கிறுக்கில் மயங்கி வாழ்கிறார்கள்.

சமசமாஜிஸ்டுகளின் இன்றைய நிலையை அவர்களின் முன்னாள் தோழர்களாகிய எட்மண்ட் சமரக்கொடி, ரூபட் குணவர்த்தனா போன்றோர் அழகுபட பாராளுமன்றத்திலேயே எடுத்துக் கூறியுள்ளார்கள்.

#### பதவியும் உரிமையும்

இந்த நிலையில் சமசமாஜிஸ்டுகளை நம்பினால் தமிழ் பேசும் மக்கள் உரிமை பெறுவார்கள் என்று கூறுவது குருடனை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்ட கதையாகவே முடியும். சமசமாஜத் தலைவர்களுக்கு மந்திரிப்

(9ம்- பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# சிங்கள வெறி நீடித்தால் பிரிவு நிச்சயம்

## தமிழினத்தின் வரலாறு ஒரு சோகக் கதை

### நகரசபை வரவேற்பில் டாக்டர் சிவானந்தன் உரை

திருகோணமலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 9 வது மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வெளியூர்களிலிருந்து சென்ற தலைவர்கள், பிரதிநிதிகள், உறுப்பினர்கள், பார்வையாளர்கள் அனைவருக்கும் வெள்ளிக் கிழமை பிற்பகல் திருமலை நகராண்மைக் கழகம் பகிரங்க வரவேற்புக் கொடுத்தது. வரவேற்பு நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்று நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சிவானந்தன் பேசுகையில், தமிழ் பேசும் மக்களுக்கு சமத்துவம் கொடுத்தால் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பான்மையினருடன் ஒன்று பட்டு உழைக்க முடியுமென்றும், தமிழ் பேசுமினம் பாகுபாடு காட்டாது நடந்து கொண்ட போதும் அரசாங்கம் பாகுபாடு காட்டுவதாகவும், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்கள அரசாங்க அதிபர்களை அனுப்பி மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டுவதாகவும் கூறினார்.



டாக்டர் சிவானந்தன்

சுதந்திரப் போராட்டச் சரித்திரத்திலே அப் போராட்டங்கள் வெற்றி பெறுவதற்கு இடையூறாக ஏற்பட்ட தாமதங்கள் நிரந்தரமற்றவையே. எனினும் சில நாட்கள் கடந்தாவது அல்லது சீக்கிரத்திலாவது அப் போராட்டங்கள் இலட்சியத்தை அடைந்தேயிருக்கின்றன. இந்த நாட்டிலே எங்கள் அடிப்படை உரிமைகளும், இந்தநாட்டில்வாழும் உரிமைகளும் ஒரு சில நேற்றுத் தோன்றிய எஜமானர்களால் மறுக்கப்படும்வரை இந்நாட்டில் வாழும் தமிழினம் ஒற்றுமையாக மனத் தளர்ச்சியில்லாமல் எங்களிடம் ஒருமித்துக் கிடைக்கும் பலத்துடன் உரிமைகளுக்காகப் போராடவேண்டும.

#### வரலாறு தரும் உண்மை

நான் ஓர் தீர்க்கதரிசியல்ல. எனினும் இங்கு கூடியிருப்போர்க்கு துணிந்துசொல்ல முடியும். கோணநாயகரால் ஆசீர்வதிக்கப்பட்ட இந்த புனித இடத்திலிருந்து நான் கூறுகின்றேன். என்றுமே நமது ஈழ நாடு இந்த இலங்கைத் தீவு வறுமைப் பிணியிலிருந்தோ மற்ற எந்தக் கோணத்திலிருந்தோ முன்னேறப் போவதில்லை, மறு பக்கத்தில் பார்த்தால்இங்கு வாழும் சிறுபான்மையோருக்கு பல இன்னல்களையும், அநீதிகளையும் இளைத்தால் கண்டிப்பாக இந்நாடு அழிவுப்பாதையை நோக்கியே செல்லும்.

நம்மையாளுபவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் எங்களை மனிதாபிமானத்திற்குமுரணானமுறையில் நடத்துவதினால் காலப் போக்கில் நம்மை அடிமைப் படுத்திவிடலாமென்று நினைக்கின்றார்கள். அது ஒரு வெறும் பகற்கனவாகும். என்றுமே நடக்காதது. சாம்ராஜ்ஜியங்களும், சர்வாதிகாரிகளும் இவர்களைப்போல் அடக்குமுறைகளையும், ஆணவத்தையும் கட்டவிழ்த்து விட்டபடியால்தான் காலப் போக்கில் சரிந்துசாம்பலாகி விட்டனர். இதைத் தான் கடந்தகால சரித்திரம் நமக்கு எடுத்துக்கூறுகின்றது.

#### ஒத்துழைப்பு எப்பொழுது?

இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. இந்த ஒத்துழைப்பைப்பெறுவதற்கு பெரும்பான்மையினம் ஒருமித்த கருத்துடன் இதுவரை எங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த அடிப்படை ஜனநாயக ஆரம்ப உரிமைகளைத்தர முன்வரவேண்டும். நான் துணிந்து ஒன்று கூறுவேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்காவது, ஐக்கியதேசியக் கட்சிக்காவது அல்லது இலங்கை சமசமாஜக் கட்சிக்காவது தமிழ்பேசும் இனம் தன்னுடைய பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கும். எப்போதென்றால், எங்களையும் சகோதர தத்துவத்துடனும், சமத்துவத்துடனும் இவர்கள் நடத்த முன் வந்தால்.

நான் நகராண்மைக் கழக தலைவர் என்ற முறையில் கடமையாற்றும்போது ஒரு சிலருக்கு நல்லவைகளைச் செய்துவிட்டு, மற்றவர்களுக்குப் பாகுபாடு காட்டுகிறேன் என்று சில சிங்கள சகோதரர்கள் நியாயமற்ற முறையில் என்மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு அப்பாற்பட்டதும் அடிப்படை அற்றதுமாகும். நான் பாகுபாடு காட்டுகிறேன் என்பதை ஆழமாக சிந்திக்கும்போது எனக்கு அதிர்ச்சிதான் ஏற்படுகின்றது. பாகுபாடு காட்டும் முறையும், அழிவு முறையும் இன்று ஆளும் கட்சிக்குத் தான் உரிமைச் சொத்தாக விருக்கின்றது.

#### நமது சோக வரலாறு

1930ம் ஆண்டு முதல்இது வரை அரசாங்க சேவை

(9-ம் பக்கம் பார்க்க)

## படை கொண்டு வா!

—காசி. ஆனந்தன்—

கொடுமை சூழ்ந்தது தமிழா! ஒரு
கூட்டம் வளைத்துக் கொண்டது பாரடா!
அடிமை யாகவே கிடந்தாய்! உன்னை
ஆடு மேய்ப்பது போல் சில மானிடர்
தடிகொண் டடித்திட லாமோ? அட
தாயகம் மீட்கப் புறப்பட்டு வாடா!
விடுதலை பெற்று மடிவோம்! நாளை
வீட்டில் இருப்போர் விழாக்கள் எடுப்பரே!

நூறு மொழிகள் படிப்போம்! பிற
நூல்கள் அனைத்தும் விரும்பிப் படிப்போம்!
ஊறு படைக்கும் மொழியை மட்டும்
ஓட விரட்டி விரட்டி அடிப்போம்!
ஏறி மிதிக்க நினைப்போர் தமை
எட்டி உதைத்து நொறுக்கி எடுப்போம்!
ஆறு நடக்கும் நடைபோல் இங்கே
ஆட்கள் நடக்கப் படைகொண்டுவாடா!

உலகை ஆண்டவன் தமிழன்......அட!
ஊமை நிலையில் ஒய்வுகொண்டானடா!
அழகு செந்தமிழ் இனத்தின் புகழ்
அனைத்தும் மறந்து கிடந்தது நாடு!
நிலைமை உணர்ந்து விழிப்பாய்! தமிழ்
நெஞ்சம் மகிழப் புறப்பட்டு வாடா!
பழைய பெருமை படைப்போம்! ஒரு
பாடல் முழக்கி முழக்கடா சங்கம்!

அன்னை முலைப்பால் கொடுத்தாள்! களம்
ஆடிக் குதிக்கவே என்னைப் படைத்தாள்!
உன்னை ஒருத்தி படைத்தாள்......சீச்சீ
உண்டு கொழுக்கவோ எல்லாம் கொடுத்தாள்?
என்ன நினைத்துக் கிடந்தாய்......? படை
எடுத்துக் கிளம்ப மறந்த தமிழா!
செந்நீர் கொடுக்க வருவாய்! நாங்கள்
செத்து மடிந்தும் புகழ் பெறுவோமடா!

## தனித்து வாழும் தகுதி தமிழ் பேசுவோருக்குண்டு

இந்நாட்டில் வாழும் இரு மொழி பேசும் மக்களும் இணைந்து வாழ, வேற்றுமையில் ஒற்றுமை காணவல்ல கூட்டாட்சி முறையே உகந்ததாகும். இக்கூட்டாட்சி அமைக்கும் வழிவகைகளைத் தேடாது, ஏக சிங்கள வகுப்பு வெறியர்களின் கை ஓங்கிவரும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்கள் தனித்து இயங்க ஏற்றவழி அமைத்தேயாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டே தீரும். தனித்து வாழும் தகுதியும் பொருள் வளமும் எம்மிடம் இருக்கவே இருக்கின்றன.

திருமலையில் அண்மையில் கூடவிருக்கும் மாநாடு மீண்டும் பல முக்கிய பிரச்சினைகளைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் அமைகிறது.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையில் ஓரளவு மாற்றம் காணப்படுவது போல் தோற்றுவதைத் தவிர உண்

சி. மூ. இராசமாணிக்கம்



மையில் எந்த வித மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்களின் நோக்கம் தமிழ் பேசும் மக்களுடைய மொழி உரிமைகளைச் சட்டபூர்வமாகக் கொடுக்காது நிர்வாகரீதியாகச் சில வசதிகளை அளிப்பதேயாகும். இந்நிலையில்தான் இன்று அரசாங்கம் செயலாற்றிக் கொண்டு வருகின்றது. எமக்கு இது ஒரு ஆபத்தான நிலையையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு கொடுத்த கட்டாய ஒய்வுக் கட்டளைகளை வாபஸ் பெற்றது, அவர்களுடைய நல்லெண்ணத்துக்கு முன்னோடியாக இருக்கிறது என்று சிலர் கருதக்கூடும். உண்மையில் இது ஒரு கொள்கை மாற்றமாக அமையவில்லை.

பிரதேச சபைகளை ஆரம்பிப்பதாகக் கூறும் அரசாங்கம், அந்த வழிகளிலும் உறுதியான முயற்சி எடுப்பதாக இன்னும் தெரியவில்லை. எனவே நாம் மீண்டும் எம் நிலையினை ஆராய்ந்து உறுதியான தீர்மானங்களைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்,

#### அரசாங்கத்தின் தயக்கம்

அரசாங்கத்தின் பல தீவிர முயற்சிகளையும் செயல்களையும் ஓரளவு தணித்தும், தடுத்தும் நிறுத்திய பெருமை எமக்குண்டு. அரசாங்கம் தனது தீவிர கொள்கைகளை அமுல் நடத்தும் தன்மையில் நமது எதிர்ப்பைக் கணித்து பின் வாங்குவதையும் அவதானிக்கக் கூடியதாகவேயிருக்கிறது.

நாம் இந்நிலையில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எமது ஏகோபித்த எதிர்ப்பை ஒருமுகப்படுத்திக் காட்டுவதுதான் எதிர்கால முயற்சியாக அமைய வேண்டும். எமது ஒத்துழைப்பின்றி இந் நாட்டின் பொருளாதாரமோ, அபிவிருத்தியோ செயல்பட முடியாதென்ற உண்மையை பல ஆண்டுகளாக அரசாங்கம் உணர்ந்து வருகின்றது. சிங்கள மக்களும் கூட இந்த நிலையை நன்கு உணர்கிறார்கள். சிங்கள அரசியல்வாதிகள்கூட தாம் முன்பு இருந்த நிலையிலிருந்து மாறியிருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

#### துவேஷக் குரல்கள்

வெலிமடைப் பிரதிநிதி திரு. ராஜரத்ன, தம்பதெனியா பிரதிநிதி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா போன்ற வகுப்புவாதப் பிரதிநிதிகள், வகுப்புவாத தீவிர வாதிகள் மாத்திரமே துவேஷக் குரலை ஒழித்துக் கொண்டிருககின்றனரே தவிர மற்றைய அரசியல் வாதிகள் மாற்றமடைந்திருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் உறுதியும் திடசங்கற்பமும் இருந்தால் இந்நிலை மிகவும் துரிதமாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இப்பிரச்சினைகள் எவ்வாறு இருந்த போதிலும்

(13-ம் பக்கம் பார்க்க)


## பரீட்சைகளில் சித்தி பெற!

பரீட்சையில் சித்தி அடையவும், பாடங்கள் மனதில் பதியவும், சபைக்கோழைத்தனம் அகன்று திறமையான பேச்சாளராக திகழவும் சிறந்த வழி ஒன்று இருக்கிறது. வேண்டிய காரணங்களுக்கு யந்திரமந்திர வேலைகள் செய்துதரமுடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. விபரங்களுக்கு எழுதவும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கண்டி ரோடு,

கம்பளை.

# இனத்தின் விடுதலைக்கு திட்டங்கள் தாரீர்

## நமது தாயகத்தை காப்போம் வாரீர்

## தமிழரசுக் கட்சி மாநாட்டில் மாணிக்கராசா வரவேற்புரை

திருகோணமலையில் 'இராசவரோதயன் அரங்கில்' நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 9வது மாநில மாநாட்டில், தலைவர்களையும், பிரதிநிதிகளையும், பொது மக்களையும் வரவேற்று திருகோணமலைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. ம. மாணிக்கராசா நிகழ்த்திய வரவேற்புரையில் 'சிங்கள ஆக்கிரமிப்புக்கு தினே தினே இலக்காகி வரும் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைக் காப்பாற்ற முன்வரும்படியும், துரோகிகளுக்கும், சதிகாரர்களுக்கும் இடங்கொடாது தமிழ் பேசுமினத்தின் விடுதலைக்காக திட்டங்களைத் தீட்டும்படியும்' கேட்டுள்ளார். அவர் நிகழ்த்திய வரவேற்புரையின் விபரம் வருமாறு:

தமிழ் பேசும் தேசிய இனத்தின் தந்தையவர்களே!

தமிழரசுக் கட்சித் தலைவரவர்களே! உறுப்பினர்களே! தொண்டர்களே!

மாநாடு நடத்த திருகோணமலைக்கு வந்த உங்கள் அனைவரையும் வருக! வருக!! திட்டம் தருக!!! என வரவேற்கிறேன்.

நீங்கள் இதற்கு முன்பும் மூன்று தடவை இங்கு வந்திருக்கிறீர்கள். மூன்று மாநாடுகள் நடத்தியிருக்கிறீர்கள். முக்கிய முடிவுகள் எடுத்திருக்கிறீர்கள்.



திரு. சு. ம. மாணிக்கசராசா

### இருவரை இழந்தோம்

நீங்கள் முன்பு வந்த பொழுதில் இங்கு கண்ட காட்சிகளை இப்பொழுது காண முடியாது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப காலம் முதல் பெருந்தூணாக விளங்கி, கட்சியை இங்கு வழி நடத்திச் சென்ற திருகோணமலையின் தவப்புதல்வன் திரு. இராசவரோதயத்தின் அழகிய இனிய முகத்தை நீங்கள் காண முடியாது. சரித்திரப் பிரசித்தி பெற்ற திருகோணமலை யாத்திரையின் பொழுது உங்களை இந்நகருக்கு வரவேற்று, பின்பு கட்சியின் தொண்டனாகி அமரராகிவிட்ட திரு. ஏகாம்பரத்தின் எழில் வதனத்தை நீங்கள் காண முடியாது.

இந்த இருவரினது இழப்பினாலும் ஏற்பட்ட வெற்றிடத்தைப் போன்றே திருகோணமலையின் எதிர்காலமும் பாலைவனமாகத் தோன்றுகிறது. அழகும் திருவும் செழிக்க செந்தமிழ் முழங்கிய மண்ணிலே இன்று பிற இன மக்கள் ஆதிக்கம் பெருகி வருகிறது. 1951ம் ஆண்டிலோ, 1955ம் ஆண்டிலோ, அல்லது 1956-ம் ஆண்டிலோ நீங்கள் இங்கு வந்த பொழுது இப்பகுதித் தமிழ் பேசும் மக்களிடையே இருந்த பெருநம்பிக்கையை, இப்பொழுது காண முடியாது.

### சிங்களக் குடியேற்றம்

சிங்கள அரசாங்கத்தின் திட்டமிட்ட இனக்கொலைத் திட்டமான குடியேற்றத் திட்டங்களுக்குப் பெரிதும் பலியாகி வருவன திருகோணமலை மண்ணும் இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களுமேதான். இந்தச் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை விட அரசாங்கத்தினதும் சில அரசாங்க அதிகாரிகளினதும் அனுசரணையோடு சில இரகசிய இயக்கங்களின் ஆதரவில் இங்கு பெருமளவில் சிங்கள மக்கள் பலாத்காரமாகக் காடுகளை அழித்துக் குடியேறி எமது மண்ணைக் கொள்ளை கொள்ளுகிறார்கள். இவ்வித சிங்கள பலாத்காரக் குடியேற்றம் திருகோணமலைத் தொகுதியிலும் மூதூர் தொகுதியிலும் தினே தினே நடந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக சொத்துக்கள் இந்த ஆக்கிரமிப்புக்குப் பலியாகி வருகின்றன. உதாரணத்துக்குப் பெரியகுளம் நந்தனார் கோவிலைச் சுற்றிச் சிங்கள பௌத்தர்கள் பலாத்காரமாகக் குடியேறுகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கிறது. அதே நேரத்தில் இப்பகுதியிலுள்ள காணியில்லாத மக்கள் உறுதிக் காணிகளைக் கூட வெட்டித் திருத்த முற்பட்டால் அங்கே பொலீஸ் பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டுத் தமிழ் பேசும் மக்கள் இம்சிக்கப்படுகிறார்கள். இதற்கு மூதூர்த் தொகுதியிலுள்ள திருமங்களாய் என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி நல்ல சான்றாக இருக்கிறது.

### திட்டம் தருக

தவிர, பதவியா குடியேற்றத் திட்டத்தில் வசிக்கக் கூடிய பல ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைத் திருகோணமலைத் தொகுதி வாக்காளர் பட்டியலிலே சேர்த்திருக்கிறது அரசாங்கம். வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதைத் தவிர இவர்களைக் குடியேற்றத் திட்டத்துக்குத் தெரிந்தெடுப்பதும், திட்டத்தை நடைமுறையில் கொண்டு செல்வதும் ஆகிய பொறுப்புக்கள் அனைத்தும் அநுராதபுர மாவட்ட அதிபரினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. வாக்காளர் பட்டியலில் மட்டும் இவர்களைத் திருகோணமலைத் தொகுதிக்குள் சேர்த்திருக்கிறார்கள். இதுவும் திருகோணமலையை அபகரிக்கும் சூழ்ச்சியின் ஓர் அம்சம்தான். மொத்தத்தில் இன்று திருகோணமலை, சிங்கள ஏகாதிபத்தியத்தின் கைகளிலே சிக்கிச் சீரழிந்த நிலையிலே காட்சி தருகிறது.

இங்கு வாழையடி வாழையென வாழ்ந்த தமிழ்த் தாயின் மக்கள் வாழ்வும் வளமும் பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விடுமோ என்ற ஏக்கத்தோடு நிற்கும் நாம் தமிழ்த்தாயின் மானங்காத்து, தமிழ் பேசும் மக்களின் சுயாதீன உரிமைகளுக்காக ஓய்வும் ஒழிதலும் இன்றி பாடுபடும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் தொண்டர்களையும் வரவேற்கும் இந்நேரத்தில் எமது துயரத்தையும் எடுத்துச் சொல்லி எங்களுக்கும் நம்பிக்கை தரக்கூடிய திட்டங்களை மேற்கொள்வீர்களென எதிர்பார்ப்பது இயற்கையே. ஆபத்தின் ஆழத்தை நன்கு உணர்ந்தமையினாலேயே உங்களை 'வருக வருக' என நல்வரவு கூறி வரவேற்க வந்த நான் எனது வரவேற்புரையின் ஆரம்பத்திலேயே இப்பிரச்சினை குறித்துப் பேசுகிறேன்.

தமிழ் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்துள்ள நீங்கள் எங்கள் துயரை எல்லாத் தமிழ் பேசும் மக்களிடமும் எடுத்துச் சொல்வீர்களென எதிர்பார்க்கிறோம். வெவ்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழ் பேசும் மக்களை நீங்கள் இங்கு கொண்டு வந்து குடியேற்ற வேண்டும். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமிருந்து கொண்டு திருகோணமலையைக் காப்பாற்றிவிட முடியாது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதர தமிழ் பேசும் மக்களோடு உள்ளத்தாலும், உணர்வாலும், இரத்த பாசத்தாலும் ஒன்று சேர்ந்த திருகோணமலைத் தமிழ் பேசும் மக்கள் அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைவர்.

இன்று தமிழ்பேசும் இனத்தின் முழு முதற் கடமை தங்கள் தாயகத்தைக் காப்பாற்றுவது. இதில் திருகோணமலையைக் காப்பாற்ற வேண்டியதின் அவசியத்தை நீங்கள் உணர்வீர்களென நினைக்கிறேன். எனவே இதை மனதில் வைத்து வேண்டிய திட்டத்தைத் தயாரிப்பீர்களென எதிர்பார்க்கிறேன். தமிழரசுக்கட்சியின் தகர்க்க முடியாத அரணாக விளங்கும் திருகோணமலை மக்கள் சார்பில் எங்கள் தாயகத்தைக் காப்பாற்ற உதவுங்கள் என்று உரிமையோடு கேட்கிறேன்.

### அன்றைய தீர்மானமும் இன்றைய........

1956ம் ஆண்டு இதே திருகோணமலையில் வரலாற்றுப் புகழ் பெற்ற மாநாட்டை நடத்தித் தமிழ்பேசும் மக்கள் சார்பில் அவர்கள் மொழி உரிமை, குடிஉரிமை, நில உரிமை, ஆட்சி உரிமை என்ற நான்கு உரிமைகளையும் ஓராண்டு கால எல்லைக்குள் அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்ற கெடுவைச் சமர்ப்பித்தீர்கள். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை எமது இனத்தின் வாழ்வு மேலும் மேலும் தாழ்ந்து தான் வருகிறது. இந்த நிலை இன்னும் நீடித்தால் எமது இனம் அழிந்து ஒழிந்து போவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

### நமது பண்பு

திருகோணமலை மண் தமிழரசுக்கட்சிக்கு எப்பொழுதும் புதிய உற்சாகத்தைக் கொடுப்பது. தமிழரசுக்கட்சியின் மூவர்ணக் கொடியின் மாண்புக்காக தனதுயிரைத் தந்து தியாகத்துச் சின்னமாக விளங்கும் தியாகி நடராசனால் புகழ் பெற்ற இடம் திருகோணமலை. திருகோணமலை மக்கள் வந்தாரை வாழ வைத்து விருந்தோம்பும் பண்பாடு மிக்கவர்கள். அவர்கள் சார்பில் உங்களை அன்புடன் வரவேற்கிறேன். இந்த அன்பு உள்ளங்களின் உபசாரத்தினால் உற்சாகம் பெற்று இம்மண்ணுக்கே உரிய உரிமை வேட்கையையும் பெற்று, அழிந்துவரும் தமிழ் பேசும் இனத்தின் எழுச்சிக்கான திட்டங்கள் தயாரியுங்கள், எங்களையுங்காப்பாற்றுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நேர்மையும் நிதானமும் மிக்க தந்தையவர்களின் தலைமையிலே பல ஆயிரக்கணக்கான தன்மான இளைஞர்களும் முதியவர்களும் திருகோணமலையில் கூடித் துரோகிகளுக்கோ சதிகாரர்களுக்கோ அஞ்சாது தமிழ் பேசுமினத்தின் விடுதலைக்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள் என்ற பெரு நம்பிக்கையில் உங்களை மனமுவந்து திருகோணமலை மக்கள் சார்பில் வரவேற்கிறேன்.

---

திருமலை

# நகராண்மைக் கழகத்திற்கு அமைச்சரவை உபகுழு சவால்

## ஆங்கிலத்திற்கு கொடுக்குமிடந்தானும் தமிழ் மொழிக்கு வழங்கப்படமாட்டாது

## அமைச்சருக்கு வரவேற்புக் கொடுத்தோர் இதை அறிவார்களா?

மொழிப் பிரச்சினை மூன்று மாதத்தில் தீர்க்கப்படு மென்றும், தமிழர்கள் சிறிதளவும் அஞ்ச வேண்டியதில்லை யென்றும், சமசமாஜக் கட்சி சம அந்தஸ்துக் கொள்கையைக் கைவிடவில்லை யென்றும் அமைச்சர் அனில் முனசிங்கா சுன்னாகத்தில் கூறியுள்ளார். ஆனால் சமசமாஜக் கட்சித் தலைவரும் நிதி அமைச்சருமான டாக்டர் பெரேரா தீவிர வகுப்புவாதியாக மாறி தமிழ் பேசும் மக்களை ஒழித்துக் கட்டும் முயற்சிகளைத் தினே தினே எடுத்து வருகிறார். இதை உணராத சிலர் அமைச்சருக்கு ஆலவட்டம் பிடித்தனராம். சுன்னாகத்தில் கூறிய இதே கருத்தை அமைச்சர் அனில் முனசிங்கா சிங்களப் பகுதியில் கூறுவாரா? நிதி அமைச்சர் முக்கியமாக அங்கம் வகிக்கும் அமைச்சரவை உபகுழு, தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி போக்கு வரத்து அமைச்சர் விளக்கம் கூறாதது ஏன்?

பூங்குன்றன்

சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடாத்துவதற்காக நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா, கல்வி அமைச்சர் கலுகல்லை, நீதி அமைச்சர் ஜி. சி. ரி. ஏ. டி சில்வா ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை உப குழு இருவாரங்களுக்கு முன்னர் கூடி பல இனவொழிப்பு நடவடிக்கைக்கான முடிவுகளை எடுத்திருக்கிறது.

### திருமலை நகராண்மைக் கழகம்

சிங்களக் காசோலைகளை ஏற்க மறுத்துவரும் திருமலை நகராண்மைக் கழகத்தின் மீது உள்ளூராட்சி அமைச்சர் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், திருமலை நகரசபையின் போக்கு நியாயமற்றது என்றும் இந்த உப குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ் பிரதேசத்திலுள்ள ஒரு நகரசபை தமிழில் கருமமாற்றுவதை முறியடிக்க, சிங்கள அரசு சிங்கள மொழியில் காசோலைகளை அனுப்பி வருகிறது. இதை அந்தநகரசபை ஏற்க மறுக்கிறது. ஏற்க மறுத்து உரிமையை நிலைநாட்ட முற்பட்டிருக்கும் நகரசபை மீது, கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிறது அமைச்சரவை உப குழு.

மொழிப் பிரச்சினையை இரு பகுதி மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் சுமுகமாகத்தீர்க்க விரும்புவதாகக் கடந்த திங்களில் நிகழ்த்திய அரியணை உரையில் அரசு வலியுறுத்தியிருக்கிறது. ஆனால், ஒரு திங்கள் இடைவெளிக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாகத்திற்கு அமைச்சரவை சவால் விடுத்துள்ளது.

இரு சமூக மக்களும் இணங்கி வாழ ஏற்ற முடிவு இதுதானா என்ற கேள்வி அரசியல் அரங்கில் கேட்கப் படுகிறது. கூட்டரசாங்கம் சிறுபான்மையினர் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காணும் என்று ஒரு சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். ஆனால் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் இனவொழிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்

(13-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தமிழரசுக்கட்சி இல்லையேல் தமிழர்க்கு வாழ்வு இல்லை

## பர்மியத் தமிழர் பெருத பாக்கியம் இலங்கைத் தமிழர் பெற்றுள்ளனர்

'பர்மாத் தமிழர்களுக்கு கிடைக்காத பாக்கியம், இலங்கைத் தமிழர்களுக்கு கிடைத்தது குறித்து அவர்கள் பெருமைப்பட வேண்டும், பூரிப்படைய வேண்டும். இலங்கையில் தமிழரசுக் கட்சி இல்லை யென்றால் அங்கு தமிழர்களும் இல்லை, தமிழர்களுக்கு வாழ்வும் இல்லை. பர்மாத் தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி தான் இங்குள்ள தமிழர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்' என்கிறார் தென்னகத்திலிருந்து வெளியாகும் முன்னணி அரசியல் வார ஏடான 'மாலை மணி'யின் ஆசிரியர் பி. எஸ். இளங்கோ.

இலங்கைத் தீவைப்பற்றி எண்ணவோ, எழுதவோ ஆரம்பித்தால், ஒரே ஒரு உருவம்தான் நம் மனக் கண் முன்னே தோன்றி களித்திடச் செய்கிறது!

சிங்க நோக்கும், செந்தமிழ் உள்ளமும்கொண்ட இலங்கைத் தமிழ்ப் பெரியாரைத்தவிர, வேறு யாரைத்தான் நம்மால் நினைக்கமுடியும், நினைத்து மகிழமுடியும்!



பி. எஸ். இளங்கோ

### அறிஞர் அண்ணாவும் தமிழரசுத் தந்தையும்

இனப்பற்றும், மொழிப் பாசமும், விடுதலை உணர்வும் கொண்ட ஒவ்வொருவரும் தமிழ் பெரியார் திரு. செல்வநாயகத்தை, அவரது பணியை எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியாது!



அறிஞர் அண்ணா

தமிழகத்தில் எப்படி அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி ஏகாதிபத்திய வெறியர்களோடுபோராடி, தொல்லைகளையும், துயர்களையும் அனுபவித்து, தமிழையும், தமிழ்ப் பெருங்குடி மக்களையும்பாதுகாத்து வருகிறதோ அதே போல்—

இலங்கைத் தீவிலும், தமிழ்ப் பெரியார் திரு.செல்வநாயகத்தின் தலைமையின் கீழ் இயங்கிவரும் தமிழ் அரசுக்கட்சி சிங்கள வெறியர்களோடு போராடி தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் காத்து வருகிறது. இந்த உண்மையை ஊரும் உலகமும் அறியும்!

### கடமை வீரர்

இலங்கையில் திருமதி பண்டா சர்க்கார் எல்லாத் துறைகளிலும் தமிழர்களை ஒழித்துக்கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறது! தமிழர்களுக்குசெய்யாத தீங்கில்லை, இழைக்காத கொடுமைகள் இல்லை!

தமிழ் மொழியை அழித்துவிட்டு, தமிழ்மக்களைஒழித்து விட்டு—சிங்களத்தையும், சிங்களவர்களையும் வாழ்விக்க திட்டம்போட்டு பணியாற்றி வருகிறது, சிங்கள சர்க்கார்.

இந்தக் கொடுமைகளிலிருந்து தமிழ்மொழியையும், தமிழர்களையும் காப்பாற்றிவரும் ஒரே ஒரு இயக்கம் தமிழரசுக் கட்சிதான்!

சிங்கள வெறியர்களின் அடக்கு முறைக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் அஞ்சாமல் அயராமல் இந்த இயக்கம் பணியாற்றி வருகிறது!

துப்பாக்கி சூடு நடத்திய நேரத்திலும், சிறையிலே பூட்டிய நேரத்திலேயும் தமிழ்த் தலைவர்கள் கலங்கவில்லை. கண் அயராமல், கடமையைச் செய்து வந்திருக்கின்றனர்!

### பர்மாவும் இலங்கையும்

இலங்கையில் தமிழரசுக் கட்சி இல்லையென்றால், அங்கு தமிழர்களும் இல்லை, தமிழர்களுக்கு வாழ்வும் இல்லை. பர்மா தமிழர்களுக்கு ஏற்பட்ட கதிதான் இங்குள்ள தமிழர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்!

பர்மாவில் ஒரு தமிழரசுக் கட்சி இருந்திருந்தால், பர்மாவில் ஒரு செல்வநாயகம் தோன்றியிருந்தால் இந்த இழி நிலை நிச்சயம் ஏற்பட்டிருக்க முடியாது! பர்மா சர்க்காரோடு போராடி, நட்டஈடு தொகையாவது பெற்றிருக்க முடியும்!

பர்மா தமிழர்களுக்கு கிடைக்காத பாக்கியம், இலங்கைத் தமிழர்களுக்கு கிடைத்தது குறித்து அவர்கள் பெருமைப்படவேண்டும், பூரிப்படையவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் விடுதலை இயக்கமாக விளங்கிவரும் தமிழரசுக் கட்சியைக் கண்ணும் கருத்துமாக இருந்து வளர்த்து வருவது இலங்கைத் தமிழர்களுடைய நீங்காதகடமையாகும்!

தமிழரசுக்கட்சியின் ஒன்பதாவது மாநில மாநாடு நடைபெறஇருக்கின்ற இந்த நேரத்தில் இதனைக் கூறுவது எங்களது கடமை என்றும் கருதுகிறோம்!

### சுதந்திரன் பணி

ஒரு இயக்கம் எவ்வளவு தான் வலிவோடும் பொலிவோடும் இயங்கிவந்தாலும் அந்த இயக்கத்திற்கு பத்திரிகைகளின் பலம் இல்லாவிட்டால் உண்மை நிலையை மக்களால் புரிந்துகொள்ள முடியாது என்பதை உணர்ந்து 'சுதந்திரன்' வார ஏடு தமிழரசுக் கட்சியின் கொள்கைகளைப் பரப்பி, தமிழ்மக்களை தட்டி எழுப்பி அவர்களை விழிப்படையச் செய்யும் பெரும் பணியை மேற்கொண்டிருக்கிறது.

### புதிய திட்டம் வேண்டும்

மாநில மாநாட்டின் மலரினை வெளியிடுவதன் மூலம் மேலும் தமிழ் மக்களின் அன்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை! நாங்களும் வாழ்த்துகிறோம்!

தமிழரசுக் கட்சியின் மாநில மாநாட்டில் மேலும் பல நல்ல திட்டங்களைத் தீட்டி தமிழ் மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ்த் தலைவர்களை வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்!



தமிழ்ப் பெரியார்

## படையிலே பலபேர் உண்டு

—கனகம்—

சேரனு நாட்டில் இல்லை
சிங்கமா யெங்கும் உள்ளார்!
வீரனும் கனகன் கர்வம்
வீழ்த்திய கல்லா இல்லை;
ஆரடா தம்பி யுன்னை
அடக்கிட வல்லார்? இன்னும்
பாரமா யிருத்தல் வேண்டாம்
படையுடன் எழுவா யின்றே!

சோழனு நம்முள் இல்லை;
சுற்றியுள் ளார்கள் நாட்டில்!
ஆளநாம் பிறந்தோம் சோழர்
அலைகடல் ஓசை சொல்லும்!
ஈழமும் தமிழும் மூச்சில்
இரண்டறக் கலந்து போச்சு!
கூழனு தமிழன்? இன்றே
கொள்ளடா தனியோர் ஆட்சி!

பாண்டியன் போன்றோர் எங்கள்
படையிலே பலநூ றுண்டு!
நீண்டநாள் பொறுத்தோம்; அன்பு
நெறியினைக் காத்தோம்! பாரில்;
ஆண்டநாம் கையைக் கட்டி
அடுப்படி குந்துகின் றோம்!
வேண்டுவோம் தனியோ ராட்சி
விழியெனும் தமிழ்நே ராட்சி!

மார்பிலே பாய்ந்த வேலின்
வடுவினை மாற்றும் நாவற்
கார்விழி மாதர் பொன்னின்
கனியெனும் கொங்கை உண்டு!
நேரிலே யணைத்து உந்தன்
நெற்றியில் திலகம் சூட்டத்
தூரமே யில்லைக் காலம்!
துணிவுடன் எழுவா யின்றே!

தமிழனுக்(கு) ஈழம் தன்னில்
தனி வழி யாட்சி வேண்டும்!
அமிழ்தெனும் மொழியால் பீடம்
ஆளவும் வேண்டும்! நீதி
இமிழ்கடல் தாண்டிப் பாரில்
இலங்கிட வேண்டும்! ஆதி
தமிழிலே தாலாட்டும் சாத்
தவிலொலி முழங்க வேண்டும்.

## மொழியால் இணைந்த இனங்கள் உரிமை பெற ஒற்றுமை அவசியம்

'தம்மினம்' எனத் திமிர் கொண்டு வாழும் ஓரினமும், 'தம்மினத்துக்கு உரிய இடம் கிடைக்கவில்லையே' எனத் திகில்கொண்டு வாழும் இன்னொரு இனமும் இருக்குமிடத்தில்தான் இரு இனங்கள் ஒன்றையொன்று சந்தேகக் கண் கொண்டு பார்த்து வாழும் நிலை நிலவ முடியும். இந்நிலையினால் உருவான அருவருக்கத்தக்க சாதிப் பிரிவினையும் இனபேதமும் பாரபட்ச நடவடிக்கைகளும் நம் சமூகச் சாக்காடுகளாக இன்று தலைவிரித்தாடுகின்றன. இதனின்றும் விடுதலையடைய முனைவதுதான் தமிழ் பேசும் மக்களின் இன்றைய தலையாய கடமையாகும்.

இலங்கையில் இன்று சிறுபான்மையினராக வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் தமிழ் பேசும் மக்கள் எனும் ஓரினமாக இணைக்கப்பட்டுள்ளனர். இவ்விரு சிறுபான்மையினரும் இவ்விணைப்பினால் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்த முற்காலமெல்லாம் பெரும்பான்மையினரால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலை நெடிது நீடிக்கவில்லை. தமிழ் பேசும் மக்களிடையே தமிழர்கள், முஸ்லிம்கள் என்றும், அவர்களுள்ளும் கொள்கை வேறுபாடு காரணமாகப் பல பிரிவினர்என்றும் பிளவு தோன்றியதனால் இச் சிறுபான்மையினர் இன்று அலட்சியமாக ஒதுக்கித் தள்ளப்பட்டு இந்நாட்டின் மூன்றாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர்.

மூதூர் முதல்வர்
ஜனாப் எம். ஈ. எச்.
முகம்மதலி



மொழி விஷயத்தில் முஸ்லிம்கள் பிளவுபட்டால் அல்லது பிரிந்தால் மிகப் பலவீனமான இவ்வினம் இலகுவாகக் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இலங்கை வாழ் முஸ்லிம்களுடைய தாய் மொழி தமிழேயாதலால் இம்மொழி காக்கப்பட வேண்டும். இன்றைய நிலை என்னவென்றால், சிறுபான்மையினரான எமது தாய் மொழி உரிமை அபகரிக்கப்பட்டுவிட்டது. எமது பிறப்பிடம் பறிக்கப்பட்டுவிட்டது.

### அபாயத்தின் அறிகுறி

குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரால் இத்தமிழ் பேசும் மக்களின் பரம்பரைப் பதிவிடங்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. பண்படுத்தப்படாத நிலம்

(10-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரன்

SUTANTIRAN

1964 ஆகஸ்டு மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411    த. பெ. 1183


## புதிய திருப்பம் வேண்டும்

தமிழரசுக் கட்சியின் 9-வது மாநில மாநாடு திருமலையில் ஆரம்பமாகியுள்ளது. இம் மாநாட்டின் முடிவுகளைத் தமிழ் பேசும் இனம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது. பர்மாவின் நாடுகடத்தும் படலத்துக்குப் பின்னர், ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தில் பெரிதும் கவலை கொண்டுள்ள தென்னக மக்களும் மாநாடு என்ன வழி காட்டப் போகிறது என்பதில் அக்கறை காட்டுவதாகச் செய்திகள் கூறுகின்றன. தென்னிலங்கைச் சிங்கள மக்களும் குறிப்பாக இம்மாநாட்டில் விசேட சிரத்தை கொண்டுள்ளனர்.

மாநாடு முக்கியத்துவம் பெற மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று தமிழ் பேசும் இனத்தின் சுதந்திரப் போராட்டப்பாதையில் ஒரு தீர்க்கமான கட்டத்தில் மாநாடு கூடுவது; மற்றொன்று, வரலாற்றுப் புகழ் பெற்ற திருகோணமலையில் மாநாடு நடைபெறுவது; பிறிதொன்று, திரு. செல்வநாயகம் அவர்கள் கட்சியின் தலைமையை மீண்டும் ஏற்றுக்கொண்டிருப்பது. கூட்டரசாங்கம் ஏற்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது தமிழரசு மாநாடென்பதால் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது.

கோணேசர் பெருமான் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள திருமலைப் புண்ணிய பூமி சுதந்திரப் போராட்ட வரலாற்றிலும் புகழ் பெற்றதாகும். 1956-ல் திருமலையில் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கட்சி மாநாடும், திருமலை யாத்திரையும் இன்னும் நம் கண்முன் நிற்கின்றன. இராசவரோதயர், ஏகாம்பரனர் போன்ற தவப் புதல்வர்கள் பிறந்த திருமலை மண்ணை இன்று சிங்கள ஆட்சியாளர் துரிதமாக ஆக்கிரமித்து வருகின்றனர். இந்த நிலையில்தான் தமிழரசு மாநாடு திருமலையிற் கூடுகிறது.

இன்று தமிழ் பேசும் இனத்தைப் பேராபத்து சூழ்ந்துள்ளது. குடியுரிமைச் சட்டம், தனிச் சிங்களச் சட்டம், காணிச் சட்டம், குடியேற்றத் திட்டம் ஆகியவை இனத்தைப் படிப்படியாக அழித்து வருகின்றன. இந்த அழிவைத் துரிதப்படுத்த மலையகத் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனு மொழியாக்கவும் தமிழ்ப் பகுதிகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர் படையொன்றினை அனுப்பவும் அரசாங்கம் துணிந்து விட்டது. தனிச் சிங்களச் சட்டத்தின் கொடுமை நாளுக்கு நாள் கூடுவதுடன், சிங்களத் திணிப்பும் பல்வேறு உருவங்களில் நடைபெறுகிறது.

இத்தகைய இருள் சூழ்ந்த இக்கட்டான நிலையில்தான் திரு. செல்வநாயகம் அவர்கள் மீண்டும் கட்சித் தலைமையை ஏற்றுள்ளார். நெருக்கடியான இவ் வேளையிலே அவரது அரசியல் அறிவும், அனுபவமும் வழிகாட்டுதலும் மிக மிகத் தேவை என்பதை உணர்ந்தே மீண்டும் அப் பொறுப்பை அவர்மீது சுமத்தியுள்ளனர்.

அடுத்துவரும் ஆண்டு நமது உரிமைப் போராட்டத்தின் வரலாற்றிலே மிக முக்கியமானதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. அபகரிக்கப்பட்ட உரிமைகளை மீட்பதற்காகத் தீர்க்கமான போராட்டங்களை நடத்தவேண்டிய நிலை இன்று உருவாகிவருகிறது. தமிழரசுத் தலைமையின் கீழ் கடந்த காலத்தில் மக்கள் நடத்திய மாபெரும் போராட்டங்களின் விளைவாகவே இன்று நம் உரிமைப் பிரச்சினை உச்சக் கட்டத்தில் இருக்கிறது. இல்லையேல் என்றோ உரிமைப் பிரச்சினையும் மடிந்து, இனமும் ஒழிந்துபோயிருக்கும். இப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வைப் பெற்றேயாகவேண்டும். அதற்கான சிறந்த திட்டங்களைத் தான் திருமலை மாநாட்டிலிருந்து மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்பேசும் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனு மொழியாக்கும் முயற்சி முறியடிக்கப்படவேண்டும். தமிழ்ப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். இதற்கான உடனடித் திட்டங்களையும் மாநாடு வகுக்கவேண்டும்.

இன்று நிர்வாக நடவடிக்கைகள் மூலம் சிற்சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இதனுல் தமிழ்பேசும் மக்களுக்கு மிகச் சாதகமான சூழ்நிலை தோன்றிவிட்டதெனக் கருதி ஏமாந்துவிடக் கூடாது கொடுக்கப்படும் சலுகைகள் மீண்டும் அபகரிப்பதற்கு இடமுண்டு.

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வுக் கட்டளை ஓராண்டு காலத்துக்கு பின் போடப்பட்டுள்ளது ஓராண்டுக்குப் பின்னர் அவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள்.

தூக்குத் தண்டனை பெற்ற ஒரு கைதியைத் தூக்கிலிடும் திகதி, தூக்குமேடை பழுதுபார்த்தல் போன்ற சில காரணங்களுக்காக ஒரு வருடத்துக்குப் பின்போடப்பட்டதைப் போன்றதே இந்த நடவடிக்கை.

காலணி அணிய ஒரு அடிமையை அனுமதிப்பதால் அவனுடைய அடிமைத்தனத்திலிருந்து அவன் விடுதலை பெறவே முடியாது. அம்மாதிரி சில்லறைச் சலுகைகளால் அடிப்படை உரிமைகளைப் பெற முடியாது. சட்டங்களாலும் அரசியற் சட்டத்தாலும் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையேல் சில்லறைச் சலுகைகள் தமிழ் பேசும் இனத்தை அடிமைப்படுத்தும் திட்டத்துக்கு ஆக்கமளிப்பதாகவே இருக்கும். எனவே கிடைக்கும் சில்லறைச் சலுகைகளுடன் திருப்தியடைந்து மேலும் அம்மாதிரி ஏதாவது கிடைக்காதா, இச்சலுகை உரிமைகளைப் பெற வழி காட்டாதா என்றெல்லாம் எதிர்பார்ப்பது கோழைத்தனம், மதியீனம், மக்களைக் காட்டிக்கொடுக்கும் இனத்துரோகம்.

வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக வேண்டும். குடியுரிமைச் சட்டத்தையும் தனிச் சிங்களச் சட்டத்தையும் ஒழித்துவிடவேண்டும். ஒரு சமஷ்டி ஆட்சி முறையால்தான் இது சாத்தியமாகும். அந்த ஆட்சி முறை வரும்வரை காத்திருக்காமல், நாமே அதனைக் கொண்டு வரவேண்டும். இதற்கு மாநாடு வழிகாட்டவேண்டும். தன்மானமுள்ள தமிழ் பேசும் இனம் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்து அவர்களை எஜமானர்களாக ஏற்றுக்கொண்டு, அடிமைகளாக இந்நாட்டில் வாழ முடியாது. சம உரிமை பெற்று சம அந்தஸ்துடன் சிங்கள இனத்தோடு சரிநிகர் சமானமாக தலை நிமிர்ந்துதான் இங்கு வாழமுடியும். அதற்காக எத்தகைய தியாகங்களைச் செய்யவும் தமிழ் பேசும் இனம் தயாராயிருக்கிறது.

இதனைக் கருத்திற்கொண்டு அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து திட்டவட்டமான முடிவுகளை மாநாடு செய்யுமென எதிர்பார்க்கின்றோம்.

# திட்டம் தருமா திருமலை?

மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்க வெறிக்குப் பலியாகி அல்லலுற்ற நாடுகளில் இலங்கையும் ஒன்று. அடிமைத்தளையை அகற்றுவதற்காக ஏனைய கிழக்கு நாடுகள் எண்ணற்ற போராட்டங்களை நடத்தின. எதுவிதமான புரட்சியும் செய்யாது இலங்கையும் ஓரளவு விடுதலை அடைந்தது.

இலங்கையின் விடுதலைக்காக சிறிதளவாவது முயற்சி எடுத்தவர்கள்—சுதந்திர தாகங்கொண்டு உரிமை வேட்கை கிளப்பியவர்கள், தமிழர்களேயாவர்.

சுதந்திர ஆட்சிக்கான சாசனத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இலங்கைக்கு வழங்கியபோது இந்நாட்டின் தேசிய—அரசாங்க மொழியாக தமிழும் சிங்களமுமே இருக்கும் என்பதனை அன்றைய அரசியல்வாதிகள் அனைவரும் ஏகோபித்து வரவேற்றனர்.

ஏகோபித்த ஒப்புதலை அளித்த பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்களச் சகோதரர்கள் அந்தரங்க சுத்தியுடன் நடந்துகொள்ளவில்லை—மர்மமான திட்டங்களுக்கு மூடுதிரை இட்டே வாக்களித்தனர் என்ற உண்மை புலப்பட காலம் அதிகம் தேவைப்படவில்லை. உள்ளத்தின் அடித்தளத்தில் உறைந்து கிடந்த சூழ்ச்சி—சிறுபான்மையினரை வேரோடழிக்கும் எதேச்சாதிகார ஆசை—மெல்ல மெல்ல சுயரூபமெடுத்தது.

'வெளுத்ததெல்லாம் பால்', 'மின்னுவதெல்லாம் பொன்' என்றெல்லாம் தமிழ் மொழியில் பழமொழிகள் இருந்தும், அம்மொழியை தாய்முலைப்பாலுடன் உண்ட தமிழ்பேசும் மகன் தெரிந்தும் தெரியாதவனுக, புரிந்தும் புரியாதவனுக சூழ்ச்சி வலையில் தானே விழுந்துவிட்டான்.

பதவி ஆசையாலும், குலத்தைக் காட்டிக்கொடுக்கும் கொடூர புத்தி படைத்திருந்தமையினுலும் சிலர் காட்டிக்கொடுப்பவர்களாக மாறி விட்டனர்.

சட்டபலம் கொண்டவர்களின் ஆசை படிப்படியாக நிறைவேறியது. அந்நியர்களின் அடிமைவிலங்கு அகற்றப்பட்டு அயலவனின் அடிமைத்தளை பூட்டப்பட்டு தமிழ்பேசும் சமுதாயம் இன்று சரணடைவதா, அல்லது செத்துத் தொலைவதா என்ற இறுதிக் கட்டத்தில் நிற்கிறது.

### உரிமைப் போர்

இலங்கைத் தமிழ்பேசும் இனத்தின் இன்னல்களைத் துடைத்தெறிந்து உரிமையினை நிலைநாட்டுவதற்கான ஏற்ற அரசியல் சாசனத்தை அமைக்க அரும்பாடு பட்டு வருகிறது தமிழரசுக்கட்சி.

1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோன்றியதெனினும் கட்சியின் உரிமைப்போர் முழக்கம் 1956ம் ஆண்டு ஜூன் 5ம் திகதிதான் ஆரம்பமாகியது. சிங்களம் மட்டும் சட்டத்தைச் சட்டசபையில் கொண்டு வந்த அன்றைய தினம் காலிமுகக் கடற்கரையை உரிமைப் போர் புரியும் காளையரின் குருதி கடுஞ்சிவப்பாக்கியது. தமிழரசுத்தலைவர்களும் தொண்டர்களும் கொட்டும் மழை நீருடன் தங்கள் பச்சை இரத்தத்தையும் இரண்டறக் கலக்கவிட்டனர். இலங்கையின் கிழக்கில் எழுந்த சிங்களக் குடியேற்றமான கல்லோயாப் பள்ளத்தாக்கில் உரிமைப் போருக்கான களப்பலி ஊட்டப்பட்டது.

சுதந்திரன் அரசியல் நிருபர்

### சத்தியாக்கிரகம்

தொடர்ந்து பல இன்னல்களை ஆட்சியினர் ஏற்படுத்தியும் தளராத திடமும், தன்மான வெறியும் கொண்ட தமிழ்பேசும் மக்கள் 1961ம் ஆண்டு அவனியே கண்டு அதிசயிக்கவல்ல அறவழிப் போர் முறையை அமைத்தனர். காந்திய வழியிலே சத்தியாக்கிரகம் தொடங்கியது. இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் சத்தியாக்கிரகச் சங்கொலி கேட்கத் தொடங்கியது. வடக்குக் கிழக்கில் அரசாங்கமே தொடர்ந்து பல நாட்கள் நடைபெற முடியவில்லை. தமிழ் பேசும் மக்கள், தங்களுக்குள்ளிருந்த சகல வேற்றுமைகளையும் மறந்து சத்தியப் போரில் ஈடுபட்டனர்.

கொட்டும் மழையும் கொடிய வெய்யிலும் குளிரும் பனியும் சத்திய யுத்த வீரர்களை அசைக்கக் கூட முடியவில்லை. இணையற்ற வீரத்தை இழிவாக மதிக்கும் சுணையற்ற அரசு சோர்ந்து கிடந்தது.

ஆயுதம் எதுவுமில்லா அகிம்சை நெறிப் போரை, ஆயுதபலம் கொண்ட 'காட்டுவிலங்கையொத்த, கயமைத் தொழில் கற்ற காவலர்கள் கலைக்க முன்வந்தனர். சத்தியாக்கிரகிகளின் உடலைத் தங்கள் உடைமையாக மதித்து உதைத்து அடித்து உருக்குலைத்து, உத்தமத் தாய்மாரின் உயர் கற்புதனைப் பறித்து உல்லாசமாகப் பொழுதைக் கழித்தார்கள்.

### ……யாருக்கு?

பீரங்கியாலும் தகர்த்தெறிய முடியாத உள்ளங்களின் அணியை, சீரற்ற, செம்மையற்ற, செயலாற்றும் திறமையற்ற சிறு மதி படைத்த சிங்களச் சிப்பாய்கள் சூழ்ச்சித் திறத்தால் சிதறடித்து வெற்றிப் பவனி வர ஆரம்பித்துவிட்டனர்.

யாருக்கு வெற்றி?
யாருக்குத் தோல்வி?

போராட்டம் முடிந்துவிட்டால், போரிட்டோர் வீழ்ந்து விட்டால், வெற்றியும் தோல்வியும் விளங்கிவிடும்.

போராட்டம் ஓயவில்லை!
உரிமை வெறி அடங்கவில்லை!
யாருக்கும் வெற்றியில்லை!
எவருக்கும் தோல்வி இல்லை!

மொழியுரிமை, குடியுரிமை வாக்குரிமை, வாழும் உரிமை இவற்றைப் பெற்று, இந் நாட்டில் வாழும் எவருக்கும் இளைத்தவராகவோ, சளைத்தவராகவோ இல்லாது, பூரண வாழ்க்கை வாழ தமிழ் பேசும் இனம் அன்று தொடங்கிய போர் இன்னும் ஓயவில்லை.

உரிமைப் போரின் அடுத்த கட்டம் தொடங்குவதற்கான காலத்தை நிர்ணயிக்க தமிழரசார் கூடுகின்றனர்.

"அடிமை நிலை நீங்கி, அல்லல்கள் மாய்ந்து அன்னை மொழியாம் தமிழ் அரியணை ஏறுதற்கு திட்டங்கள் தாரீரோ," என்று துள்ளி எழும் காளையரும் துடிதுடிக்கும் துடி இடையாளரும், நடை தளர்ந்து நரை விழுந்த நல்லறிவாளர்களும் விடை கோரி நிற்கின்றூர்.

திருமலையை நோக்கித் திக்கெட்டும் இருந்து தீரர் கூட்டம் திரண்டெழுந்து செல்கிறது.

## முளையிலேயே கிள்ளி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### 1961ல்

1960 ஆடி மாதத் தேர்தலில் கிடைத்த எதிர்பாராத பெரும்பான்மை வெற்றிதான் சுதந்திரக் கட்சித் தலைவர்களின் தடுமாற்றத்துக்குக் காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது. தமிழரசுக்கட்சிக்கும் தமிழ் பேசும் இனத்துக்கும் சுதந்திரக்கட்சி செலுத்த வேண்டிய நன்றிக் கடனையிட்டு நாம் பல முறை ஞாபகப் படுத்தியும் கூட எள்ளளவு பலனும் கிடைக்கவில்லை. இதன் பின்னர் தமிழ் பேசும் மக்களின் அடுத்த போராட்டமான சத்தியாக்கிரக அறப்போர் ஆரம்பமாகியது.

இதுகாலவரைக்கும் சிங்கள எதேச்சாதிகாரத்தின் தன்மைகளை உணராது இலங்கைவாழ் முஸ்லிம்கள் ஆட்சியினருடன் ஒத்துழைத்துவந்தனர். இன்று காணி வாங்கவோ விற்கவோ முடியாத நிலைமையில் முஸ்லிம்கள் துன்பப்பட நேரிடுவதால் ஆட்சியின் சூழ்ச்சிகளை உணரத் தலைப்பட்டு விட்டனர்.

### ஒன்றுபடுங்கள்

தமிழ்பேசும் இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைத் தகர்த்தெறிய எல்லோரும் ஒன்றுசேரவேண்டும்.'

## பத்திரிகையாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் கைப்பற்றக் கூடிய ஒரு கட்சியென்றும் பதில் கூறினுர்.

பாதுகாப்பு அமைச்சின் மான்யம் மீது உரை நிகழ்த்திய துணைப் பாதுகாப்பு அமைச்சர் பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, 'தமிழரசுக் கட்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த தென்னிந்திய பத்திரிகையாளர்கள் தி. மு. க.வைச்சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினுலேயே விசா மறுக்கப்பட்டுள்ளது' என்று கூறியுள்ளார்.

# தமிழரசு அமைப்பு முறையில் மாற்றம்?

## ஐந்து துணைச் செயலாளர்கள் தெரிவு செய்யப்படலாம்

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அமைப்பு முறைகளில் சில மாற்றங்கள் நடக்கக்கூடும் என்று அறியப்படுகிறது. இம் மாற்றங்களுக்கு கட்சியின் கொழும்புக்கிளையே முக்கிய காரணமென்றும் தெரியவருகிறது.**

தமிழரசுக் கட்சியின் அமைப்பு முறைப்படி பொதுச் செயலாளர் ஒருவரும் துணைப் பொதுச்செயலாளர்கள் மூவரும் மாநாட்டில் தெரியப்படவேண்டும். ஆனால் இம்முறை பொதுச் செயலாளருடன் ஐந்து துணைப் பொதுச்செயலாளர்கள் தெரிவுசெய்யப்படலாம் என்று தெரிகிறது.

துணைச் செயலாளர்கள் ஐவருக்கும் குறிப்பிட்ட சில பொறுப்புக்கள் கொடுக்கப்படுமென்றும், அவர்கள் அப்பகுதிகளுக்குத் தனியாகக் குழு அமைத்து செயல்படுவார்கள் என்றும் தெரிகிறது. அமைப்பு, திட்டம், பிரசாரம், தொழிற்சங்கம், கலாச்சாரம் ஆகிய ஐந்து துறைகளுக்கும் ஐந்து துணைப் பொதுச் செயலாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள். இப் புதிய மாற்றத்திற்கு கட்சிமீது தினே தினே சுமத்தப்படும் பொறுப்புக்களே காரணமென்று ஒருபிரமுகர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் பெருகிவருவதாலும், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று முக்கியத்துவம்பெற்ற இடங்களை சிங்கள அரசு படிப்படியாக அபகரித்து வருவதாலும், இவற்றைமக்களுக்குஎடுத்து விளக்கிப் பிரச்சாரம் செய்வதற்காகவும், சிங்கள அரசின் இனவொழிப்பு நடவடிக்கையை எதிர்த்து நடவடிக்கை எடுப்பதற்கு கட்சி உறுப்பினர்களை ஒரு அமைப்பில் திரட்டவிருப்பதாலும், தமிழ்பேசும் மக்களின் பொருள்வளத்தை சீர்செய்யக்கூடிய முறையில் திட்டங்கள் பல அமைக்கவேண்டியிருப்பதாலுமே இவ்வித மாற்றம் நிகழவிருப்பதாகத் தெரிகிறது.

இந்தமாற்றத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையே முக்கிய காரணம் என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகஅமைப்பு முறை இவ்விதம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ் விழா பிற்போடப் பட்டது

இம்மாதம் 18ம், 19ம் திகதிகளில் நடைபெறவிருந்த செங்குந்த இந்துக் கல்லூரி தமிழ் விழா பலரின் வசதிகளை முன்னிட்டு புரட்டாதி மாதம் 11ம் 12ம்திகதிகளுக்குப் பின்போடப்பட்டது. இவ்விழாவில் 'கம்ப இராமாயணத்தில் சிறந்த பாத்திரம் இராமனா? இராவணனா? கும்பகர்ணனா? பரதனா?' என்ற பொருளில் நடைபெறும் பட்டிமன்றமும், 'கனவுலகம்' என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கமும் விசேட நிகழ்ச்சிகளாக அமையும். இந்நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, மலைநாடு முதலிய இடங்களைச் சேர்ந்த தமிழறிஞர்களும் எழுத்தாளர்களும் கலந்துகொள்ளுகின்றார்கள். இன்னிசைக் கச்சேரிகள், மலர் வெளியீடு, பரிசளிப்பு, நாடகம் முதலிய நிகழ்ச்சிகளும்விழாவில் இடம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான இலக்கிய அன்பர்கள் இவ்விழாவிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சிங்கள...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி வேண்டும், அவர்களைப் பின்பற்றும் வட இலங்கை சமசமாஜிஸ்டுகளுக்கு வருவாயுடன் கூடிய பதவிகள் வேண்டும். ஆனால், தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை வேண்டும். மந்திரிப் பதவியிலும், ஏனைய பதவிகளிலும் இன்பம் காணும் சுயநலக் கும்பல் இனத்தின் உரிமையை எங்ஙனம் பெற்றுக்கொடுக்க முடியும்? தமிழினம், தமிழ் என்ற பதங்களைக் கூறினால் சமசமாஜிஸ்டுகள் இவற்றை அனுபவிக்க முடியாது. எனவே தமிழ் பேசுமினம் சுய நிர்ணய உரிமைகளைப் பெற மாற்றாரை நம்பிப் பயனில்லை. சுய முயற்சியே சுதந்திரத் தமிழ் பேசுமினத்தை உருவாக்கும்.


### மணவிழா அழைப்பு

யாழ்நகர் கலட்டி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திரு. வி. சிவசம்பு, காலஞ்சென்ற கனகம்மா சிவசம்பு ஆகியோரின் புத்திரன் திருநிறை

செல்வன் கந்தசாமிக்கும்

(சேனைத் தலைமை அலுவலகம்)

திருநெல்வேலி கிழக்கு அரசடி ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பதிகளின் புத்திரி

செல்வி நவமணிக்கும்

நிகழும் குரோதி வருடம் ஆவணி மாதம் 23-ம் நாள் (7—9—64) திங்கட்கிழமை மாலை 6-45க்கும் 7-30 மணிக்குமிடையில் வரும் சுபவேளையில் மணமகளில்லத்தில் மணவிழா நடைபெறும்.

நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

18—8—64

71/8 கலட்டி,
யாழ்ப்பாணம்.



### எஸ். ஏ. பெர்னண்டோ,

**த. பெ. இல. 16, பழைய பஜார்,**
**நுவரெலியா.**

பூக்கள், மரக்கறி விதைகளுக்குத் தீவிலேயே தலைசிறந்தவர்கள்!

எங்கள் அனுபவம் உங்கள் சேவையைக் காத்து நிற்கிறது!

பூ வியாபாரத்தில் 22 வருடங்களுக்கு மேலான சேவை!

சுறுசுறுப்பும் நம்பிக்கையும் கொண்ட சேவை!

குறித்த தவணையில் ஆடர்களை நிறைவேற்றல்,

திருப்தி, திறமை—இவற்றுக்கு இலங்கைத்தீவிலே நிகரற்று விளங்குவோர்!

தந்தி : பாத்திமா

போன் : 283


## தமிழினத்தின் வரலாறு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், நிலச் சீர்திருத்தத்திலும், பல்கலைக்கழக உபகாரப் பணம் கொடுப்பதிலும் கைத்தொழில் அமைப்பு, குடியேற்றத் திட்ட அமைப்பு, வெளிநாட்டுச் செலவாணி ஆகியவையிலும் அத்துடன் மக்களால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியிலும் எங்களை ஒதுக்கிக்கொண்டே வந்திருக்கின்றார்கள்.

காலி, கொழும்பு, குருநாகல், பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ்பேசும் இனத்தவர் அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றியிருக்கும் பொழுது தமிழ்ப் பிரதேசமாகிய திருகோணமலையில் மட்டும் தமிழ் அரசாங்க அதிபர் கடமையாற்றப் பொருத்தமற்றவராகக் காணப்படுகிறாரா? எத்தனை மாற்றாந்தாய்மனப்பான்மை பாருங்கள். 1930ம் ஆண்டு தொடக்கம் உள்ள இலங்கைச் சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் அது தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட புறக்கணிப்பின் ஒரு சோகக் கதையாகத்தான் உள்ளது.

கட்சியிலிருக்கும் இளம் அங்கத்தவர்களுக்கு எனது கனிவான வேண்டுகோள்: கட்சியிலுள்ள அனுபவம் வாய்ந்த, அறிவில், வயதில், ஆற்றலில் முதிர்ந்த அங்கத்தவர்களின் வழிகாட்டலை மிகவும் நிதானமாக நீங்கள் ஏற்பீர்களேயாயின், அவர்களுடைய வழியில் நடப்பீர்களேயாயின், பாதை எவ்வளவு கரடு முரடானதாக இருந்தாலும் குறிக்கோளை அடையலாம். எமது இலட்சியத்தை மிக விரைவில் வெற்றிபெறலாம் என்பது திண்ணம். இன்று இருக்கும் வாலிப அங்கத்தவர்கள் தமிழரசுக்கட்சியில் காணும் பெருமையும் புகழும் அன்று எப்படி உருவாகின என்பதை சற்றுச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

### நாலு தலைவர்களை இழந்தோம்

கடந்த 14 வருடங்கள் உங்களிற் பலர் உங்களுடைய சொத்துக்களையும், செல்வங்களையும் புகழ் வாய்ந்த தொழில்களையும் இன்னும் சிலர் தங்களுடைய அரியமுயற்சிகளையும் இழந்து தவிப்புக்குள்ளாகியிருக்கின்றீர்கள். மற்றும் சிலர் சிறைசென்று நீண்டகால தடுப்புக்காவலில் அனுபவித்த வேதனைகளையும் நாம் மனதிற்கொள்ள வேண்டும். அவர்கள் அனுபவித்த வேதனைகளை உணரவேண்டும்.

அயராத உழைப்பினாலும் தமிழினத்தின் மேல் கொண்ட தணியாத பாசத்தினாலும் செய்த சேவையினாலும் இன்று வாழவேண்டிய நாலு பெரும் புகழ் வாய்ந்ததலைவர்களை இழந்து தவிக்கின்றோம். அவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்யுமுன் அனுபவித்த வேதனைகளை மறந்துவிடக் கூடாது. மொழியுரிமைக்காகப் போராடும் நாங்கள் பைந்தமிழ்ப் பாட்டி ஔவை முதல் செந்தமிழ்ப் பாவலன் பாரதிவரை நினைவு கூர வேண்டும்.

### ஒன்றுபட்ட குரல்

மொழிக்காகப்போராடிய பலஅறிஞர்களையும், கவிஞர்களையும் வாட்டிய போராட்டங்களை மனதில்கொண்டு ஒளிபெறல் வேண்டும். மறைந்த மாபெரும் தலைவர்களின் பெயரால், வன்னியசிங்கம், ஏகாம்பரம், கந்தையா, இராஜவரோதயம் போன்ற தியாகச் செம்மல்களின் பெயர்களால் இறுதியாக உங்களிடம் நேசக்கரம் நீட்டி வேண்டுகோள் ஒன்றை விடுக்க ஆசைப்படுகின்றேன்.

பொதுமக்களே! முத்தமிழ் அன்னைக்கு முத்தாரம் சூட முழுமனதுடன் இங்குதிரண்டிருக்கும் மூத்தகுடியினரே! உங்களுடைய சிறிய கருத்து வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாகப் பின்னிப் பிணைந்து கருத்தொருமித்து முன்புஎன்றுமேயிராதஒற்றுமையுடன் கூடி நின்று உரிமைக்குரல் எழுப்பவேண்டுமென்று முழுமனதுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## மந்திரிக்கு மகஜர்

'தனிச் சிங்களச் சட்டத்தினால் அஞ்சல் திணைக்களத்தில் சீர்கேடு. வருவாய் கொடுக்கும் திணைக் களம் நட்டம் அடைகிறது. தனிச் சிங்களச் சட்டத்தினால் பதவி உயர்வும், படி உயர்வும் இழந்து தமிழ் பேசும் அஞ்சலக ஊழியர்கள் துன்புறுவதால், அவர்களின் திறமையான பணிக்கும் நிர்வாகத்திற்கும் குந்தகம் ஏற்பட்டுள்ளது.' அஞ்சல் எழுதுவினைஞர் சங்கக் தூது குழு அஞ்சலக அமைச்சர் திரு. பெல்பொலையிடம் சமர்ப்பித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அ. எ. வி. ச. தலைவர் திரு. வே. கனகசபை முதலி தலைமையில் திருவாளர்கள் த. சோமசுந்தரம், ஆ. வி. கனகரத்தினம், ஏ. புண்ணியமூர்த்தி, மு. வேலுப்பிள்ளை, செ. அர்ச்சுனு ஆகியோர் அமைச்சரைப் பேட்டி கண்டனர். தூதுக் குழுவினர், அஞ்சல் திணைக்களத்தில் நடைபெறும் சிங்களத் திணிப்புக் காரணமாக சிறுபான்மை மக்கள் இச் சேவையைப் பூரணமாகப் பயன்படுத்துவதில்லை யென்றும் எடுத்துக் கூறினார்கள்.




### ரிஷி
### அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50
(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**
63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.

# மொழிப் பிரச்சினைக்கு தீர்வின்றேல் நாடு பிளவுபடும்

## மொழியால் ஒன்றுபட்ட முஸ்லிம்களும் தமிழர்களும் தனியரசு காண்பர்

இந்நாட்டின் மொழிப் பிரச்சினை தீர்த்துவைக்கப் படாத பட்சத்தில் எவர்விரும்பினுலும் விரும்பா விட்டாலும் இங்கு நாடு பிளவுபட்டே தீரும். மதத்தால் வேறுபடினும் பேசும் மொழியால் ஒன்றுபட்டுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்கென ஒரு அரசை அமைத்தேயாகவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

'நான் இத் தலைவருக்குவீர வணக்கம் செலுத்துகிறேன். இந்தியாவின் விடுதலைக்காக அவர் செய்துள்ள தியாகங்களும் ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளும் இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டும்.'

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பாரத நாட்டுப் பணிபுரிந்த மௌலானா முஹம்மதலி அவர்களைப் புகழ்ந்து நேருஜி முன்னொரு சமயம் இப்படித்தான் கூறினர்.

### தியாகச் செம்மல்

இவ்வார்த்தை இலங்கையில் தமிழ்மொழி பேசும் இனத்துக்காகவும், தாய் மொழியான தமிழுக்கும், இலங்கையில் பெருங்குடிமக்களான சிங்களவர்கள்-தமிழர்கள் ஒற்றுமைக்காகவும், தியாகம் செய்யும் தியாகச் செம்மல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் பொருந்தும்.

திரு. செல்வநாயகம்அவர்கள்கொள்கைக்காகவாதாடுவதில், தன் கொள்கைக்காக மக்கள் கொடுத்த விஷத்தை தன் கையால்வாங்கி அருந்தி மகிழ்ச்சியுடன் மாண்ட சாக்ரடீசுக்கு ஒப்பாவர். எனவேதான், வடகிழக்கு மாகாணங்களில் வாழும், தமிழ்பேசும் மக்கள் ஒரு கொடியின் கீழ், தமிழ் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் தங்கள் மொழிப் போராட்டத்தில் வெற்றிகாண உறுதி கொண்டுவிட்டார்.

### வாள், கொடி, உறுதி

தியாகம் செய்யாமல் மக்கள் எதையும் சாதிக்க முடியாதல்லவா? குருசேட் யுத்தத்தில் வெற்றிபெற்ற சுல்தான் சலாஹுத்தீன் ஐயூபி ஒரு நாள், ஏருசலம் பள்ளியில் நின்றுகொண்டு, 'மஹா ஜனங்களே! இப் பரிசுத்தமான பைத்துல் முகத்தஸ் (ஏருசலம்) முஸ்லிம்களுக்கு உரியதாகும். கிறிஸ்தவர்கள் நம்மை ஆட்சிகொள்ளப் பார்க்கின்றனர். நாம் இந்த குருசேட் யுத்தத்தில் வெற்றிகொள்ள வேண்டும், அல்லது இஸ்லாமே இங்கில்லாதொழிய வேண்டும்' என்ற குரல் எழுப்பினர்! அவர் பேச்சைக் கேட்டதும் அப் பள்ளியில் கூடியிருந்த மக்கள் வியப்பாக அவரைப் பார்த்தனர்.

அக் கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து, 'சுல்தான் அவர்களே! தங்களிடம் இருக்கும் ஆயுதம் என்ன?' என்று கேட்டார். அவருக்கு சுல்தான் அவர்கள் சாந்தமாகப் பதில் சொன்னர்.

'என்னிடம் மூன்று ஆயுதங்கள் இருக்கின்றன.
இஸ்லாத்தின் கொடி.
என் உறையில் இருக்கும் வாள்.
தளராத மன உறுதி.'

அதன்படியே குருசேட் யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு அவர் வெற்றி ஈட்டிக் கொடுத்தார் என்பதற்குச் சரித்திரம் சான்று கூறும்.

திரு. செல்வநாயகம்அவர்களுக்குப்பின் தமிழ் மக்கள் திரளாகக் கூடுவதைப் பார்த்த ஒரு சில சுயநலக் கும்பல்கள் பொறுமையின் காரணமாக தமிழரசுக்கட்சி மீது சொல்லம்பு விடுகின்றனர். நிச்சயம் தமிழ் இனப் போராட்டத்தில் அவர் வெற்றிபெறுவார்!

சமஸ்கிருதமும், பாளியும், வங்காளியும் சேர்ந்த கலப்பட மொழியல்ல தமிழ். பௌத்த தர்மத்தைப் போற்றி வளர்த்தவர்கள் தமிழர்கள். மணிமேகலையும், வீர சோழியமும் இதற்கு எடுத்துக் காட்டாகும். பட்டினப் பாலையில் ஈழத்துணவு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அண்ணாமலைப் பல்கலை கழகப் பேராசிரியர் த. பொ. மீனட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சொல்வது போல், ஈழம் ஈழத்துணவுக்கு மாத்திரம் சிறப்புற்று விளங்கவில்லை. இன்று இலங்கையிலுள்ள சிங்கள மக்களால் வணங்கப்பட்டு வரும், கண்ணகித் தெய்வமும் தமிழர் தெய்வமே ஆவாள். கற்புக்கரசியான

**அல்ஹாஜ் வ. மி. சம்சுத்தீன்**

கண்ணகியின் வழிபாடுதான் இன்று இலங்கையிலுள்ள சிங்களவர்களால் 'பத்தினித் தெய்யோ' என்ற பெயரால் வணங்கப்படுகிறது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு அரசமர அடியிலும் 'கண்ணகித் தெய்யோ' காணப்படுகின்றுள். சிங்கள — தமிழர்கள் ஒற்றுமைக் கருத்தில் கொண்டே இதைக் கூறமுன் வந்தேன்.

மொழிப் பிரச்சினையை அரசாங்கம் கெதியில்தீர்த்து வைக்காவிட்டால், சிங்கள மக்கள் விரும்பினும் விரும்பாவிடினும், இலங்கையும் பாக்கிஸ்தானைப் போல் இரு நாடுகளாகப் பிரிந்து விட ஏதுவுண்டு. இச் சிறிய தீவில் பிரிவினை சக்திகள் தோன்றி விடாமல், சிங்களத் தோழர்கள் தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொள்வது அவர்கள் தலையாய கடன். தமிழரசுக் கட்சியார் கூறுவதும் இதைத்தான். ஒருவருடைய தாய் மொழி பறிக்கப்பட்டுபோன பின் அவனுக்கு உலகில் வேண்டியதென்ன?



அல்ஹாஜ் வ. மி. சம்சுத்தீன்

### இஸ்லாம்மறுமலர்ச்சியும் தமிழும்

வட இந்தியாவில் அரபி, பாரசிக மொழி மூலமாக இஸ்லாம் மறுமலர்ச்சி யடைந்தது போல் இலங்கையில் இஸ்லாம் மறுமலர்ச்சி யடைந்ததும், தமிழ் மூலம் என்பதை இலங்கையிலுள்ள எல்லா முஸ்லிம் எழுத்தாளர்களும் ஏற்றுக் கொள்வர்.

இஸ்லாமிய சமய நெறி நூல்கள் நூற்றுக்கணக்காகத் தமிழில் இருக்கின்றன. இன்றுள்ள இளம் முஸ்லிம்எழுத்தாளர்கள் பலரால், இலங்கையில் பல தமிழ் பாடல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

### இங்குமட்டுமல்ல...

இலங்கையில் இன்று நடக்கும் மொழிக்கிளர்ச்சிபோல், இந்தியாவிலும், பாக்கிஸ்தானத்திலும் நடைபெற்றது. பாக்கிஸ்தானத்தில் உருதுவே பாக்கிஸ்தானத்தின் மொழி எனக் கூறப்பட்டது. வங்காளிகள், தங்கள் மொழி உரிமைக்காகப் பாக்கிஸ்தானத்துடன் போராடி வெற்றி கண்டனர். இந்தியாவிலுள்ள 'ஜனசங்' வாதிகள், இந்தியாவில் முஸ்லிம்களுக்கு 'உருது' அவர்கள் மொழியல்ல என்று வாதாடினர்.

ஹிந்தி மொழியே இந்தியாவின் பொது மொழி என்றுர்கள். தென்னகத்தில் ஹிந்தியைப் புகுத்த அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியாது போயிற்று! தென்னகத்தில் திராவிட மக்கள் செய்த தீவிர எதிர்ப்பைக் கண்ட பாரத அரசாங்கம், 'ஹிந்தி மொழியை விரும்பாதவர்கள் மீது கட்டாயம் திணிக்கக் கூடாது' என்று கூறியதுடன் இந்திய உப கண்டத்தில் வழக்கிலிருக்கும் 14 மொழிகளுக்கும் உரிமை உண்டு எனக் கூறும் சரத்தை இந்திய அரசியல் சட்டத்தில் புகுத்தி விட்டார்கள். எனினும் ஹிந்திப் போராட்டம் இன்றும் தமிழகத்தில் நடக்கின்றது.

### நமது மொழி தமிழ்

இலங்கையில் தமிழ்பேசும் இனங்களின் தாய் மொழி உரிமையும் உண்டு எனச் சொல்லும் ஒரு சரத்தை இலங்கை அரசியல் சட்டத்தில் புகுத்துவதால், இலங்கைக்கோ, சிங்களவர்களுக்கோ, மற்றவர்களுக்கோ ஏற்படும் தீங்குதானென்னே! இதையே தமிழரசுக் கட்சியார் வேண்டிநிற்கின்றனர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன் தமிழன். இஸ்லாம் என்பது முஸ்லிம்களின் மார்க்கம். இப்படியே குர்ஆனும் கூறுகிறது. இலங்கைச் சோனகர்களின் தாய்மொழியும் தமிழ் என்பதை உலகறியும்!

வாய்மொழி வகுப்புகள்

செப்டம்பர் 1ம் திகதி ஆரம்பமாகும் புதிய தவணைக்கான பிரவேசங்கள் இப்பொழுது ஏற்கப் படுகின்றன.

பின்வரும் வகுப்புகளுக்கு:
ஜி. ஸி. ஈ. சாதாரணம்
கலை, விஞ்ஞானம், வணிகம்— டிசம்பர் 1964
ஜி. ஸி. ஈ. உயர்தரம்—
கலை, விஞ்ஞானம்—டிசம்பர், 1965
ஜி. ஸி. ஈ. ஆரம்ப வகுப்பு (பிரெப்)
விஞ்ஞானம்

வர்த்தக வகுப்புகள்:
தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப்பதிவியல், வர்த்தகம் முதலிய பாடங்கள்—
ஆங்கிலம்—தமிழ் மூலம்

கடந்த பரீட்சைகளில் எமது மாணவர் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெற்றுள்ளனர்.

விபரங்களுக்கு
யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி
கிளை:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாய ஜோதி
ஊது பத்திகளே

- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இண்டஸ்ரீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

## மொழியால் இணைந்த இனங்கள்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சீர்படுத்தி விளைவித்தற்காகவும், சனச் செறிவுள்ள இடங்களிற் குடியாட்டங்களைப் பரவலாகப் பதிகொள்ளச் செய்யுமுகமாகவும் அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்த போது, அத்தகைய குடியேற்ற இடங்களிற் காணப்பட்ட கஷ்ட நிலையையும் வசதிக் குறைகளையும், பன்னுள் பதிகொண்டு வாழ்ந்த வட்டாரத்தையும் சுற்றத்தாரையும் விட்டுப் பிரிவும் பிரிவாற்ருமையையும் காரணங்களாக வைத்து அக்குடியேற்ற இடங்களுக்குச் செல்ல மறுத்த நாங்களும் இந்நிலைக்கு உடந்தையாகவே இருந்திருக்கிருேம். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கம் அதிதீவிரமாக இவ்விடயத்திற் சிறுபான்மையோருக்கு அநீதி யிழைத்து விட்டது. வாழையடி வாழையாகத் தமிழ்ப் பிரதேசங்களாக விளங்கிய பகுதிகளிலெலல்லாம்எந்நிலையிலும்எவ்வசதியீனங்களையும்பொருட்படுத்தாமல் குடியேறத் தயாராக இருந்த சிங்கள மக்களைக் குடியேற்றிவிட்டது அரசாங்கம்.

அரசாங்கத்தின் இத்தகைய செயல்களை, எம்மை எதிர்நோக்கும் அபாயங்களுக்கு அறிகுறியாக உணர்ந்து தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். கட்சியுள்ளும் சமுதாயத்துள்ளும் காணப்படும் வேற்றுமை களைந்து ஒற்றுமை காண்பது சிறுபான்மையோர் படும் துன்பத்துக்குச் சாவுமணியடிக்கும் ஒரு சாதனமாகும்.

நமக்கிழைக்கப்படும் இன்னல்களை எடுத்தியம்புவதும், அவற்றை அகற்றும் வழியைக் காட்டுவதும், பிறர் அதனை உணரும்படியும் ஒத்துக்கொள்ளும்படியும் செய்வது நம் கடமை. 'தமிழரசுக்கட்சி' எனும் போது, 'ஓகோ, தமிழர்களுக்குத் தனி அரசு வேண்டுமாம்' என அர்த்தங்காணும் அநேக சிங்களவர்களுக்குச் சமஷ்டி, பிரிவினையன்று என்பதையும் பிற நாடுகளில் பெரும்பான்மையினருடன் சிறுபான்மையினரும் ஒன்று சேர்ந்து அந்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்கும் அனுகூலங்களைச் சமஷ்டி ஆட்சி அளித்திருப்பதையும், இச் சமஷ்டி ஆட்சி முறையில் மிளிரும் ஐக்கியக் கூட்டாட்சி முறையையும் பற்றி அறிவூட்ட வேண்டும். இத்தகைய முயற்சிக்குத் தமிழர்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் அந்தரங்க சுத்திபடைத்த ஐக்கியமனப்பான்மை இன்றியமையாததாகும்.

### பிரதேசை சபை

இந்நாட்டு அரசியல் அமைப்பு உருவான ஆரம்ப கால முதல், இந்நாட்டில் பிரதேச வாரியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பிரதேச சபைகளை நிறுவுவது சிறந்த மார்க்கமெனக் கருதப்பட்டு வருகின்றது. பிரதேச சபைகளின் அவசியத்தை ஏற்றுக் கொண்ட இன்றைய அரசாங்கம் இவ்விடயத்தில் தீவிர நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. பிரதேச சபைகள் அமைக்கப்படுமானல் சிறுபான்மையோர் பிரச்சினைகள் பல தீர வழி ஏற்படலாம். எனவே, பிரதேச சபைகள் அமைக்கப்படுவதற்கும், அவை அமைக்கப்படும்போது கலை, கலாச்சார, மத விஷயங்களில் தத்தமக்குள்ள தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய விதத்தில் தமிழ்ப் பிரதேசங்களும் முஸ்லிம் பிரதேசங்களும் வரையறுக்கப்படுதற்கும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தைத் தூண்ட வேண்டியது அவசியமாகும்.

இந்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள பிரச்சினைகள் பொதுவானவை. இவ்விரு இனத்தினரும் சிறுபான்மையினர் என்ற முறையிலும், ஒரே மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்ற முறையிலும், பாரம்பரிய அபிலாஷைகளிலும் கலாச்சாரங்களிலும் அக்கறை மிக்கவர்கள் என்ற முறையிலும் மிக இணைந்திருக்கிருர்கள். இவ் வொற்றுமையை வலுப்படுத்தி இவ்விரு சாதியினரும் ஒருவரையொருவர் நம்பி, தம் உரிமைகளைப் பெறுவதற்கும் முன்னேற்றத்துக்கும் பாடுபடுவரேல் வெற்றி நிச்சயம்.

# காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானங்களுக்கு என்ன நேர்ந்தது?

இம்மாத இறுதியில் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தங்களின் வருடாந்த மாநாட்டை முறையே அட்டனிலும், பதுளை மாநகரிலும் கூட்டிக் கலையவிருக்கின்றன. எனவே அவ்விரு ஸ்தாபனங்களும் இதுவரை செய்த தொண்டுகளைச் சிறிது சிந்தித்துப் பார்த்தல் பயனளிக்கும்.

இவ்விரு ஸ்தாபனங்களும் மலையகத்தாரின் நல உரிமைகளைப் பாது காக்க ஏற்பட்ட "டிரஸ்டி"களாகும். (அப்படித்தான் காங்கிரஸ் காரர்கள் எண்ணம்.)

கால் நூற்றுண்டுகளாக மாநாடுகள் கூடி, தீர்மானங்களை நிறைவேற்றி, அலமாரிகளில் அழகாக அடுக்கி வைத்து அப்புறம் அவைகளை மூட்டை கட்டி கடலைக் கடைக்கு ருத்தல் கணக்கில் பேப்பர் விற்றதைத் தவிர, இந்த ஸ்தாபனத்தார் ஏதேனும், உருப்படியான ஆக்க வேலைகளைச் செய்திருக்கின்றனரா என்பதை மலையகத்துப் பெருங்குடி மக்கள், குறிப்பாக வாலிபர்கள் சிந்திக்க வேண்டும்.

### பழைய பெருச்சாளிகள்

இந்த இரு காங்கிரஸ் ஸ்தாபனங்களும், ஒன்ருக இருந்த போதும், பிளவு பட்டபோதும் மீண்டும் மீண்டும் ஜில்லாவாரியாகவும், தோட்டவாரியாகவும், பழைய பெருச்சாளிகள் அதிகாரத்திற்கு வந்தார்களே தவிர, வேறு நிர்வாகத் திறமையுள்ளோர் அதிகாரத்திற்கு வர, (மத்தியக் கமிட்டியில் தலைவராக வர) இடமளிக்கவில்லை.

இதனைக் காங்கிரஸ் தலைவர்களே மறுக்க முடியாது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் மூன்று வருடம் சேர்ந்தாற்போல, காலஞ்சென்ற திரு. கே. இராசலிங்கம் தலைவராக இருக்கவில்லையா என்று கேட்டால், அதற்குச் சரியான பதிலை முதலில் அந்த ஸ்தாபனத்திலுள்ள அனைவரும் கொஞ்சம் சிந்திந்துப் பார்த்தால், மனம் சாட்சியம் அளிக்கும்! உண்மை விளங்கும்.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசில் இதுவரை ஜனுப் ஏ. அசீஸ் அவர்களைத் தவிர வேறு எவரும், தலைவராக வந்ததுண்டா? வர முடியுமா?

திருவாளர்கள்: அசீஸ்—தொண்டமான் ஆகிய இரு பெரும் சாசுவதத் தலைவர்கட்காகவே இந்த ஸ்தாபனங்கள் இயங்குகின்றனவே தவிர வேறென்றுமில்லையே! இதையாவது மறுப்பார்களா? இவர்கட்குப் பின் ஸ்தாபனம் அழிந்தொழியும் என்பதுதானே இதன் அர்த்தம்?

### மலையக வாலிபர்கள் சிந்தனைக்கு

இந்த ஸ்தாபனங்களில் முழு நேர ஊழியர்களாக உத்தியோகம் பார்க்கும் மலையகத்து வாலிபர்கள் உண்மையிலேயே அவர்கள் கொடுக்கும் சம்பளத்திற்காக மாரடிப்பவர்களே தவிர, மன நிறைவோடு, தொழிலாளர்கள்பால் அனுதாபங்கொண்டு வேலை செய்கிருர்களா என்பதை மலையகத்து வாலிபர்களே! நீங்கள் கொஞ்சம் யோசியுங்கள். மலையகமெங்கும் பரவலாகப் படித்த பட்டதாரிகள் இருக்கிறீர்களே, நீங்களாவது இதுபற்றிக் கவலையெடுங்கள்.

'எங்கள் ஸ்தாபனம் பல லட்ச அங்கத்தவர்களைக் கொண்டது' என்று ஒரு தலைவர் அறிக்கை எழுதிப் பத்திரிகைக்குக் கொடுப்பார். உடனே மற்றத் தலைவர் விசேட அறிக்கை விடுவார் பத்திரிகைகளில்.



எஸ். எஸ். நாதன்

நிற்க ஒவ்வொரு மாநாட்டிற்கும் குறைந்தபட்சம் ரூ. 20 ஆயிரம் ரூபாய்களாவது செலவாகுமே! இதனை நன்கொடையாகக் கொடுப்பவர்கள் யார் என்பதை ஈர உள்ளங்கொண்ட வீர வாலிபர்களே கணக்கிட்டுப் பாருங்கள்.

'வவுச்சர்' எழுதிப் பழகி வன்மை கண்ட 'வீரர்'களான மாநாட்டை நடத்தும் அந்தந்த ஜில்லாக் கமிட்டி யார்? அழியாத மையினுல் எழிலாக எழுதி, ஐந்தொகையையும் எடுத்துக்காட்டிப் பின்னர் அறிக்கையும், அச்சிட்டு விடுவார்களே!

கடந்த 25 ஆண்டுகளாக இந்த வேடிக்கையைப் பார்த்த அனுபவம் உங்களுக்கு உண்டல்லவா? எவரேனும் கேட்பார்களா, கேட்டிருக்கிருர்களா இது என்ன என்று?

சுதந்திரம் அடைந்த இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் காங்கிரஸ் சார்பில் தேர்ந்தனுப்பிய 7 அங்கத்தவர்களும் கொலுவீற்றிருந்தார்களே, அவர்கள் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சுக்களை என்றைக்காவது நீங்கள் பத்திரிகையில் படித்திருக்கிறீர்களா?

இந்தப் பிரகஸ்பதிகளின் கையாலாகாத தனத்தாலும், தீர்க்கதரிசன மற்ற அரசியல் போக்காலுமல்லவா இந்தியர் பாக்கிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது?

அச்சட்டத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று முன்னர் அட்டனில் நடந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி அடுத்த வருடம் மாத்தளையில் நடந்த மாநாட்டில் பகிஷ்கரிப்பை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஏன் தீர்மானித்தார்கள்? அது போகட்டும்.

### தீக்கிரையாக்கப்பட்ட மனுக்கள்

மலையகத்துமக்களை பிரஜா உரிமைக்கு மனுப்போடச் சொல்லி குறுகிய கால எல்லையில் மனுக்களையாவது, இந்த காங்கிரஸ் ஸ்தாபனத்தார் ஒழுங்காக எழுதிக் கொடுத்தார்களா? கடைசியாக இரவோடு இரவாக எழுதிக் குவித்த மனுக்களையாவது சம்பந்தப்பட்ட காரியாலயங்கட்கு அனுப்பி வைத்தார்களா?

அட்டன்பகுதியில்எழுதிய மனுக்களில் அனுப்பியது போக எஞ்சிய இலட்சக் கணக்கான மனுக்கள் தீக்கிரையாக்கப்பட்டனவே! இதனை எவரேனும் ஏனென்று கேட்டார்களா?

மீண்டும் அட்டனில் நடந்த மண்ணடி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்னவாயிற்று என்று கேளுங்கள்.

### சங்கங்கள்

1954ல் நடந்த நேரு-கொத்தலாவலை ஒப்பந்தத்தின்போது திருவாளர்கள்: அஸீஸ், தொண்டமான் இருவர்களும் டில்லிக்குப்பறந்து போனுர்களே, இவர்கள் பேச்சை புதுடில்லியில் எவரேனும் கேட்டார்களா? கரிபூசித்தானே அனுப்பப்பட்டார்கள்.

மலையகத்து மக்களான 12 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கட்கும் இவர்கள் இருவருமே தலைவர்கள் என்று சொல்கிருர்களே! இது உண்மையா? அப்படியானுல் 11 தொழிற்சங்கங்கள் மலைநாட்டில் இயங்கி வருகின்றனவே, அதற்கு என்ன காரணம் சொல்லுகிருர்கள்?

இவர்களின் ஸ்தாபனங்களின் ஜில்லாக்கமிட்டிகள் ஒவ்வொன்றிலும் நிர்வாகம் செய்து வருபவர்களில், உண்மையாக உழைத்தவர்கள், உழைப்பவர்கள் விரல்விட்டு எண்ணும் அளவில் 8, 10 பேர் இருக்கிருர்களே தவிர மற்றைய பேர்வழிகள் அத்தனைபேரும் சுயநலக் கும்பல்கள் தான்.

# நெருக்கடிகள் நீங்க ஒரே...

(3ம்- பக்கத் தொடர்ச்சி)

களை நாம் ஏற்று நடக்கிறேம். இதனைக் கண்டு சிலர், இது முரண்பாடாகாதா? என்று எம்மை வினவுகின்றனர். எல்லாச்சட்டத்துக்கும் மதிப்பளிக்கவல்லவா வேண்டும்? என்கிருர்கள்.

உண்மை அப்படியல்ல. சட்டங்களிலும், நீதியான சட்டங்கள், அநீதியான சட்டங்கள் என இரு வகைச் சட்டங்கள் உண்டு. நீதியான சட்டங்களை மனிதன் வரவேற்க வேண்டும். அவை இயங்க ஒத்துழைக்க வேண்டும்,

ஆனுல், அநீதியான சட்டங்களை மனிதன் எதிர்க்க வேண்டும். அவை இயங்காதிருக்க, அவன் சட்ட மறுப்பு இயக்கத்திலும், இன்னேரன்ன போராட்டங்களிலும் ஈடுபட வேண்டும். அந்த அநீதிச் சட்டங்கள் ஒழிக்கப்பட்டு, அச்சட்டங்களினுல் பாதிக்கப்பட்டவர்க்கு நீதி கிடைக்கும் வரை, அயராது, சலிக்காது, ஓயாது போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

### காங்கிரஸின் 'சாதனை'

திடீர் திடீரென சிறு சிறு வேலை நிறுத்தங்களைச் செய்யச் சொல்லி அந்தத் தோட்டங்களில் கட்சிச் சண்டை




யைக் கிளப்பிவிட்டு தொழிலாளர்களின் பணத்தையும், தட்டுமுட்டுச் சாமான்களையும், கடைசியான தாலியையும் ஈட்டுக்கடைகளில் வைத்து அவர்களை ஒட்டாண்டியாக்கியதோடு, பற்றுச்சீட்டுகளையும் வாங்கிக் கொண்டு, தோட்டம்தோட்டமாக அலையவிட்டு கடைசியில் அம்பலத்தில் இருக்க வைத்ததைத்தவிர காங்கிரஸ்காரர்களினுல் கிடைத்த லாபமென்ன?

இதற்கெல்லாம் காரணம் மலையகமக்களிடம் விசேஷ கல்வி இன்மைதானே! இதனைப்போக்க 25 ஆண்டுகளாக இந்த ஸ்தாபனங்கள் ஏதேனும் செய்திருக்கிறதா?

மலையகத்தில் வீரமரணமெய்திய தொழிலாளர்களின் தியாகத்தினுல் தங்கள் ஸ்தாபனத்தைப் பலப்படுத்திக் கொண்டார்களே தவிர (அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொண்டார்கள்) தொழிலாளர்கட்கு ஏதேனும் விமோசனம் உண்டா? கடைசியில் நாடற்றவர் ஸ்தாபனம் ஒன்று புதிதாக அங்குரார்ப்பணம் செய்ய வேண்டிய நிலையை அவர்கள் உண்டுபண்ணி விட்டார்கள்.

### வாலிபர் பணி

மலையக மக்களின் விடுதலைக்கு மலையகத்து வாலிபர்களே முன்னணியில் குதித்து போராட வேண்டும். தொழிலாளர்களின் வரிப்பணத்தில் இத்தனை ஆடம்பரத்துடன் மாநாடுகளை நடத்துவதால் இதுவரை கிடைத்த நன்மைகள் என்ன? இனிக் கிடைக்கப் போவதென்ன?

ஒரு சிலர், சாத்வீகப் போராட்டத்தின் சக்தியைப் பற்றி, இக்காலத்தில் அதன் பிரயோசனம் பற்றி ஐயம் எழுப்பியுள்ளனர். சாத்வீகப் போராட்டம் பலன் தருமா? என்று அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

ஆனுல், உங்களை நான் சிரம் தாழ்த்திக் கேட்டுக் கொள்கிறேன், நாம் இதுவரை, சாத்வீக நேரடி நடவடிக்கை மூலம் பெற்றுள்ள பலன்களைப் பார்க்கும்படி.

### பலன்கள்

சாத்வீக நேரடி நடவடிக்கை மூலம் தெற்கிலுள்ள முன்னூற்றுக்கும் மேற்பட்ட போசனசாலைகளில் இன சமத்துவத்தை நிலைநாட்ட முடிந்துள்ளது. அதுவும், ஒரு முறையாவது வழக்கு மன்றம் செல்லாமல். 1955லும், 56லும் அலபாமாவிலுள்ள மொண்ட்கமரியில் இலவசப் பிரயாணங்களையும், பஸ் பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டதன் பயனுக, பொதுப் போக்குவரத்துச்சேவை சம்பந்தப்பட்ட சகல பகுதிகளிலும் முற்று முழுதான இன சமத்துவத்தைக் கொண்டு வந்துவிட்டோம்.

ஆனுல், எமது பெரிய வெற்றி அடிப்படை உரிமைகள் பற்றி ஒரு பிரச்சினையை நாடு முழுவதும் உண்டாக்கியதேயாகும். இப்பொழுது, உரிமைப் பிரச்சினை, யாரும் அலட்சியம் செய்ய முடியாத வகையில் உயர்ந்து நிற்கிறது. உரிமைப் பிரச்சினையில் யாரும் நடு நிலைமை வகிக்க இடமில்லை. ஒன்றில் நீர் அதை எதிர்க்க வேண்டும் அல்லது ஆதரிக்க வேண்டும். இது முக்கியமான சாதனை.

ஆகவே, வெற்றி கண்டுள்ள இந்தச் சாத்வீக வழியில், இதே அகிம்சை முறைப் போராட்டப் பாதையில் சென்று எமது இலட்சியத்தை அடைய நாம் முன்னேற வேண்டுமென்பதே எனது திடமான நம்பிக்கை.

**வேல் படை, மருந்து**

**வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தமூவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்**

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

**S. P. S. ஜெயம் அன் கோ.,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# தாயைப் பிரிந்த சேயானேம் தனியே கலைகள் வளர்த்திடுவோம்

அம்மாவின் மடியில் விளையாடி, அவள் ஊட்டிய பாலை உண்டு அகமகிழ்ந்திருந்த காலம் ஓடி விட்டது. வாலிபப் பருவம் அடைந்து விட்டாய் நீ. இனி மேல் நீயாகவே உனக்கான வழியைத் தேடிக் கொள்.

உணவு ஊட்ட இனி மேல் உனக்குத் தாய் வர மாட்டாள், உறக்கம் கொள்ள இனிமேல் அவள் தாலாட்டுப் பாட மாட்டாள். அரிச்சுவடி சொல்லித் தர அன்னை அருகிருக்க மாட்டாள். உன்னை ஆளாக்கிவிட்ட அன்னை—அவள், உன்னைத் தனிமையில் விட்டு விட்டு அதோ அங்கே நின்று விட்டாள். சட்டமெனும் வாளால் பிரிக்கப்பட்டு விட்டாள். இனி நீ வேறு, அவள் வேறு. உன் வாழ்க்கையை நீயே அமைத்துக் கொள்.

ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதே. உன் அன்னை உனக்குப் போதித்த பொன் மொழிகளை மறந்து விடாதே!

உன் மொழியை மறவாதே!

உன் இனத்தை மறவாதே! உன் கலையை, உன் பண்பை ஒதுக்காதே!

உலகம் போற்றும் உத்தமனாய் வாழு.

உன் தாய் பெற்ற புகழை தகர்த்தெறிந்து விடாதே!

இதோ நீ குடியிருக்கும் வீட்டுக்கு அருகில் நிற்கிறாளே—வாலைக் குமரி! வாள் போன்ற விழியால் உன்னை வெட்டி வீழ்த்த நினைக்கிறாள். வாலிப முறுக்கில் அவளின் வஞ்சக வலைக்குள் விழுந்து விடாதே! உன்னை அடிமைப்படுத்த—அவளுடன் உன்னை இணைத்துக் கொள்ள அவள் உன்னை அணுகுகிறாள்-ஆசை மொழி பகருகிறாள்.

அவள் அழகிதான், ஆனால் அவ்வழகில் உன்னை அழித்து விடும் விஷம் இருக்கிறது. மறந்து விடாதே.

### ஈழத்தரசன்

அவளிடம் ஆட்சி பலம் உண்டு. ஆயுத பலமுமுண்டு. ஆள்பேர் அணி வகைகள் அத்தனையும் உண்டு. ஆசை வார்த்தைகள் ஆயிரம் கூறுவாள்—உன்னை அடிமையாக்கவே அவை. நேசக்கரம் நீட்டுகிறாள் உனக்கு—தன் நீலித்தனத்தை மறைக்க. அண்டியவரை அடிமை கொண்டு ஆள நினைக்கும் அதிகார ஆசையில் மூழ்கியவள் அவள் என்பதை மனதில் வை.

★

பேசும் மொழியால், உண்ணும் உணவால், கலை கலாசாரத்தால், பண்பால், மதத்தால் தமிழகத்தாயின் தயவுடன் இதுவரை வாழ்ந்துவந்த இலங்கைத் தமிழ் மக்கள் இன்று தனித்து வாழ வேண்டியவர்களாகி விட்டோம்.

இன்றில்லாவிட்டால் என்றோ இந்நிலை வந்தே தீர்ந்திருக்கும்.

இது காலவரையும் இலங்கைத் தமிழர்களுக்குத் தனித்துவம் வாய்ந்தவை என்று குறிப்பாகக் கூறக் கூடிய எதையும் நாம் சாதிக்கத் தவறி விட்டோம்.

கலையைப் பொறுத்த மட்டிலும் கூட தனித்துவம் பெற்ற ஈழத்தமிழரின் கலை என்று ஒன்றைக் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம். சகலவற்றிற்கும் தாயையே எதிர்பார்த்திருக்கும் தற்குறி தனையனாக நாம் இனிமேலும் வாழ வொண்ணாது.

நமக்கான கலை, நமக்கான பண்பு, நமக்கான கலாச்சாரம் வளர நாம் பாடுபட வேண்டியது நமது கடன்.

நமக்கான வழி இல்லாமலில்லை. ஆனால் அவ்வழியைச் செப்பனிட நமக்கு போதுமான வசதிகள் கிடையா. சகல வசதிகளும் வாய்ப்புகளும் பெற்று சிங்களக் கலை, கலாச்சாரம், பண்பாடு வளருகின்றன. அரசும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயலாற்றுவதனால் நாம் எமக்கான ஒரு மார்க்கத்தைச் சமைப்பதில் பெரும் துன்பங்களுக்குள்ளாக வேண்டியேற்படும்.

தமது கலையையும் பண்பாட்டையும் ஏன் மதாச்சாரத்தையும் கூட நம்மிடையே புகுத்துவதற்கு சிங்கள ஏகாதிபத்தியம் முனைகின்றது. ஆசை வார்த்தைகளைக் கூறி, நேசக்கரம் நீட்டி நம்மை தம்மடிப்படுத்த நினைக்கிறது. பதவி ஆசை, பணத்தாசை ஆகியவற்றுக்காக நம்மை நாமே அடிமைப்படுத்துவது கூடாது.

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவை ஊழிக்காலம் கடந்து வாழ வேண்டுமானால், அதற்கேற்ற திட்டங்கள் தீட்டப்பட வேண்டிய காலம் இதுவேயாகும்.

இன்று நாம் எடுக்கும் முடிவு தான் எம்மினத்தை ஆக்கவோ அழிக்கவோ வல்லதாக அமையப்போகிறது. அறிஞர்களே! நல்லறிவு நல்குங்கள். கலைஞர்களே! உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்.

அறிவும் கருத்தும் நம்கலை வாழ ஆக்கம் தரட்டும்.

பம்பலப்பிட்டி

# றே. க. தமிழ்ப்பாடசாலை பெற்றோர் தினவிழா

கடந்த 9-8-64 ஞாயிறு பி. ப. 6.00 மணிக்கு பம்பலப்பிட்டியிலுள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பெற்றோர் தின விழா நடைபெற்றது. ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பில் உருவான இவ்விழா, காணச்சென்ற ஏனையவர்கட்கெல்லாம் களிப்பூட்டியது. திரு. டி. ஜி குலதுங்க உதவி வித்தியாதிகாரி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலை மாணவிகளின் வரவேற்புப் பாவோடு விழா ஆரம்பமானது. பத்துக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திறம்பட நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் கொழும்பிலுள்ள இதர பாடசாலைகளில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளிலும் பார்க்கத் தரங்கூடியவையாகவிருந்தன.

பாடசாலைப் பழைய மாணவி செல்வி. திரேஸ் இராசையா அவர்களின் முருகாஞ்சலி நடனத்தோடு, கலை நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. 'பெங்களூர்ச் சாரி' என்ற நாடகததில் மூன்று மாணவர்கள் தோன்றி நகைச்சுவையூட்டினர். இந்நாடகம் ஆசிரியர் திரு. எஸ். சந்தனம் அவர்களால் எழுதப்பட்டது. செல்விகள் மெற்றில்டாவும் ரஞ்சனியும் ஆங்கில நாடகததில் தோன்றி அருமையாக நடித்தனர். இந்நாடகத்தை உருவாக்கியவர்கள் ஆசிரியைகள் திருமதி. டனியல் அவர்களும், செல்வி. கோவிந்தம்மா அருணசலம் அவர்களும் ஆவர்.

கண்ணன் நடனத்தில் செல்வி. பிலோமினா கண்ணனாகவும், செல்வி. ருக்மணி ராதையாகவுந் தோன்றி மகிழ்வித்தனர். 'கட்டப் பொம்மன்' நாடகம் கலை நிகழ்ச்சிகளில் முதலிடத்தைப் பெற்றது. பாடசாலை ஆசிரியர்கள் திரு. வீ. கந்தசாமி, திரு. எஸ். வாஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்நாடகத்தில் செல்வன். செய்யிது இப்ராகிம் கட்டப் பொம்மனாகவும், செல்வன். எஸ். ஆரோக்கியம் தானாபதிப்பிள்ளையாகவும், செல்வன் போல்மைக்கல் பாணர் மென்னாகவும், செல்வன். செபஸ்தியன் மதுரநாயகம் லூசிஸ்ரனாகவும் நடித்தனர். அவர்களின் நடிப்புத் திறமையும் பேச்சுவன்மையும் எடுப்பாக இருந்தன.

ஜதீஸ்வரம், தில்லானா ஆகிய பரதநாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

செல்விகள்: நொயலினும், திரேசும் (பழைய மாணவிகள்) நகைச்சுவை நடிகர் சந்திரபாபுவின் 'பொறந்தாலும் ஆம்புளையாப் பொறக்கக் கூடாது' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடித்து இசை நடனமாடினர். மாணவிகளின் குறத்திநடனமும் இடம்பெற்றது. மாணவர்களின் தனி முயற்சியில் உருவான விநோத வாத்தியம் என்ற விகட நிகழ்ச்சி நகைச்சுவையூட்டியது.

இசைநிகழ்ச்சிகள் இப்பாடசாலை இசையாசிரியை திருவாட்டி. விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்டவை. இந்த இசையாசிரியையின் தொண்டு இப்பாடசாலையில் இசைக்கலையை வளர்க்க மிக மிக உதவியளிக்குமென எதிர்பார்க்கிறோம்.

விழாவின் வெற்றிக்கு முக்கிய மானவர்களுள் பாடசாலைத் தலைமையாசிரியை ஞானச் சகோதரி. அர்ச். பீர் டெமின் அவர்களுமாவர்.

### நடந்தவை

## இசை அரங்கேற்றம்

சங்கீதபூஷணம் திரு. ஐ. வேலாயுதபிள்ளை அவர்களின் இசை அரங்கேற்ற வைபவம் இத் திங்கள் 8ம் திகதி மாலை சங்கீதபூஷணம் திரு. என். சண்முகரத்தினம் அவர்கள் தலைமையில் கல்லியங்காடு— ஞானபாஸ்கரோதய வாசிகசாலை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தலைவரின் தலைமையுரையை அடுத்து கச்சேரி ஆரம்பமாகியது. 'எவரிபோத' என்ற ஆபோகி இராகவர்ணத்துடன் கச்சேரி களைகட்ட ஆரம்பித்தது. கச்சேரியில் இடம் பெற்ற பாடல்கள் எல்லாமே நன்றாக இருந்தன வென்றாலும் சிலவற்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.


'அமுதத் தமிழுக்கிணையேது' என்ற பூர்வி கல்யாணி இராகப் பாடலின் போது தான் இராகம் பாடுவதற்கு ஆரம்பித்த கலைஞர், இராகம் பாடுவதில் தமக்குள்ள திறமையை வெளிப்படுத்தி விட்டார்.

இசையரசு எம். எம். தண்டபாணிதேசிகர் அவர்களுடைய சாகித்தியமான 'அன்பு கொண்டென்னை ஆண்டருளே' என்ற ஆரபி இராகப் பாடலை மிக அழகாகப் பாடினார். இராகத்தைக் கேட்ட வித்துவான்களும், பொது மக்களும் மெய் மறந்து அனுபவித்தனர்.

அடுத்தபடியாக இராகம், தாளம், பல்லவி இடம் பெற்றன. சண்முகப்பிரியா இராகத்தை அழகாகப் பாடினார்.

# திருமலை மாநாட்டில் கலை விருந்து

திருகோணமலை நகரில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் 9வது மாநில மாநாட்டில் கலை விருந்துகளும் இடம்பெறுகின்றன. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கலைஞர்கள் கலந்துகொள்ளுகின்றனர். அவர்களில் சிலரை இங்கு காணலாம்.



பால்மணம் மாறாப் பாலகனானாலும் பக்குவமடைந்த தாளத்தை தம்வயப்படுத்தி கேட்போரைக் கிறங்க வைக்கும் செல்வன் நேசதுரை தியாகராசன் மிருதங்கம் வாசிக்கிறார்.



இலங்கை வானொலிப் பாடகரும் இலங்கையில்பல பாகங்களிலும் பல கச்சேரிகளில் இன்னிசை கான மழை பொழிந்து மக்களை மகிழ்வித்தவருமான செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம்.



அகில இலங்கையிலும் புகழீட்டிய அற்புதமான இசை விற்பன்னரான திரு வி. சங்கரலிங்கம் வயலின் வாசிக்கிறார். இவரும் இலங்கை வானொலி வாத்தியக் குழுவைச் சேர்ந்தவர்.



தாள வாத்தியத்துக்கே தனியான மவுசு தேடித்தந்த கடம் வித்துவான் திரு. தமிழ்நாதன். இலங்கை வானொலியிலும் பல இன்னிசைக் கச்சேரிகளிலும் இவரை இரசிகர்கள் பார்த்துப் பாராட்டியுள்ளனர்.



சங்கீதபூஷணம் திரு. மு. அ. சீலநாதன் பிரபலமடைந்துவரும் இளம் கலைஞர்களுள் ஒருவர். இனிமையான சாரீரம உடைய இவருடைய இன்னிசையையும் கேட்டின்புறலாம்.

## அம்மா எங்கே?

இலங்கை சினிமாஸ் திரைகளில் ஓடும் 'கொஞ்சும் குமரியைத்' தயாரித்து வெளியிட்ட மாடர்ன் தியேட்டர்சார் தங்களது 99-வதுபடத்துக்கு 'அம்மா எங்கே?' என்று பெயரிட்டிருக்கின்றனர்.

முத்துராமன், சந்திரகாந்தா, மனோகர், ராஜஸ்ரீ, வீரப்பன், மாதவி முதலியோர் நடித்துவரும் இந்தப் படத்தை ஜி. விசுவநாதன் இயக்குகின்றார். வேதா இசையமைக்கிறார், வாலி பாடல்களை எழுதுகிறார்.

### நடக்கவிருப்பவை

## கலையின் பரிசு

கொழும்பு கலா விருத்திச் சங்கத்தாரின் ஐந்தாவது தயாரிப்பான 'கலையின் பரிசு' என்னும் வரலாற்று நாடகம் எதிர்வரும் 11-10-64 ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். சிறந்த காட்சியமைப்புகளையும் கருத்து மிகுந்த கதை அம்சங்களையும் காதுக்கினிய பாடல்களையும் கொண்ட இந்நாடகம் நாடக உலகில் ஓர் கலைப் புதுமையை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஆக்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறதென சங்கச் செயலாளர் திரு. டி. எம். எஸ். பிள்ளை அறிவிக்கின்றார்.

## கே. எஸ். கே. யின் டைரக்ஷனில் சிவாஜி

அன்னை இல்லம் படத்தை தயாரித்த கமலா பிலிம்சார் அடுத்த படத்துக்கான ஆரம்பவேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சிவாஜி கணேசன் பிரதம பாகத்தில் நடிக்கவிருக்கும் இவர்களது படத்தை கே. எஸ். கோபால கிருஷ்ணன் இயக்குவார். விஸ்வநாதன்-இராமமூர்த்தி இசையமைப்பார்கள். இதர நடிக நடிகையர் இன்னும் முடிவாகவில்லை.

# அறப்போரும் திருக்குறளும்

—பேராசிரியர் கா. பொ. இரத்தினம்

இவ்வுலகிலுள்ள மக்களின் கூட்டு வாழ்விலே பல சிக்கல்கள் உண்டாகின்றன. வாழ்வின் துறைகள் பலவற்றிலே பெரும்பான்மையினர் — சிறுபான்மையினர் எனவோ, வலிபடைத்தோர்—வலியற்றோர் எனவோ பிரிவுகள் தோன்றுகின்றன. இப்பிரிவுகள் போட்டியையும் பூசலையும் வளர்க்கின்றன.

பண நிலையிலோ, படைப் பலத்திலோ, ஆட்சி அதிகாரத்திலோ, மக்கட்டொகையிலோ மிகுந்திருப்பவர்கள் இவற்றிலே குறைந்திருப்பவர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடக்கி ஒடுக்க முயல்கின்றனர். உலக வரலாற்று நூல்களிற் பெரும் பகுதி இந்த முயற்சியின் விளைவுகளையே கூறுகின்கின்றது.

## மாற்று வழி

பெரும்பான்மையினருடன் சரிநிகர் சமானமாக வாழுதற்குச் சிறுபான்மையினர் போர்க் கருவிகள் கொண்டு அவர்களுடன் போராடி வெற்றியீட்டுதல் முடியாது. போரிலே படைப்பலம் மிக்கவர்களே எப்பொழுதும் வெல்வார்கள். எனவே, வன்முறைச் செயல்களாற் சிறுபான்மையினர் பறிக்கப்பட்ட தங்கள் உரிமைகளைப் பெறல் முடியாது. இவ்வாறுயின், சிறுபான்மையினருக்குத் தங்கள் உரிமைகளைப் பெறுதற்கு வேறு வழியில்லையா எனுங் கேள்வி எழுதல் இயல்பே. இந்த நாற்றுண்டுவரை அவர்கள் வேறு வழியற்றவர்களாகவே பெரும்பான்மையினர் தயவில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நூற்றுண்டிலேயே காந்தி அடிகள் உரிமைகளை இழந்து ஒடுங்கி அடங்கிக் கிடக்கும் சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுதற்கு ஒரு பெருவழியை வகுத்தார். இந்த வழிதான் சத்தியாக்கிரகப் போராட்டம் எனப்படுவது, இதனை அறப்போர் எனவுங் கூறலாம். உலகம் உய்தி அடைதற்குக் காந்தி அடிகள் காட்டிய வழிகளிற் தலை சிறந்தது இவ்வழியேயாகும்.

## அறப்போர்

அறப்போர் வலிமிக்க பெரும்பான்மையினருக்கு வேண்டியதில்லை. பெரும்பான்மையினர் வன்முறைச் செயல்களாலேயே வெற்றியீட்டத்தக்கவர்கள். பெரும்பான்மையினரால் நசுக்கப்படுபவர்களுக்கே— தோல்வியடைந்தவர்களுக்கே இந்த அறப்போர் உரியது. இதனை மேற்கொள்வோர் தாங்கள் நசுக்கப்பட்டவர்கள்— தோல்வியுற்றவர்கள் என்பதனுலேயே இதனை நாடுகின்றனர். எனவே இந்த அறப்போரில் தோல்விக்கு இடமில்லை. தோல்வியின் அடையாளமே அறப்போர் எனலாம்.

## அறப்போர் எப்பொழுது?

சத்தியாக்கிரகப் போராட்டம் என்பதன் பொருள் உண்மை கடைப்பிடித்துப் போராடல் என்பதாகும். இதன் அடிப்படை அகிம்சை. அகிம்சையைத் திருக்குறள் 'இன்னுசெய்யாமை' என்றுரைக்கிறது. பிறருடைய உரிமைகளைப் பறிப்பதற்கு முயல்பவர்கள் சத்தியாக்கிரகத்திலீடுபடல் முடியாது. இதற்காகச் செய்யப்படுஞ் சத்தியாக்கிரகம் உண்மையில் அசத்தியாக்கிரகமாம்— மறப்போர் — எனவேபடும். பிறருடைய நியாயமான உரிமைகளைப் பாதிக்காமல் பறிக்கப்பட்ட தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு அறவழியிற் போராடுதலே சத்தியாக்கிரகம் என்பதை இக்காலத்திற் பலர் உணர்வதில்லை. பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெறுதற்கு அறப்போர் புரியும் பொழுது உண்மை, இன்னுசெய்யாமை என்பவைகளே போர்க்கருவிகளாக இருத்தல் வேண்டும்.

## அறப்போரின் தன்மை

இப்போரில் ஈடுபடுவோர் தம்மை வருத்துவதாலும், உண்மையினின்று வழுவாமல் நடப்பதாலும், மாற்ருரின் மனத்தை இழகச் செய்வதையும், தம் உரிமைகளைப் பெறுதற்குத்தாம் கொண்ட உறுதியை உலகத்துக்கு உணர்த்துவதையுமே தலைமையான நோக்கங்களாகக் கொள்ளல் வேண்டும். இம்முறையில் நடத்தப்படும் அறப்போர் எக்காலத்தும் எவ்விதத் தீமையையும் விளைவிக்காது. நீர் எப்பொழுதும் நெருப்பை அணைக்கும். சிற்றளவான நீர் பெரு நெருப்பை அணைக்காதெனினும் அதில் ஒரு பகுதியை அணைக்கும். இதைப் போன்றே அறப்போரும் மாற்ருரின் எதிர்ப்பைக்— கொடுஞ் செயலை — முற்ருக அழிக்காவிடினும் அதில் ஒரு பகுதியையேனும் குறைக்கும். எண்ணெயைப் போல நீர் என்றும் நெருப்பைப் பெருக்காது. அறப்போரும் வன்செயல்களைப் போலக் கொடுமைகளைப் பெருக்காது. இந்த உண்மையை அறியாமற் பலர் அறப்போரைக் குறைத்துக் கணிப்பதற்கு அவர்களுக்கு அறத்தில் நம்பிக்கையின்மையே காரணமாகும்.

## அறப்போர் வீரன்

சட்டமறுப்பு, ஒத்துழையாமை, புறக்கணித்தல் முதலிய அறப்போர் முறைகளைக் காந்தி அடிகள் நன்கு விளக்கியுளார். அறப்போர் பெருவீரம் உடையவர்களுக்கே உரியது; கோழைகளுக்கு உரியதன்று எனவும் அவர் கூறியுளார்.

அறப்போரில் ஈடுபடுபவர்களுக்கும் முன்னணியில் நின்று இப்போரை நடத்துபவர்களுக்கும் உள்ளத்தில் உறுதி வேண்டும். அறத்தின் பேராற்றலில் அசையாத நம்பிக்கை உடையவர்ளுக்கே உள்ளத்தில் உறுதி நிலைத்திருக்கும்.

அறம் என்றும் வெல்லும் என்பதை நம்பாதவர்கள் அறப்போரில் உண்டாகும் இடர்ப்பாடுகளைக் கண்டு தளர்ச்சி அடைதல் கூடும். அறத்தினைத் தீமை கவ்வும் போது அறம் தோற்பது போலத் தோன்றலாம். எனினும் ஈற்றில் அறமே வெல்லும். கிற்றிலர், முசோலினி போன்ற கொடுங்கோலர்களின் வரலாறுகள் இதனை நன்கு புலப்படுத்துகின்றன.

'தருமத்தின் வாழ்வதனைச்
சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்'

என்று பாரதியார் கூறுவதையும் அறப்போரில் ஈடுபடுவோர் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும்.

## அறப்போரும் குறளும்

அறம் என்றும் வெல்லும் எனும் உண்மையையும், தீமை செய்வோரை அறமே அழிக்கும் என்பதையும், அறவழியிலே பிறருக்குத் தீமை செய்யாமல் வாழ்பவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதையும், மறத்தையும் அன்பினுலே அறத்தாலேயே வெல்லலாம் என்பதையும் அழுத்தந்திருத்தமாக விளக்கி மக்களுக்கு அறப்போரிலே அசையாத நம்பிக்கையை உண்டாக்கும் ஒரேயொரு நூல், திருக்குறளேயாகும். காந்தியடிகள் வகுத்துரைத்த அறப்போரின் அடிப்படைகள் யாவும் திருக்குறளிலேயே அமைந்து கிடக்கின்றன. இந்தப் பேருண்மையை உணர்ந்தமையாலேயே காந்தி அடிகள் திருக்குறளைப் படிக்க விரும்பித் தமிழினைக்கற்ருர்.



கட்டுரையாசிரியா

அறத்தின் ஆற்றலும் அறப்போரின் திறனும் பல குறள்களிலே விளக்கப்பட்டுள ஒருவரையோ, ஓரினத்தினரையோ, ஒரு நாட்டினரையோ நசுக்கி அடக்க முயல்பவர்கள் யாராயிருப்பினும் -ஒருவராயிருப்பினும் குழுவினராயிருப்பினும் அறத்தினுலே அழிக்கப்படுவர் என்பதைத் தெட்டத் தெளிவாகத் திருக்குறள் செப்புகிறது.

தீமை செய்கிறவர்களைத் தாமாகக் கெடச் செய்யவும் தானுகக் கெடுக்கவும் அறம் முயலும் என்று திருக்குறள் கூறுவதால், கொடுமைக்குட்பட்டவர்கள் தம் உரிமையைப் பெறுதற்கு அறப்போர் செய்யாதிருத்தல் கூடாது. "பெருந்தன்மை" என்று கூறிக்கொண்டு மாற்ருருடன் அடிமைகள் போல ஒத்துழைப்பது கோழைத்தனமாகும். மாற்ருரை வன்முறைச் செயலகளால் ஊறுபடுத்தலோ அவர்களுக்கு வேறெவ்விதமான இன்னல்களைச் செய்தலோ கூடாதென்பதே திருக்குறள் கூறும் அறம். கண்மூடித்தனமாகத் "தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்கிருேம்" என்று "வறட்டு வேதாந்தம்" பேசிக்கொண்டு மனிதப்பண்பை— பெருந்தகைமையை இழந்து மாற்ருருக்குப் பின் சென்று அடிவருடிகளாய் அடிமைகள் போல வாழுதலைத் திருக்குறள் பழித்தே உரைக்கிறது என்பதையும் மக்கள் உளங்கொள வேண்டும்.

அறப்போர் எதிர்பாராத பல வழிகளிலே மாற்ருருடைய மனத்தை மாற்றும்; அவர்களுடைய செல்வத்தைத் தேய்க்கும், தீமைகள் பலவற்றை விளைவிக்கும்; அவர்களுக்குள்ளே போட்டியையும் பூசலையும் உண்டாக்கும்; உண்மை உணர்ந்து, உரிமைகளை நல்கச் செய்யும். அறப்போரில் ஈடுபடும் மக்கள் திருக்குறள் கூறும் இந்த உண்மைகளை அறிந்து எதற்கும் உள்ளஞ் சோராமல் உறுதியுடன் தொடர்ந்து போராடினுல் ஈற்றில் எண்ணியவற்றை எண்ணியவாறு பெறலாம்.

---

# சிங்கள...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் நாம் வெற்றீ பெற்று ஓர் சமஷ்டி ஆட்சியை நிறுவி சிங்கள மக்களோடு சமமாக வாழலாம் என்பது எமது நம்பிக்கையாக விருக்கிறது. இரு மொழிகளைப் பேசும் இவ்விரு இனங்களும் தமது வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்கி வாழ்வதற்கு கூட்டாட்சியே ஒரே மார்க்கம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதே, சிறந்த அரசியல் ஞானிகளின் கருத்தாகவும் அமைகிறது. ஆனுல், இம்முயற்சியில் நாம் வெற்றிகாண முடியாதிருந்தால் சிங்கள மக்களே எம்மை தங்கள் செய்கைகளினுல் தனித்தியங்க வைக்கும் நிலைஒன்று உருவாக முடியும். அந்நிலையை எவ்வாறு விரும்பாத போதிலும் அது எம் மீது திணிக்கப்பட்டால் நாம் வரவேற்கவும் தயாராக இருக்க வேண்டும். அதற்கான பொருளாதாரம் எமக்குப் பூரணமாக விருக்கின்றது.

எதற்கும் அஞ்சாது நாம் இந்நாட்டில் சுதந்திர மக்களாக வாழ வேண்டுமென்ற உறுதியையும் தன்னம்பிக்கையையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் எமது வேண்டுகோள்.

வாழ்க தமிழரசு

---

நமது கலை, சாஸ்திரம், தத்துவம் முதலிய யாவற்றையும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும். அதற்காக, விடயங்களைப் பிரித்துப் பிரித்துப் பார்க்கக் கூடாது; சேர்த்தே பார்க்க வேண்டும்.

—மாஜினி.

---

# நகராண்மைக் கழகத்திற்கு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துவதில் கூட்டரசாங்கம் தீவிர சிரத்தையெடுத்து வருவதற்கு இம் முடிவு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## மத்திய வங்கியும் கூட்டரவுகளும்

மேலும், மத்திய வங்கி உட்பட எல்லாக் கூட்டரவுகளும் சிங்களத்தில் அதன் கருமங்களைச்செய்ய வேண்டுமென்று அன்று கூடிய அமைச்சரவை உப குழு முடிவு செய்திருக்கிறது.

மத்திய வங்கி பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே அதன் நிர்வாகத்தை நடாத்தி வருகிறது. கூட்டரவுகளில் பெரும்பாலானவை ஆங்கிலத்திலேயே செயல்பட்டு வருகின்றன. அவற்றிலும் சிங்களத்தைப் புகுத்தி தமிழ் பேசும் ஊழியர்களை வெளியேற்ற எடுக்கும் முயற்சியே இது.

சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனைத் தாளாலைக் கூட்டரவில் நடைபெற்ற தனித் தமிழ் இயக்க நடவடிக்கை நிர்வாகிகளை நிலைகுலைய வைத்தது. நிர்வாகிகள் அடிபணிந்து தமிழ்த் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்கிய பின்னரே தனித் தமிழ் இயக்கம் கைவிடப்பட்டது. இதை அமைச்சரவை உபகுழு மறந்திருக்க முடியாது.

கூட்டரவுகளில் செயல் புரியும் தமிழ் ஊழியர்களை வெளியேற்ற சிங்களத்தைத் துணைக்கிழுத்தால் நிச்சயம் தோல்வியே கிட்டும்.

அன்று கூடிய அதே அமைச்சரவை 'எல்லா ஆளடையாள அட்டைகளிலும் நபர்களின் பெயர்களை சிங்களத்துடன் ஆங்கிலத்திலும் அச்சிடுவதென்று' முடிவுசெய்துள்ளது.

சிங்களம் நாட்டில்வாழும் பெரும்பான்மை மக்களின் மொழி. அப்படியானுல் ஆங்கிலம் யாருடைய மொழி? தேசியப்பற்று மிக்கவர்கள் என்று குரல்கொடுக்கும் சுதந்திரக்கட்சியினரும் சமசமாஜக்கட்சியினரும் எதற்காக ஆங்கிலத்தை வாரி அணைக்கவேண்டும்? அல்லது ஆங்கிலம் சிறுபான்மை மக்களாகிய தமிழ் பேசும் மக்களின் தாய்மொழியா?

அமைச்சரவை உபகுழு முடிவு இனவொழிப்புநடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதாக உள்ளது.தமிழ்பேசும் மக்களுக்கு உரிமை வழங்குவார்கள் சமசமாஜிஸ்டு மந்திரிகள் என்றும், டாக்டர் பெரேரா இதற்கு வேண்டியவற்றைநடைமுறையிலாக்குவார் என்றும் ஒரு சிலர் கூறி வருகிருர்கள்.

ஆனுல் எந்த டாக்டர் பெரேரா உரிமை வழங்குவார் என்றுகூறுகிருர்களோ அவர் முக்கியமாக அங்கம் வகிக்கும் அமைச்சரவை உபகுழு திருமலை நகரசபைக்கு சவால் விடுகிறது, கூட்டரவுகளில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறது, 56-ம் ஆண்டுக்குப்பின்னர் அரச சேவையில் சேர்ந்த தமிழ் பேசும் ஊழியர்களை வெளியேற்றுகிறது, ஈற்றில் ஆங்கில மொழிக்குக் கொடுக்குமிடந்தானும் தமிழ்மொழிக்குக் கொடுக்கமுடியாது என்ற முறையில் தீர்மானமெடுத்துப்பகிரங்கப்படுத்தியுள்ளார்கள்.

இந்த நிலையில் சமசமாஜ மந்திரிக்கு சிலர் வட பகுதியில் வாழ்த்துப்பா பாடியுள்ளார்கள். பலாலி விமான நிலையத்தில்வைத்து போக்குவரத்து அமைச்சருக்கு ஒரு கிராம முன்னேற்றச் சங்கம் வரவேற்புக் கொடுத்திருக்கிறது.

## வரலாறு புகட்டும்

வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபொழுதும் சில முதலாளிகள் வரவேற்புக் கொடுத்தார்கள். ஆதனுல், இந்தியாவின்விடுதலைப் போராட்டம் நின்றுவிடவில்லை.

பாரதவிடுதலைப்போருக்கு கொம்யூனிஸ்டுக் கட்சியினர் இடர் பல விளைத்தார்கள். அதனுல் பாரதம் விடுதலை பெருது இருந்துவிடவில்லை.

பிரிட்டிஷ் ராணுவத்தில் சேரவேண்டாமென்று காந்திஜி பிரசாரம் செய்தார். ஆனுலும் பலர் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்தார்கள். இதனுல் பாரத விடுதலைப் போராட்டம் நின்றுவிடவில்லை. முன்னர் நடைபெற்றதிலும் பார்க்க விடுதலைப்போராட்டம் வேகமாக நடைபெற்றது.

வரலாற்றை அறிந்து கொள்ளாதவர்கள் தெரிந்து கொள்ளாதவர்கள் ஆட்சியினருக்கு வரவேற்புக் கொடுக்கலாம் வாழ்த்துப் பாடலாம், மந்திரிக்கு மலர் மாலை சூட்டலாம். அதனுல் தமிழ்பேசுமினத்தின் விடுதலைப் போராட்டத்தை இந்த நிகழ்ச்சிகள் மறைக்கவோ மறக்கவோ செய்ய முடியாது. காலம் உணர்த்தும்; கயவர்களும் காக்கை வன்னியர்களும்திருந்துவார்கள்.

# பதினைந்து கேள்வி: பகிரங்க பதில் வேண்டும்

## அமைச்சர் அனிலிடம் சுண்ணாக வாலிபர் சமர்ப்பித்தார்

### தட்டிக் கழித்து விட்டார் அமைச்சர்

அமைச்சர் அனில் முனசிங்கா கர்த்தால் நினைவு தினக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவதற்காக கடந்த வாரம் சுண்ணாகத்திற்குச் சென்றிருந்த சமயம், அதே இடத்தைச் சேர்ந்த திரு. ஆசிர்வாதம் கென்றி அமைச்சரிடம் பதினைந்து கேள்விகளைப் பகிரங்கமாகக் கேட்டிருந்தார். அவற்றிற்குப் பதில் எதுவும் கூறாது அமைச்சர் நட்டிக் கழித்துவிட்டார். சமசமாஜத் தலைவர்களிடம் தமிழ் பேசும் பொது மக்கள் கேட்கும் கேள்விகளை சில காலமாக அவர்கள் தட்டிக் கழித்து வருகிறார்கள். சில சந்தர்ப்பங்களில்; 'உங்களின் கேள்விகளுக்குப் பதில் கூற வரவில்லை; எமது கருத்தைத் தெரிவிக்கவே வந்திருக்கிறோம்' என்றும் இவர்கள் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். அமைச்சரிடம் ஆசிர்வாதம் கென்றி கேட்ட கேள்விகளின் விபரம் வருமாறு:

தமிழ்பேசும் மக்களும் தமிழரசுக்கட்சியும் ஆதரித்த 1953-ம் ஆண்டு கர்த்தால் நினைவு கொண்டாட வருகிறீர்கள். கர்த்தால் நினைவு தினத்தின் பெயரால் தாங்கள் இங்கு வரும் தந்திரமும் அறிவோம். வாருங்கள், வந்து தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது என்று அறிந்து மீளுங்கள்.

சென்ற பத்து வருடங்களாக ஒரு உண்மையை--எந்தச் சிங்களக் கட்சியையும் நம்ப முடியாது என்ற உண்மையைச்-சொல்லி வந்தோம். சென்ற இரண்டு தேர்தல்களிலும் இதைதமிழ் மக்கள் உங்களுக்கு உணர்த்தினார்கள். அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் இன்று உண்மைப்படுத்தி நிரூபித்தீர்கள்.

சம அந்தஸ்து, சமத்துவம், தேசிய மயம் என்ற போலிவேடங்களைக் களைந்து அசல் வகுப்புவாத மொழி வெறி, மதவெறியுடைய அரசாங்கத்தோடு சேர்ந்து உங்கள் உண்மைச் சொரூபத்தைக் காட்டியதற்கு நன்றி. சிங்களவர் சிங்களவர்தான் தமிழர் தமிழர்தான் என்று ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சிகளைப் பின்பற்றி நீங்களும் அறிவுறுத்தியதற்கு நன்றி.

வகுப்புவாதத்திற்கு சரணடைந்த உங்கள் கட்சியை நம்பி ஏமாந்த மானமுள்ள ஒரு சிலர் இன்று உங்களை விட்டு விலகியுள்ளார்கள். வேறு சிலர் உங்கள் கெட்ட கோலம் ஒரு புறம் தள்ள, தாம் தொட்ட பாசம் மறு புறம் இழுக்க திகைத்து, சொந்த நினைவற்று செயலற்று திண்டாடுகிறார்கள். சிலர் உங்களால் தமக்குக் கிட்டும் அரசாங்க சலுகை, பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டு இன்றும் இறுக ஒட்டி நிற்கிறார்கள். இவர்களால் உங்கள் அரசாங்கத்துக்கு ஒரு பயனும் கிடையாது. இவர்களைக் கொண்டு தமிழ்மக்களைவசப் படுத்தி அவர்களை அடிமைகளாக்கித் தருவீர்கள் என்று அரசாங்கம் நம்பி இருக்கிறது. இந்த முயற்சி படு தோல்வி அடையும்.

தமிழ்மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள். நீங்கள் அரசாங்கத்தின் இனவெறியை இனிப்புப் பூசித்தந்தாலும் நாம் ஏமாந்து விழுங்கி அடிமைகளாக மாட்டோம்.

ஆனால் இங்கு வந்த நீங்கள் இக் கேள்விகளுக்கு தயவு செய்து பதில் அளித்து விட்டுப் போங்கள்.

15 கேள்வி

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து எங்கே?

சுதந்திரக் கட்சியின் மொழிக்கொள்கைக்கும் உங்கள் மொழிக்கொள்கைக்கும் ஏதும் வித்தியாசம் உண்டா?

சிங்களம் படியாத தமிழ் அரசாங்க ஊழியர் வெளியேற்றப்படுவார்களா?

தமிழ் ஊழியர் சிங்களம் படிக்கக் கட்டாயப்படுத்துவதுபோல சிங்கள ஊழியர் தமிழ் படிக்கக் கட்டாயப் படுத்தப்படுவார்களா?

மலைநாட்டுத் தமிழ்பிள்ளைகள் சிங்களப் போதனு மொழி மூலந்தான் கல்வி பெறவேண்டுமா?

தமிழ் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் சிங்களம்படிக்க சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படவேண்டுமா?

மலைநாட்டுத் தமிழ் மக்களுடைய பிரஜா உரிமை, வாக்குரிமை ஆகியவற்றிற்கு உங்கள் திட்டம் என்ன? இலங்கையில் தமிழரும், முஸ்லிம்களும் காணி நிலம் வாங்கவேண்டுமென்றால்தங்கள் பிரஜா உரிமையை நிரூபிக்கவேண்டுமென்று கேட்பது நீதியா?

இலங்கையிலுள்ள சகல மதங்களுக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமா அல்லது மத வெறியர்கள் கேட்பது போல் புத்தமதத்திற்கு மட்டும் முதலிடமும் அரசாங்கத்தின் விஷேச சலுகையும் கொடுக்க வேண்டுமா?

தமிழ் பேசும் மக்கள் தங்கள் பிரதேசத்தில் தங்கள் விஷயங்களைத்தாங்களே கவனித்து நிர்மாணித்துநடத்துவது சரியா?

தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளுவது மார்க்சீயவாதத்திற்கு முரணா?

சிங்கள மக்கள் தங்கள் அலுவல்களைத் தங்கள் பிரதேசத்தில் தாங்களே நிர்மாணித்துநடத்தவும், தமிழ் மக்கள் தங்கள் அலுவல்களை தமிழ் பிரதேசத்தில் தாங்களே நிர்மாணித்து நடத்தவும், இனப் பிரச்சினையற்ற பொது அலுவல்களை இருவரும் சேர்ந்து ஒரு மத்திய அரசில் நடத்தவும் அமையும் சமஷ்டி அரசியல் திட்டத்திற்கு நீங்கள் கூறும் தடை என்ன?

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடாது, தமிழ் பிரதேசம் என்று ஒன்று இருக்கக்கூடாது என்று வகுப்பு வாத ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசத்தில் நடத்திய சிங்களக் குடியேற்றத்திற்கு நீங்களும் உடந்தையா?

சென்ற முறை திரு. இலங்கரத்தின அவர்களால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்குப் பணம் ஒதுக்கப்பட்டதே. இன்று நாணயக்கார மாட்டீன் பெரேராவால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் காங்கேசன்துறைத் துறைமுகம் புறக்கணிக்கப்பட்டதன் காரணம் என்ன?

சமீபத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒற்காணி திருத்த மசோதாவுக்கு வகுப்புவாத ரீதியில் வகுப்புவாதி கே. எம். பி. இராசரத்தினவால் கொண்டு வரப்பட்ட திருத்தப் பிரேரணையை கம்யூனிஸ்ட்கட்சி, தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவைகள் எதிர்த்து வாக்களிக்க நீங்கள்மட்டும் ஏன் ஆதரித்து வாக்களித்தீர்கள்?

#### வரவேற்பு என்றும் இல்லை

திரு. அனில் முனசிங்கா அவர்களே! அண்மையில் கொழும்புதுறைமுகத் தமிழ் தொழிலாளர்கள் உங்கள் பேச்சைத் தமிழ் மொழி பெயர்ப்பில் கேட்கத் தடை செய்தீர்கள். இங்கும் அப்படிச் செய்யாமல் உங்கள் பேச்சையும், இக் கேள்விகளுக்குப் பதிலையும் தமிழில் நாம் கேட்க செய்யப்படும் ஒழுங்குகளைத் தடை செய்யாதீர்கள்.

இக் கர்த்தால் தினம் ஓர் தேசிய தினம். ஆகையினால் நாம் உங்களை இவ்விடத்தில் பேசவும் பங்கு கொள்ளவும் அனுமதிக்கின்றோம். இதை விட்டு நீங்கள் உங்கள் உத்தியோக தோரணையில் விஜயம் செய்யவோ அல்லதுவரவேற்புக்களில்பங்குகொள்ளவோ மானமுள்ள கட்சித் தமிழன்இருக்கும்வரை அனுமதிக்கமாட்டான் என்பதை உங்களுக்கு திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

---

# இனச் சுதந்திரம்

பன்மொழிப் புலவர்
**கா. அப்பாத்துரை**
எம். ஏ., எல். டி.

தமிழகம் ஒரு சுதந்திர நாடாகஇருந்திருக்குமானால் அல்லது குறைந்த அளவு ஒரு சுதந்திர நாட்டின் தன்னுரிமை பெற்ற உறுப்பாக அல்லது இனமாக இருந்திருக்கக்கூடுமானால், தமிழ் தமிழகப் பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி, உலகப் பல்கலைக் கழகங்களிலும் உயர் தனிச் செம்மொழியாக இடம் பெற்றிருக்கும். ஆனால் நேர்மாறாக மொழித் துறையிலே கூட உரிமையும் மதிப்பும் பாதிக்கப்படும் அளவுக்குத் தமிழர் தம் நாட்டிலேயே அடிமைச் சூழ்நிலையில் சிக்கியுள்ளனர். உரிமையிழந்த கிரேக்க உரோம நாடுகளின் பண்டைமொழிகூட உயர் தனிச் செம்மொழிகள் என்ற காரணத்தில் அயலினங்களால் போற்றப்படுகின்றது. ஆனால் தமிழ் மொழியின் தனிப் பெருந்தகுதியைக்கூடத் தமிழனின் தன்மதிப்பற்ற அவல நிலை கெடுத்துள்ளது, கெடுத்து வருகிறது.

உயர் தனிச் செம்மொழியாகிய தன் மொழியை உலகில் ஆதரவற்ற நிலையில் விட்டுவிட்டு, சமஸ்கிருதத்தை உயர் தனிச் செம்மொழியாக ஏற்கும்படி தமிழகத்திலேயே ஆரிய இன எழுச்சியாளர் தமிழனை வற்புறுத்துகின்றனர். தமிழ் மொழியின உரிமைகளை அதற்குப் பலியிடும்படி ஓயாது தூண்டுகின்றனர். நீண்டகால அடிமைத்தனத்தின் காரணமாகத் தமிழகத்தில் பிறர்மொழிச் சார்பாளர், பிற இனப்பற்றாளர்கள் கையிலேயே அரசியல், சமுதாய ஆட்சி, செல்வர் ஆதரவு, பத்திரிகைகள், திரைப்படம், வானொலி முதலிய எல்லாப் பொது நிறுவனங்களும் சென்று சேர்ந்துள்ளன.

தமிழன் பழந்தகுதி! அவன் இன்றைய அவலநிலை! இவற்றைத் துடைத்தழிக்கத் தமிழ்ப் பற்றுடையோர் எல்லாவகைத் தியாகங்களும் செய்யவேண்டும், எல்லாவகை உழைப்பும் ஆற்றவேண்டும். சிறப்பாக உலக மக்கள் கவனம் தமிழகத்தின் பட்டப்பகல் அநீதிகள், இன ஒரவஞ்சக ஆட்சி ஆகியவற்றின்மீது செலுத்தப்படவேண்டும். உலக மக்கள் ஒத்துணர்வு இல்லாமல் தமிழன் தனக்கெதிராகச் சூழ்ந்துவரும் ஆரிய இன எழுச்சிச் சூழலிருந்து மீள முடியாது.

தமிழகம் சுதந்தரம் அடையும்வரை, தமிழினம் தமிழகத்துடன் தொடர்பு கொள்ள முன்வரும் வரை, கடல் கடந்த தமிழருடன் தமிழன் மொழித் தொடர்பு கொள்ளும் உரிமை பெறும்வரை, தமிழக அரசியல் தமிழர் நலன்களை, அவா ஆர்வங்களை உணர்வது அருமை! அதைத் தமிழ்ப் பண்பாளரிடம் உள்ள செல்வர், நிலையங்கள் கட்சிகள் ஆகியவைகளேசெய்ய, வேண்டும். இவ்வகையில் தமிழக அரசியலை மட்டுமன்றி, தமிழகத்தின் தமிழ்ப் பண்பற்ற சமய, சமுதாய, அற நிலையங்களைக்கூட எதிர்க்க வேண்டி வரலாம். ஆனால் தமிழன்பு ஒரு சிறிது உடைய தமிழர் அந்நிலையங்களில் உள்ளவரை, தன்னலத்திலும் மிஞ்சிய இனநலமுடைய தமிழர் ஆதரவு அவற்றுக்குத் தேவையிருக்கும்வரை, போராட்டம் அன்புப் போராட்டமாகவே இருத்தல் நலம்.

தமிழன் இன்று பிறஇனங்களுக்காகத் தியாகம் செய்யத் தயங்கவில்லை, உயிரிழக்கவும். ஆயினும் தமிழுக்காகத் தமிழரில் பலர்—சிறப்பாகப் படித்தவர், பிற மொழி படித்தவர், அல்லது பிற ஆதிக்க மொழி ஆதரவால் தனி நலம் பெறுபவர்—தம் தன்னலத்தைச் சிறிது தியாகம் செய்யக் கூடத் தயங்குகின்றனர். தமிழர் வீரம் இப்போது இத்தகைய தன்னலத்தின் காலடியில் கிடந்து துவள்கிறது.

தமிழில் இன்று ஏற்பட்டு வரும் மறுமலர்ச்சி தமிழர் இகழ் நீக்கி வருங்காலப் புகழ் வளர்க்கப் பயன்படத்தக்கது. ஆனால் தமிழறிவும் உலக அறிவும் இல்லாவிட்டால் மறுமலர்ச்சி ஆர்வம் பயனில்லாது போய்விடும். இரண்டையும் தமிழரிடையே பரப்பத்தக்க கழகங்கள், அறிவகங்கள், அற நிலையங்கள், தொழிலகங்கள் தமிழகத்தில் பெருகவேண்டும்.

தமிழன் உயிர்ப்பண்பு எத்தனையோ இன்னல்களைத் தாண்டியுள்ளது. ஆனால் இனச் சுதந்தரம் இழந்த பின்னும் இவ்வுயிர்ப் பண்பு நீடித்து நிலவும் என்று கூற முடியாது. அச்சுதந்திரம் நாடித் தமிழக இளைஞரும் முதியவரும், ஆடவரும் பெண்டிரும், செல்வரும் ஏழையரும் ஒன்றுகூடி எழுவார்களாக!

—(சரித்திரம் பேசுகிறது)

---

யாழ். நகரசபையின்

### கலை நிகழ்ச்சி

யாழ். மாநகரசபை அளித்து வரும் கலை நிகழ்ச்சிகளில் 5வது நிகழ்ச்சி 22ம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு, யாழ். திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

செல்வி மாதுசிரோன்மணி வேலாயுதம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும், வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தாரின் "நல்லதும் கெட்டதும்" நாடகமும் நடைபெறுமென்று நகர முதல்வர் திரு. கா. செ. மகாதேவா அறிவித்துள்ளார்.

---

### உடுப்பிட்டி மாவட்டக் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சி உடுப்பிட்டி மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 12-ம் திகதி தலைவர் திரு. க. ஜெயக்கொடி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புதுவருடப் பதவியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: க. தம்பையா, துணைத் தலைவர்கள்: கி. மயில்வாகனம், த. சுப்பிரமணியம், வே. கு. நடராசா, செயலாளர்: க. ஜெயக்கொடி, துணைச் செயலாளர்: சி. கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர்: நா. பொன்னையா, துணைப் பொருளாளர்: ஐ. மாணிக்கம்.

பின்வரும் பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன:

சமஷ்டி பெறச் சாத்தியமின்றேல் தனி அரசு நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தாய்க் கட்சியை உடுப்பிட்டி மாவட்ட சபை கேட்டுக் கொள்ளுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு அரசாங்கம் யோசித்திருக்கும் திட்டத்தை உடனடியாகக் கைவிடாவிட்டால் எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்னைக்கும், பனைக்கும் கூடுதலாக விதிக்கப்பட்டிருக்கும் வரி, சீவல் தொழிலாளர்களைப்பாதிக்குமாகையால் அவ்வரிகளைக் கூட்டுவதை நிறுத்தி முன்னிருந்ததிலும் குறைக்க வேண்டும் என்று இச்சபை வலியுறுத்துகின்றது.

1956-ம் ஆண்டின் பின் சேர்ந்த அரசாங்க ஊழியர்களை சிங்களம் படியாத காரணத்தால் வேலை நீக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

# இஸ்லாமியரை வழி நடத்த இயலாத தலைவர்கள் இருந்துதான் என்ன பயன்?

**வேற்று இனமக்களை நசுக்கிப் பிழிந்து அழித்தொழிக்க முயலும் பொல்லாத அரசை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றலற்ற தலைவர்கள் எமக்கு வேண்டாம். கொடுமையை எதிர்த்து குரல் எழுப்பவல்ல தலைவர்களே இஸ்லாமி சமுதாயத்துக்கு இன்று தேவை.**

உலகில் எந்த இனம் பேசிப் பேசி இன்பங்கொண்டு பொழுது போக்குபவர்களை அதிகமாகப் பெற்றிருக்கின்றதோ அந்த இனத்திற்கும் சுதந்திர வாழ்வுக்கும் மிக நீண்ட தூரம் என்பது அரசியல் அறிஞர்களின் தீர்ப்பு. அது போன்றே எந்த இனத்தில் மக்களை விடத் தலைவர்கள் அதிகமாக இருக்கின்ருர்களோ—அப்படியே தலைவர்களைப் பின்பற்றுபவர்களை விட போற்றிக்கொண்டிருப்பவர்கள் பெரும்பான்மையினர்களாக இருக்கின்ருர்களோ அந்த இனத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் இடைவெளியே கிடையாது என்பதையும் வரலாறு எமக்கு எடுத்துக்காட்டத் தவறவில்லை.

இத்தகைய ஓர் நிலையைத்தான் இன்றைய முஸ்லிம்கள் மத்தியில் வேதனையோடு நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒருவர் சுகமாக வாழும்போது தான் மட்டும் துன்பப்படுவது தலைவிதி என்று பெருமையுடன் தாங்கிக் கொண்டிருந்த காலம் போய், உயர்ந்தவனைப் போல் நானும் உயர வேண்டும், அப்படி உயர நினைக்கும் என்னைத் தடுப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அழித்தே தீர வேண்டும் என்று மக்கள் குமுறி எழும் சுதந்திர நூற்ருண்டு இது.

பதவிப் பித்துக் கொண்டோருக்கும்—பல்வேறு அரசியல் கட்சிகளுக்குமாக இன்று வேட்டைக் காடாக இருந்து வரும் ஒரே ஒரு தேசிய இனம் இஸ்லாமிய இனம் மட்டும்தான். இலங்கையில் இதரதேசிய இனங்களெல்லாம் இரத்த வெறி கொண்டெழுந்திருக்கும் சிங்களக் காட்டாட்சியில் சர்வாதிகாரமான போக்குகளை அரசியல் யூகத்துடன் உணர்ந்துசெயல்பட்டு வேகமாக இயங்கிவருகின்றன. ஆனால் யார் செய்த பாவமோ — இஸ்லாமிய இனம் உருட்டிவிட்ட நெல்லிக் கனியைப் போன்று உரிமையிழந்து சிதறிச் சின்னுபின்னப்பட்டுக் கிடக்கின்றது.

### விஷ விருட்சம்

மக்களுக்கு நிழல்தரும் என்று நினைத்து நடப்பட்ட மரங்களெல்லாம் நாளடைவில் நச்சுச் செடிகளாக மாறி உதட்டைப் பொசுக்கி—குடலைக் கருக்கிடும் கொடிய விஷக்கனிகளைக் கொத்துக் கொத்தாகத் தந்து கொண்டிருக்கின்றன. இதற்குப் பிறகும் மக்கள் அம்மரங்களில் நின்றும் நல்ல கனிகளைப் பறித்துத் தம் உரிமைப் பசியைத் தீர்த்துக்கொள்ள முடியுக் என்று நினைப்பது பேதமையாகும். பொதுப் பணியின் பெயரால் ஓர் சமுதாயத்தின் தலைஎழுத்தைப் பெருங்குணத்துடன் பொறுப்பேற்றிருந்தால், இன்று அந்த இனம் தன் எதிர்கால உரிமையை நினைத்துக் குமுறிக் கொண்டிருக்க வேண்டியதே இல்லை.

துள்ளி விளையாடும் புள்ளிமான், வெறிகொண்ட வேங்கைக்குப் பலியாகும் கொடுமையைத் தடுத்து நிறுத்தும் வல்லமை பெற்று-மக்களைத் தூண்டி 'பொல்லாத ஆட்சியே ஒழிந்து போ' என்று உரிமைக்குரல் கொடுக்கத் துணிவற்றதலைவர்கள், அடக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்லாமியப் பெருமினத்திற்குத் தேவையேயில்லை. அவர்கள் தம் மொழியை, நாகரிகத்தை, பண்பாட்டைக்காத்து உரிமை பெற்று வாழ பதினன்கு லட்சம் கரங்களைப் பெற்ற எமதினம் ஒரே கொடியின் கீழ் வீறிட்டெழட்டும்.

ஒரு நாட்டு மக்களின் வாழ்விலிருந்து அந்நாட்டின் அரசியல் நிலைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். உதாரணமாக அன்றைய ருஷ்ய மக்களின் வாழ்க்கை வேறு, இன்றைய சோவியத் ஒன்றியத்தின் வாழ்க்கை முறை வேறு. அதே போன்றுதான் ஒவ்வொரு நாடுகளிலும். ஓர் நாட்டில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும்போது, அங்கே

**கே. எஸ். ஏ. கபூர்**

மக்களின் வாழ்க்கை முறைகளிலும் மகத்தான பல மாறுபாடுகள் ஏற்படுகின்றன. இதில் சுயநலமும்—இனவெறியும் கொண்ட ஓர் அரசின் செயல் மக்களுக்கு எந்த வகையிலுமே நன்மை பயக்காது. மொழி, வரலாறு, நாகரிகம் போன்ற பல்வேறு வகைகளிலும் வேறுபட்ட ஓர் தேசிய இனத்தாரைப் பெரும்பான்மை என்ற அதிகார பலத்தால் மற்ருேர் தேசிய இனத்தார் துப்பாக்கி முனையால் ஆட்சி செய்கின்ருர்களென்ருல் அதன் பொருள் ஆதிக்கமும் வெறித்தனமும் என்றுதான் ஜனநாயகம் எமக்குப் போதிக்கின்றது.

### புரட்சிக்கு வழி

சிறுபான்மை தேசிய இனத்திற்கு அதிகாரத்தில் பங்கு பெறும் உரிமையை விட்டுக் கொடுக்காது, பெரும்பான்மையினம் ஆதிக்கம் செலுத்துவதைத்தான் மக்கள் வெறுத்து ஒதுக்குகின்றனர்.

இப்படி ஆதிக்க வெறி பிடித்து மக்கள் மீது அரசாள்வோர் கைக்கொள்ளும் ராணுவ தர்பார்களையே சுதந்திர உலகம் அழிவுப் பாதைக்குச் செல்லும் ஓர் நாட்டின் தலைகீழான பயங்கர வரலாற்று மாற்றங்களுக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றது. அதை மக்கள் நியாயமான வழிகளில் எதிர்த்துத் தம் எதிர்காலத் தலையெழுத்தைச் சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்ளக் குரல் எழுப்புவதையே 'புரட்சி', தேசிய இன எழுச்சி' என்றெல்லாம் பெயரிட்டுப் புகழ் பாடுகின்றது. சட்டம், சம்பிரதாயம், ஆயுத பலம் போன்றவைகளால் ஒரு ஏகாதிபத்திய அரசு தன்னை அலங்கரித்துக் கொண்டு காட்டாட்சி நடத்தும் போது, மக்கள் புரட்சி அதன் அதிகார சக்தியில் நின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத் துடித்தெழுவது உலகில் புதிதல்ல. காலம் தன் வரலாற்றில் அடிக்கடி கண்டு அனுபவித்த பாடம் தான் அது.

சில முஸ்லிம் அரசியல் வாதிகள் வேண்டுமென்றே மக்களின் உரிமைப் பிரச்சினைகளை மத அடிப்படையில் பிரித்துக் காட்டி அதற்கேற்ப அப்பிரச்சினைகளின் உருவங்களுக்குச் சாயம் பூசி மக்கள் மத்தியில் வேறுபடுத்திக் காட்டுகின்ருர்கள். தாமும் தலைவன் என்ற பட்டியலில் இடம் பிடிக்கவேண்டும் என்பதற்காகத் தமக்குப் புரியாத—அல்லது புரிந்தும் சமுதாய எழுச்சிக்கு வித்திட எண்ணம் கொள்ளாது குட்டையைக் குழப்பி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்ருர்கள்.

இனம் சிந்திக்கத் தொடங்கிவிடுமானுல் அதன்வேகத்தையும் எழுச்சியையும் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. அதே போன்றே, சிறுபான்மைத் தேசிய இனங்களைத் துப்பாக்கி முனையால் மிரட்டி ஏகாதிபத்திய தர்பார் நடத்தும்ஓர்நாட்டையும்-அதைச் சரி எனக்கொண்டுஅடிமைக் குழிக்குள் தன்னை வீழ்த்திக் கொள்ள எண்ணும் இனத்தையும் சவக்குழிக்கு ஒப்பிட்டுப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டிச் சென்ருன் இத்தாலிய எழுச்சிக்கு வித்தூன்றிய மாஜினி.

### மொழியின் சக்தி

ஓர் நிலப்பரப்புக்குள்ள மக்களை ஒன்றுபடுத்த உதவும் மாபெரும் சக்தி இன உணர்ச்சிக்குரியதே. இதற்கு உதாரணமாக பிரிட்டன், அமெரிக்கா, சுவிஸ்லாந்து, கனடா, மத்திய கிழக்கில் சில நாடுகள் போன்றவைகளையே நாம் எடுத்துக் கொள்ளலாம். செல்ட்ஸ், டியூட்ன்ஸ், டேன்ஸ் போன்ற பல இனங்களின் கூட்டுச் சேர்க்கைதானே இன்றைய ஆங்கில இனம். ஆகவே இந்நாடுகளிலுள்ள மக்கள் இம்மாதிரியான பல்வேறுபட்ட இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒரே மொழிக்குரிய இனத்தவர்கள் நாம் என்ற அவர்களது மொழி உணர்வு அவர்களின் நரம்புகளில் முறுக்கேற்றிக்கொண்டிருக்கின்றது.

மொழிவழி, இனவழி, பிரதேசவழி உணர்ச்சிதான் உண்மைத் தேசிய உணர்ச்சியாகவும் அமையப்பெறுகின்றன. இதைப் பற்றி லக்னே பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆசீர்வாதம் கூறும் போது, மொழிதான் தேசிய இன உணர்ச்சியை உருவாக்குகின்றது; பொதுவான பண்பாட்டு ஒற்றுமையுடன் இணைத்துப் பிணைக்கும் மொழித் தொடர்பில் பிரதேச உணர்ச்சி ஒன்றுபட்டால் யார் விரும்பினுலும்-விரும்பாவிட்டாலும் காலம் மொழி உணர்ச்சியை உருவாக்கித்தரத் தவருது என்றே குறிப்பிட்டுள்ளார்.

### வரலாற்று உண்மைகள்

ஆணவத்தின் விளிம்பிலே நின்றுபேயாட்டமாடும்ஏகாதிபத்திய தனிச்சிங்கள வாதிகள் தெரிந்துகொள்ள வேண்டிய வரலாறுகள் பல இருக்கின்றன. எண்ணூறு ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியில் பேரும்புகழும்கொண்டு அரசியல் சித்தாந்தத்திற்கே ஆணிவேராக நின்ற ஸ்பெயின் உலகில் பெருமையோடு வாழ்ந்த நாடுகளில் ஒன்றுதான். ஆனுல் என்று அது அந்நாட்டுச் சிறுபான்மை இனமான அராபிய தேசிய இனத்திற்குப் புதைகுழி தோண்ட எண்ணியதோ, அன்றே அது தன்மொழியையும் புகழையும் இழந்து கணவனை இழந்த கைம்பெண்ணுகி விட்டது.

கோடிக்கணக்கான யூத மக்களை, வரலாறு காணுத வகையில் கொன்று குவித்து விட்டு, ஜெர்மனிய நாட்டை கட்டி எழுப்ப முயன்ற ஹிட்லரின் சரித்திரத்தை இதற்கிடையில் மறந்துவிட முடியாது.

மாவீரன் நெப்போலியனுல் கட்டிக்காத்து உருவாக்கப்பட்டபிரான்ஸ், அதிகார மமதையால் அந் நாட்டுச் சிறுபான்மைத் தேசிய இனமான கியூஜினெட்ஸ் என்ற மக்களின் உரிமைகளைக்கபளீகரம் செய்ய என்று துணிந்ததோ, அன்றே பிரான்சின் பெருமைகளெல்லாம் பொலபொல வென்று உதிரத் தொடங்கியதை வரலாற்று வரிகள் எடுத்துக் காட்டத் தவறவில்லை. ஆகவே எந்த நாடுகளாக இருந்தாலும் சரியே! என்று அது சிறுபான்மை மக்களை அழித்தொழிக்கும் வெறித்தனத்தைத் தாவுகின்றதோ, அன்றே அம்மக்களால் அதற்குமரணச்சடங்கு நடத்தும் திட்டம் உருவாகும், என்பதைத்தான் இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்கின்ருேம்.


**விரைவில் எதிர்பாருங்கள்**

நிலத்தில் 3,000 மைல்களும்,
நீரில் 2,000 மைல்களும்,
வானத்தில் 10,000 மைல்களும்
பயணம் செய்து

மலேயா, பர்மா,
சிங்கப்பூர், தாய்லாந்து,
பீசித் தீவுகள்

உட்பட தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் சென்று, அந் நாடுகளில் வாழும் தமிழர் நிலையினை நேரில் கண்டு சேகரித்த விபரங்களை விளக்கும் பிரயாணக் கட்டுரை

**"தமிழ் தந்த பயணம்"**

உலகத் தமிழ் மன்றத் தலைவர்
பேராசிரியர்
கா. பொ. இரத்தினம்
எழுதுகிருர்.


## 'இங்குள பேரணி திரள்க'

—தமிழ்க் கொண்டல்—

பொங்கியெழு தமிழ் மகனே! பொங்கி எழு!!
புதியவழி காண்பதற்கே பொங்கி எழு!!!
சிங்கமென தமிழ்மகனே! சிங்கமென
சீறியெழு செகத்தினிலே சீறியெழு
அங்கமெலாம் உணர்ச்சியுடன் அங்கமெலாம்;
ஆண்மையுடன் தமிழ்மகனே பொங்கியெழு
இங்குரிமை பெறவேநீ ஈழந்தன்னில்
ஏறெனவே பொங்கியெழு! இறுதிமூச்சாய்.

செங்குருதி வழியட்டும் செங்குருதி;
சீறி எழு சிறைகளெலாம் நிரம்புமட்டும்
வெங்கனலாய் வெறிகொண்டு வெங்கனலாய்
வீரமுடன் பொங்கிஎழு; வெற்றி வெற்றி
எங்குதமிழ் எழில் மணக்கும் எங்கேயங்கே
எழுகதமிழ் வீரரெலாம் இனத்தைக் காக்க
சங்குகளே முழங்கிடுக சங்கற்பத்தை
சாகுமட்டும் சகத்தினிலே போர்! போர்!! போரே,

தெங்குமூலை மங்கையரே தேறல்பேச்சீர்
தேன்தமிழைக் காத்திடவே திக்கெட்டுமே
உங்களவருடனே நீர் உறுதிகொண்டு
உயிர்தமிழுக்காய் தமிழே உயிராமென்ன
தங்கையரே! தாய்மாரே! தமிழ்க்குடியீர்!
தமிழ்காக்கத் தன்மானம் காக்கநீரும்
பொங்கிடுவீர்! பூமிதனில் பொங்கிடுவீர்!!
புலிகயல், வீற்கொடிவழியீர் பொங்கிடுவீர்!!!

தங்கநிகர் தலைவர் வழி தமிழைக்காக்க
தாரணியில் தலையாய புகழையாக்க
இங்குள பேரணி திரள்க ஒன்ருயின்றே;
ஈழமதில் எழுகதமிழ் எழுகவென்றே
சங்கொலித்தார் சமர் முரசு சாற்றுகின்ருர்
சாவதுமேல்; மானமிலா வாழ்வு வாழ்வா?!
வங்கமுதல் வளம் கண்ட தமிழைக்காக்க
வந்திடுவீர்! வாழ்க தமிழ்! வாழ்க!! வாழ்க!!!

## கல்வியே கருந்தனம்


**'சுதந்திரன்'**
**புதிய சந்தா விபரம்**


தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.


ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

சென்னையில் 25 வாரங்களுக்கு மேல்
ஓடிக்கொண்டிருக்கும்
அதி உன்னத வெற்றிச் சித்திரம்!

# காதலிக்க





# நேரமில்லை

5-வது வாரம்!


கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

மகத்தான 4வது வாரமாக காண்பிக்கப்படுகிறது.

இராமனும் இலக்குமணனும் ஒரே தாயின் பிள்ளைகளல்லர்.
ஆனால் அவர்களின் சகோதர பாசம்......!
பாசத்தின் தத்துவத்தை விளக்கும் உயர்ந்த திரை ஓவியமாக மிளிர்கிறது—

சிவாஜி கணேசன் அளிக்கும்

# படித்தால் மட்டும் போதுமா



நடிகர்கள்:
சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, பாலாஜி,
சகஸ்ரநாமம், ரங்கராவ், ராஜசுலோசனா, மனோரமா

பாடல்கள் : கண்ணதாசன்—இசை : விசுவநாதன்-ராமமூர்த்தி—டைரக்ஷன் : பீம்சிங்

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)
நியூஜோதி (இரத்தினபுரி) லிபர்ட்டி (பதுளை) சுரையா (ராகலை) சென்ட்ரல் (பருத்தித்துறை) ஆனந்தா (கம்பளை)



2வது மகத்தான வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருகோணமலை)
தாஜ்மஹால் (மாத்தளை)

அசோகன்—சந்திரகாந்தா—பாலையா
கண்ணாம்பா—நாகேஷ்—மனோரமா
நடித்த

# இது சத்தியம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்

பின்னணி:
ஈஸ்வரி—சீர்காழி கோவிந்தராஜன்—சௌந்தரராஜன்
ஜானகி—சுசீலா



7வது வெற்றி வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எம். ஜி. ராமச்சந்திரன்
தேவிகா—வீரப்பா
நடித்த

# ஆனந்த ஜோதி

எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
சாவித்திரி, தேவிகா,
சந்திரபாபு, சந்திரகாந்தா
நடித்த

# பந்த பாசம்


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.